# தமிழரசு

மார்ச் 2004





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2035
மாசி – பங்குனி, மார்ச் 2004
மலர் : 35 இதழ் : 9
விலை ரூ.10

முதல் பக்க அட்டை :
கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழா (6-3-2004)

## இந்த இதழில்...


- இந்தியாவிலேயே முதன்முதலாக நவீன வசதிகளுடன் காவல் கட்டுப்பாட்டு மையம் ..... 2
- தமிழகத்தின் வறட்சிநிலை – மத்தியக்குழு ஆய்வு ..... 5
- விவசாயிகளுக்கான வட்டித்தொகை தள்ளுபடி – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை ..... 7
- வேளாண்மைத் தொடு திரை கணினி மையம் ..... 9
- 26 மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பணிகள் ..... 10
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திறந்துவைத்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ..... 11
- வணிகவரித் துறையில் தகவல் பரிமாற்றக் குரல் பதிவுமுறை ..... 13
- அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் ..... 14
- தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் ..... 16
- சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ..... 17
- மகளிர் சுயஉதவிக்குழுக்களின் சாதனைகளை விளக்கும் நூல் ..... 18
- நீலகிரி மாவட்டத்தில் 50 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக உயர்த்தப்பட்டன ..... 19
- தமிழகத்தில் போலியோ ஒழிப்பு நடவடிக்கை ..... 21
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் ..... 23
- பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி, சேலை ..... 25
- கணிதமேதை ஸ்ரீனிவாச இராமானுஜன் திருவுருவச்சிலை ..... 27
- மகாமகம் திருவிழாவையொட்டி மகத்தான கலையரங்கம் ..... 28
- கும்பகோணத்தில் புதிய புறவழிச்சாலை ..... 29
- தேயிலை விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி ..... 30
- புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ..... 31
- தோட்டக்கலைத் துறையின் தொடர் பணிகள் ..... 33
- உங்கள் வலிமையே என் வலிமை! ..... 37
  – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை
- நிதிநிலை அறிக்கை 2004–2005 ..... 45
- விரிவான தரிசுநிலத் திட்டம் ..... 77
- தமிழ்த்தாத்தா உ.வே.சா. நினைவு இல்லம் ..... 80


ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. கனகராஜ், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com



# இந்தியாவிலேயே முதன் முதலாக நவீன வசதிகளுடன் காவல் கட்டுப்பாட்டு மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.2.2004 அன்று சென்னை மாநகரக் காவல் அலுவலக வளாகத்தில், 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில், இந்தியாவிலேயே முதன்முதலாகப் பல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய, புதிய சென்னை மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், இதே நிகழ்ச்சியில் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் முதற்கட்டமாக தெற்கு மண்டலத்தில் 23 பிரிவுகளில் அமைக்கப் பட்டுள்ள மின்ரோந்து முறையினையும் (e Beat System) ஒரு கோடி ரூபாய் மதிப்பில், சென்னை மாநகரின் முக்கிய சந்திப்புகளில் வாகனப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள உட்சுற்று தொலைக்காட்டி அமைப்பையும் (Closed Circuit Television for Junction Monitoring) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

நவீன மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகரின் காவல் பணிகளை கையாளும் வகையில் நவீன வசதிகளுடன் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ள சென்னை மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம், இவ்வகையில் இந்தியாவிலேயே முதன்முதலான காவல் கட்டுப்பாட்டு மையம் ஆகும்.

இந்த நவீன காவல் கட்டுப்பாட்டு மையத்தில், 100 மற்றும் 103 ஆகிய தொலைபேசி எண்களுக்கு வரக்கூடிய பொதுமக்களின் அவசர அழைப்புகளை உடனடியாகப் பதிவு செய்தல், மாநகரத்தின் பல்வேறு பகுதிகளில் ரோந்துப் பணி மேற்கொண்டிருக்கும் ரோந்து வாகனங்களை உடனுக்குடன் தொடர்புகொண்டு அவற்றை அவசரமாக தேவைப்படும் இடங்களுக்கும் குற்ற நிகழ்வு இடங்களுக்கும் அனுப்பி வைத்தல் ஆகிய பணிகள் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் ஏற்கெனவே தொடங்கிவைக்கப்பட்டு தற்போது செயல்பாட்டில் உள்ள இடர்ப்பாட்டுக்கு உள்ளாகும் பெண்கள் மற்றும் சிறார் உதவி இணைப்புகளில் ( முறையே தொலைபேசி எண் 1091 மற்றும் 1098 ) பெறப்படும் அவசர அழைப்புகளையும், போக்குவரத்து இடர்ப்பாடுகள் குறித்த அவசர அழைப்புகளையும், ஏற்று உடனடியாகச் செயல்பட இந்த மையத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.




இதுவன்றி, புதிய மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம் கையாள உள்ள

1. பொதுமக்கள் புகார் மற்றும் தகவல் தெரிவிக்க சிறப்புத் தொலைபேசி உதவி இணைப்பு.

2. இடர்ப்பாட்டிற்கு உள்ளாகும் முதியோர் புகார் தெரிவிக்க தனித் தொலைபேசி உதவி இணைப்பு.

3. காற்று மாசு மற்றும் ஒலி மாசு குறித்த புகார்களைத் தெரிவிக்க பசுமைத் தொலைபேசி உதவி இணைப்பு. ( இந்த இணைப்புகளுடனும் தொடர்பு கொண்டு பேச தொலைபேசிக் கட்டணம் கிடையாது ) மற்றும்

4. ரோந்து வாகனம் எங்குள்ளது என்பதை அறிய வகை செய்யும் (Automatic Vehicle Location) மோடம் கருவிகளை 50 ரோந்துவாகனங்களில் பொருத்தியும், மேலும் 10 வாகனங்களை உடன் தேவைப்படும் குறிப்பட்ட பணிகளுக்காகத் தயார் நிலையில் வைத்திருத்தல் ஆகிய மேலும் நான்கு புதிய சிறப்பு வசதிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்தப் பணிகள் அனைத்தையும் மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தும்.

## மின்ரோந்து முறை (e Beat System)

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 18.2.2004 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ள புதிய e Beat System மின்னியல் ரோந்து முறையில், தற்போது ரோந்துப் பணி மேற்கொள்ளும் காவலர்கள், ஆங்காங்கு வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும் வைக்கப்பட்டுள்ள பட்டா புத்தகங்களில் கையொப்பம் இட்டு, தாங்கள் ரோந்து மேற்கொண்டதைப் பதிவு செய்கின்ற பழைய முறை முற்றிலுமாக நீக்கப்படும்.

மின்ரோந்து முறையில் ரோந்துப் பணியைப் பதிவு செய்திட முக்கிய இடங்களில் சுவர்கள் மீது மின்னியல் சில்லு electronic chip நிறுவப்படும். ரோந்துப் பணி மேற்கொள்ளும் காவலர்களுக்கு ரீடர் என்னும் சாதனம் வழங்கப்படும். இந்த ரீடர் சாதனம், 6 அங்குலத்திற்குள்ளாக வரும்போது ரோந்துக் காவல் சோதனை மேற்கொண்ட இடம் மற்றும் நேரம் ஆகியவற்றை மின்னியல் சில் பதிவு செய்துகொள்ளும்.

இந்தப் புதிய முறை ரோந்துப் பணி விவரங்களை உடனடியாக அறிய இயலுவதோடு, குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளப் பேருதவியாக அமையும். இந்தப் புதிய மின்னியல் ரோந்து முறை, முதற்கட்டமாக தெற்கு மண்டலத்தில் 23 பிரிவுகளில் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது. மாவட்டக் காவல் கட்டுப்பாட்டு மையத்திலிருந்து இந்தப் புதிய முறை கண்காணிக்கப்படும்.

## உட்சுற்று தொலைக்காட்சி அமைப்பு மூலம் சாலைச் சந்திப்புகளில் வாகனப் போக்குவரத்தைக் கண்காணித்தல் (Closed Circuit Television for Junction Monitoring)

சென்னை மாநக்ரில் பெருகி வரும் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி ஓட்டுநர்கள் சாலை விதிகளை மீறாமல் தங்களது வாகனங்களை ஓட்ட வேண்டும் என்ற உணர்வைப் பெறும் வகையில் இந்தியாவிலேயே முதன் முதலாக, சென்னை மாநகரில் முக்கிய சந்திப்புகளில் உட்சுற்றுத் தொலைக்காட்சி (Closed Circuit Television) மூலமாக வாகனப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் முறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18–2–2004 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அண்ணா சாலையில் ஸ்பென்சர், எல்டாம்ஸ் சாலை, அண்ணா மேம்பாலம், நந்தனம் சந்திப்புகள், ஈ.வெ.ரா. சாலையில் சென்ட்ரல் ரயில் நிலையம், ஈகா திரையரங்கு, கோயம்பேடு சந்திப்புகள், காமராஜர் சாலையில் காந்தி சிலை சந்திப்பு ஆகிய எட்டு முக்கிய சாலைச் சந்திப்புகளில் நவீன உட்சுற்று தொலைக்காட்சி அமைப்பு நிறுவப்படுகிறது. ஒவ்வொரு சந்திப்பிலும் அதன் தேவைக்கேற்ப மொத்தம் 4 அல்லது 5 ஒளிப்பதிவு சாதனங்கள் (camera) நிறுவப்படும். இவற்றில், ஓர் ஒளிப்பதிவுக்கருவி, அகன்ற, எப்பக்கமும் திரும்பக் கூடிய, தூரநோக்கு வசதி உடைய ஒளிப்பதிவு சாதனமாக (Pan, Tilt and Zoom - PTZ Camera) இருக்கும்.

இதன் மூலம், இந்த எல்லாச் சந்திப்புகளிலும் வாகனங்களின் போக்குவரத்து நேரடியாக ஒளிப்பதிவு செய்யப்படும். இந்தப் பதிவுகள், 2 Mbps ( 2 million bytes per second) - ஒரு விநாடிக்கு 20 இலட்சம் துடிப்பு ) கொண்ட இணைப்பு மூலமாக, கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பப்பட்டு தொடர்ச்சியாக இந்த ஒளிப்பதிவு விவரங்கள் கண்காணிக்கப்படும். மேலும், ஒரே நேரத்தில் இந்த 8 சந்திப்புகளிலும் வாகனப் போக்குவரத்தைக் கண்காணித்திட இயலும். சென்னை மாநகரக் காவல் ஆணையரும் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளும் தங்களது கணினி மூலம் இதனை மேற்பார்வையிடும் வகையில் இந்த அமைப்பு இணையதளத்தில் இணைக்கப்படும்.

இந்தச் சந்திப்புகளில் சாலை விதிகளை மீறிச் செல்பவர்களைப் பற்றி உட்சுற்று தொலைக்காட்சி ஒளிப்பதிவு வாயிலாக அறிந்து, ஏற்கெனவே போக்குவரத்துக் காவல் அலுவலகத்தில் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ள 55 இலட்சங்களுக்கும் மேலான முகவரிகளைக் கொண்ட வாகன விவர வங்கி (Vehicle Data Bank) உதவியுடன் அவர்களைப் பற்றிய முழு விவரம் எடுக்கப்பட்டு, குற்றப்பதிவு, அஞ்சல் மூலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதால், வாகன ஓட்டுநர்கள் சாலை விதிகளை மதித்து நடக்க, இந்த அமைப்பு சிறப்பாக உதவும்.

உட்சுற்று தொலைக்காட்சி மூலம் மாநகரச் சாலைச் சந்திப்பு போக்குவரத்தைக் கண்காணிக்கும் இந்த அமைப்பையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ள நவீன மாநகரக் காவல் கட்டுப்பாட்டு மையம் ஒருங்கிணைத்து செயல்படுத்தும்.

★ ★ ★



# தமிழகத்தின் வறட்சி நிலை - மத்தியக்குழு ஆய்வு

மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி சூழ்நிலை குறித்த விரிவான அறிக்கை ஒன்றினை மாநில அரசு தயார் செய்து மத்திய அரசிற்கு அனுப்பி வைத்தது. இந்த அறிக்கையில் ரூ.1,584 கோடியை தேசிய பேரழிவு நிவாரண நிதியிலிருந்து வழங்க வேண்டுமென்றும் மேலும் உணவுக்கு வேலை திட்டத்திற்காக 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது.

அதே போல சென்னை மாநகரில் நிலவி வரும் கடுமையான குடிநீர் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் விதத்தில் தமிழக அரசு ரூ.700 கோடி நிதியுதவி கேட்டு தனியாக மற்றொரு அறிக்கை மத்திய அரசிற்குச் சமர்ப்பித்தது. இது தொடர்பாக தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிப்பட்ட முறையில் பிரதமர், துணைப்பிரதமர் ஆகியோருக்கும் கடிதம் எழுதியிருந்தார்கள்.

மேலும் இந்த உதவித் தொகைகளை உடனடியாக வழங்க வேண்டுமென்று துணைப்பிரதமர் அவர்களிடம் தனியாக மேலும் ஒரு அறிக்கையை வழங்கினார்கள்.

தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று மத்திய அரசு பல்வேறு துறைகளைச் சார்ந்த உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை மாநிலத்தில் நிலவி வரும் வறட்சி நிலை குறித்து ஆராய அனுப்பியது. இந்தக் குழுவினர் 20.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்கள்.

என்.சி.டி.சி. நிருவாக இயக்குநர் திரு. தினேஷ் ராய் தலைமையிலான இந்தக் குழுவில், புதுடெல்லி மத்திய கிராமப்புற வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புத்துறை கூடுதல் ஆலோசகர் திரு. சி.கணபதி, நகர்ப்புற மேம்பாட்டுத்துறை உதவி ஆலோசகர் திரு. எம்.எஸ். நாராயணன், மத்திய வேளாண்மைத் துறையைச் சார்ந்த பயிர்கள் துறை இயக்குநர் (சாஸ்திரி பவன், சென்னை) திரு. கே.மனோகரன், புதுடெல்லி கிராமப்புற மேம்பாட்டு துறையின் சார்பு செயலாளர் (எஸ்.ஜி.ஆர்.ஒய்.) திரு.கே.விவேகானந்த், மத்திய திட்டக்குழு ஆராய்ச்சி அலுவலர் திரு. ஜிதேஷ் ஜான், கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் (சி.சி.பி.எஃப், சென்னை) டாக்டர் ஏ.கே.சி.பட்னாயக், மத்திய தோட்டக் கலைத் துறை துணை ஆணையாளர் திருமதி. லில்லி மித்ரா ஆகியோர் 20.2.2004 அன்று சென்னை வந்தனர். இக்குழுவினர் மாநில அரசின் உயரதிகாரிகளுடன் இணைந்து மூன்று குழுக்களாகப் பிரிந்து சென்று வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை ஆய்வு செய்தனர்.

முதல் குழு சென்னை, திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களிலும், இரண்டாவது குழு நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை

மாவட்டங்களிலும், மூன்றாவது குழு தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொண்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் கடந்த 2000–2001 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளில் மழையளவு குறைந்துள்ளதை விரிவாக தம்மை சந்தித்த மத்தியக் குழுவினரிடம் விளக்கினார்கள். கடந்த 2002–ஆம் ஆண்டு மாநிலம் கடுமையான மழையின்மையால் இதுவரை சந்தித்திராத அளவிற்குக் கடுமையான வறட்சியை சந்தித்தது.

கடந்த 2003–ஆம் ஆண்டும் தென்மேற்குப் பருவ மழை 9 மாவட்டங்களில் குறைந்த அளவே மழைப்பொழிவு இருந்துள்ளது. மேலும் வட கிழக்குப் பருவமழைக் காலங்களிலும் 11 மாவட்டங்கள் பெற்ற மழையளவு பற்றாக் குறையாகவே இருந்துள்ளதை சுட்டிக்காட்டினார்கள். கடந்த காலங்களில் தொடர்ந்து ஏற்பட்ட மழைப் பொழிவு பற்றாக்குறையின் காரணமாக பூமியில் நீர் மட்டம் வெகு வேகமாகக் குறைந்துள்ளது.

மாநிலத்திலுள்ள 16 மிகப்பெரிய நீர்த்தேக்க நிலையங்களில் கடந்த ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தற்போது 13 மிகப்பெரிய நீர்த்தேக்க நிலையங்களில் உள்ள நீரின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்தியக் குழுவினரிடம் சுட்டிக் காட்டினார்கள்.

மேலும் மாநிலத்தில் 90 சதவிகித ஏரிகள் மற்றும் குளங்கள் வறண்டு போனதையும் சுட்டிக் காட்டினார்கள். அதே போல கர்நாடக மாநிலம் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததால் ஏற்பட்டுள்ள மோசமான சூழ்நிலையும் விவசாய விளை பொருட்கள் மற்றும் கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஆகியவற்றின் சூழ்நிலைகளுக்கும் காரணம் என்பதை விளக்கினார்கள்.

ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை பயிரிடப்படும் குறுவை நெல் சாகுபடியை டெல்டா பகுதி விவசாயிகள் தொடங்க முடியாமல் உள்ளனர். அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை பயிரிடப்படும் சம்பா சாகுபடி நிலப்பரப்பில் வழக்கமாக பயிரிடப்படும் 14 இலட்சம் எக்டேரில் பயிரிட முடியாமல் நடப்பாண்டில் 9.516 இலட்சம் எக்டேரில் தான் சம்பா சாகுபடி பணி நடைபெற்று வருகிறது.

மேலும் 13.88 இலட்சம் தென்னை மரங்கள் முழுவதுமாக பாதிப்புக்குள்ளாகியுள்ளன. மேலும் 22.44 இலட்சம் தென்னை மரங்கள் ஓரளவு பாதிப்புக்குள்ளாகி யுள்ளன. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையில் ஏற்பட்டுள்ள உற்பத்தி இழப்பு மொத்தம் ரூ.3,795.25 கோடி. வேளாண்மைத்துறையில் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் 1,969 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மாநில அரசு வறட்சியின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழகத்திலுள்ள 29 மாவட்டங்களில் சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த பகுதியாக அறிவித்துள்ளது. இதன் மூலம் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா மற்றும் குடிநீர் வழங்கல் பணிகள் ஆகிய சிறப்புத் திட்டங்கள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்க இது வழி வகை செய்துள்ளது.

மேலும் மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சியின் காரணமாக 1413 பசலி ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர் வரி மற்றும் உள்ளூர் மேல்தலவரி ஆகியவற்றையும் அரசு ரத்து செய்துள்ளதையும் மத்திய வறட்சிக் குழுவிடம் தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும் மாநில அரசு வறட்சியை சமாளிக்க எடுத்து வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்து மத்தியக் குழுவினரிடம் விவரமாக விளக்கிக் கூறினார்கள்.

மேலும் மாநிலத்தில் நிலவி வரும் கடுமையான வறட்சி சூழ்நிலையை கவனமாக முழுவதுமாக ஆராய்ந்து மத்திய அரசிற்கு உண்மையான தெளிவான நிலையை எடுத்துரைக்கும் அறிக்கையை அளிக்குமாறு மத்திய ஆய்வுக் குழுவை தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அப்போதுதான் மாநிலத்திற்குத் தேவையான முறையான நிவாரண உதவி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்றும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் மத்திய வறட்சி நிவாரணக் குழுவின் தலைவர் திரு. தினேஷ் ராய் தங்களுடைய ஆய்வு முடிந்தவுடன் உடனடியாக அறிக்கை மத்திய அரசிற்குச் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த ஆலோசனையின் போது மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு நிதி மற்றும் உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையர் வருவாய் நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை செயலாளர், வேளாண்மைத்துறை செயலாளர், வருவாய்த்துறை செயலாளர் ஆகியோர் உடனிருந்தனர். இக்குழு 21, 22 ஆகிய தேதிகளில் 11 மாவட்டங்களில் ஆய்வுப் பணியை மேற்கொண்டது. ★

# விவசாயிகளுக்கான வட்டித்தொகை தள்ளுபடி

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளின் நலன் கருதி, நடப்பு குறுவை மற்றும் சம்பா பருவத்தில் குறுகிய காலக் கடனுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டித் தொகையான 62 கோடி ரூபாயை முழுமையாகத் தள்ளுபடி செய்து 29.2.2004 அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உன்னதத் தொழிலான உழவுத் தொழில் செய்துவரும் விவசாயிகள் மீது தனி அன்பும், அக்கறையும் கொண்டு அவர்களது நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டுவதுடன், சலுகைகளையும் வழங்கி வருகிறார்கள்.

பருவ மழை தொடர்ந்து பெய்யாததாலும், கர்நாடக மாநிலத்தின் மனிதாபிமானமற்ற பிடிவாதத்தால் காவேரி நீர் கிடைக்கப் பெறாததாலும், தங்களது உழைப்பு வீணாகி, உற்பத்திச் சேதம், வருவாய் இழப்பு எனக் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளான தமிழக விவசாயிகள் மீது உள்ள அக்கறையின் காரணமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடந்த 2001 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஜுன் 2001 இல் 310 கோடி ரூபாய் அளவுக்கு கூட்டுறவுக் கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டார்கள். 10 இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் 2002 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை கொண்டாட 21 கோடி ரூபாய் மதிப்பிலான பரிசுப் பைகளை வழங்கினார்கள். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முதலில் இலவச மதிய உணவு வழங்கியதுடன், பின்னர் அவர்களது வேண்டுகோளைக் கனிவுடன் பரிசீலித்து, மாதம் ஒன்றுக்கு 30 கிலோ வீதம் இலவச அரிசி வழங்கினார்கள். மேலும், விவசாயிகளுக்கு 323.56 கோடி ரூபாய் பயிர் இழப்பீட்டுத் தொகையாக ஒதுக்கீடு செய்து வழங்கினார்கள்.

வறட்சியின் கொடுமையிலிருந்து விவசாயிகளைக் காக்கும் பொருட்டு சென்னையை தவிர்த்த மற்ற 28 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். தமிழ்நாடு முழுவதும் சென்ற பசலி ஆண்டுக்கான நிலவரி, உள்ளூர்த் தல வரி, உள்ளூர்த் தல மேல் வரி ஆகிய வரிகள் அனைத்தையும் முழுமையாகத் தள்ளுபடி செய்து, அதனால் ஏற்படும் 50 கோடி ரூபாய் இழப்பை அரசே ஏற்றுக்கொள்ள ஆணையிட்டார்கள். மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்கள் பெற்றிருந்த கூட்டுறவுக் கடன்கள் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்து 61 கோடியே 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து வழங்கினார்கள்.



கூட்டுறவு வங்கிகளில் பெற்ற கடன்கள் மீதான வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது, குறுவை மற்றும் சம்பா பருவங்களில் அனைத்து விவசாயிகளும் கூட்டுறவு வங்கியில் இருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

★ ★ ★

வறட்சி நிவாரணப் பணிகளை நிறைவேற்ற, முன் எப்போதும் விட, மிக அதிகமாக 332.09 கோடி ரூபாய் தொகையை மத்திய அரசிடமிருந்து நிவாரண உதவியாகப் பெற்றதுடன், அதற்கும் மேலாக மாநில அரசு மூலம் மேலும் 335.45 கோடி ரூபாய் வழங்கி மொத்தம் 667.54 கோடி ரூபாய் மதிப்பில் 1.4.2002 முதல் 31.12.2003 வரை துயர் துடைப்புப் பணிகளை மேற்கொண்டார்கள்.

கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து பருவ மழை பொய்த்ததாலும், காவேரித் தண்ணீரை கர்நாடக மாநிலம் தர மறுத்து வரும் நிலையிலும், பாதிப்புக்கு உள்ளான விவசாயிகள் நலனுக்காக, ஜூலை 2003 முதல் ஜூன் 2004 வரையுள்ள நடப்புப் பசலி ஆண்டுக்கு அனைத்து மாவட்டங்களிலும் நில வரி முழுவதையும் தள்ளுபடி செய்து ஆணையிட்டதுடன், உள்ளூர்த் தல வரி, உள்ளூர்த் தல மேல் வரி ஆகியவற்றையும் தள்ளுபடி செய்து கடந்த 10.2.2004 அன்று சட்டப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஆற்றிய பதிலுரையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார்கள். சென்னை தவிர இதர 29 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களாக அறிவித்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழக விவசாயிகள் 2002–03 ஆம் ஆண்டில் பெற்ற 250 கோடி ரூபாய் அளவிலான குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள்.

வறட்சியின் பிடியில் சிக்கி அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் இன்னல்களை களைந்து, இடர்களை நீக்கிடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நடப்பு குறுவை மற்றும் சம்பா பருவங்களில் கூட்டுறவு வங்கிகளில் இருந்து விவசாயிகள் பெற்ற குறுகிய காலக் கடன் தொகைக்கான வட்டித் தொகை 62 கோடி ரூபாயை தள்ளுபடி செய்து 29.2.2004 அன்று ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் 6 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

கடந்த 2002 குறுவைப் பட்டத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகள்

## இரத்தினக் கவசம்

கவச ஆடைக்குள் இறந்து போனவர்களின் உடலை வைத்துப் புதைப்பது பண்டைய சீனர்களின் பழக்கம். கி.மு.104 ஆம் ஆண்டு இறந்த சீன இளவரசி டோவான் என்பவரின் உடலையும், கி.மு. 113 ஆம் ஆண்டு இறந்த இந்த இளவரசியின் கணவன் லூஷெங் என்பவரின் உடலையும் கவச ஆடைக்குள் வைத்துப் புதைத்துள்ளனர். இந்தக் கவச ஆடைகள் வெறும் உலோகத்தால் ஆனதல்ல. ஜேட் என்னும் ஒரு வகை விலை உயர்ந்த ரத்தின கற்களால் வேயப்பட்டது. பல வண்ண நிறமுடைய இந்தக் கற்களை தங்க நூல் கொண்டு கோர்த்தார்களாம். கணவன்-மனைவி இருவரது உடல்களையும் அருகருகே வைத்துப் புதைத்துள்ளனர். 1968ஆம் ஆண்டு இந்தச் சவப்பெட்டிகளைத் தோண்டி எடுத்தபோது, "ஜேட்" கற்களும், தங்கமும் அப்படியே இருந்தனவாம். ஆனால் அந்த இளவரசன், இளவரசியின் உடல்கள் மக்கி மண்ணாகியிருந்தன.

❖ ❖ ❖

# வேளாண்மைத் தொடுதிரை கணினி மையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனத்தின் (Indian Farmers Fertilizer Co-operative Limited IFFCO) சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள



வேளாண்மைத் தொடுதிரை கணினி மையங்களைத் (IFFCO - Touch Screen Agri Portal Kiosks) திறந்து வைத்தார்கள்.


'இப்கோ' – IFFCO என்று அழைக்கப்படும் இந்திய உழவர் உரக் கூட்டுறவு நிறுவனம், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு பாடுபடும் தேசிய அளவிலான நிறுவனம் ஆகும். இப்கோ நிறுவனத்தின் சார்பில், தமிழக விவசாயிகள் விவசாய உயர் தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் முதற்கட்டமாக தமிழகத்தில் உள்ள 5 கிராமக் கூட்டுறவு சங்கங்களில் அமைக்கப்படும் வேளாண்மைத் தொடுதிரை கணினி மையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தொடங்கி வைத்தார்கள்.

இந்த வேளாண்மைத் தொடுதிரை கணினி மூலம், நேரடியாகவும், தொடர்புடைய இணைய தளங்களுக்குள் சென்றும் தமிழகத்தில் பயிரிடப்படும் 118 பயிர்கள் பற்றிய விவரங்கள், ரகங்கள், நிலத்தை நேர்த்தி செய்து விதைத்தல், ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு, நீர் நிர்வாகம், அறுவடை தொடர்பான ஆலோசனைகள், குறிப்புகள் ஆகிய விவரங்களையும், பயிர்களுக்குத் தேவையான உரச் சத்துக்கள், அவற்றின் பயன்கள், பயிர்க் குறைபாடுகளின் அறிகுறிகள், அவற்றைச் சீர்செய்வதற்கு உரிய உரத்தைத் தேர்வு செய்யும் முறைகள் ஆகியவற்றையும் விவசாயிகள் அறிந்து கொள்ள முடியும்.

இந்த நிகழ்வின்போது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.ப.அண்ணாவி, தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன் இ.ஆ.ப., வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., இப்கோ நிறுவனத்தின் தலைவர் திரு.கே.சீனிவாச கவுடா, விற்பனை இயக்குநர் திரு.டி.கே.பட் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖



# 26 மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பணிகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழகத்தின் 26 மாவட்டங்களில் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில், மொத்தம் 1,388 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள 89,574 பணிகளைத் திறந்து வைத்து, மொத்தம் 1,012 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவுள்ள 12,156 பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாகச் சென்று, அந்தந்த மாவட்டங்களில் நிறைவேற்றி முடிக்கப்பட்ட திட்டப் பணிகளையும், கட்டடங்களையும் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, அங்குள்ள மக்களை நேரில் சந்தித்து, அவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இலட்சியப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள். முதன் முதலாக தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் 15.4.2002 அன்று நடைபெற்ற அரசு விழாவில் பங்கேற்று தேனி மாவட்ட மக்களுக்கு 140 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை வழங்கினார்கள். தொடர்ந்து 9.2.2004 அன்று வரை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நேரில் சென்று, 32 அரசு விழாக்களில் பங்கேற்று, புதிதாக கிருஷ்ணகிரி மாவட்டத்தைத் தொடங்கி வைத்து, மொத்தம் 3,030 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 1 இலட்சத்து 43 ஆயிரத்து 98 பணிகளைத் திறந்து வைத்தார்கள். மொத்தம் 4,263 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 91 ஆயிரத்து 122 பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், இந்த எல்லா மாவட்டங்களிலும் உள்ள 5 இலட்சத்து 31 ஆயிரத்து 784 பயனாளிகளுக்கு 326 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கினார்கள்.

இதனைத் தொடர்ந்து, 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, திருவள்ளூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 26 மாவட்டங்களிலும் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள 1,388 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 89 ஆயிரத்து 574 பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். மேலும், இந்த அனைத்து மாவட்டங்களிலும் நிறைவேற்றப்படவுள்ள மொத்தம் 1,012 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 12 ஆயிரத்து 516 பணிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்வின் போது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் மற்றும் அனைத்து அரசுத் துறைச் செயலாளர்கள் உடன் இருந்தனர். ★

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திறந்துவைத்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்




**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.2.2004 அன்று சென்னை மாநகரக் காவல் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்துவைத்தார்கள்.

இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மகளிருக்கு எதிரான குற்றங்களை முனைப்புடன் தடுப்பதற்காக, 1992–ஆம் ஆண்டில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தித் தொடங்கி வைத்தார்கள். உலக அளவில் பாராட்டுப் பெற்ற இத்தகைய அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தமிழகத்தில் இதுவரை 148 இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 18.2.2004 அன்று சென்னை மாநகரக் காவல் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சென்னை மாநகரக் காவல்கட்டுப்பாட்டு மையத் தொடக்கவிழா நிகழ்ச்சியில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் செயல்படவுள்ள 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் திறந்துவைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்துவைத்துள்ள அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் வருமாறு :–

சென்னை மாநகரம் – ராயபுரம், திருமங்கலம், திருவல்லிக்கேணி, கீழ்ப்பாக்கம், மயிலாப்பூர், சைதாப்பேட்டை, துறைமுகம், மகாகவி பாரதிநகர், வில்லிவாக்கம், திருவொற்றியூர், கிண்டி

- ★ திருச்சி மாநகர் – பொன்மலை
- ★ காஞ்சிபுரம் – மாமல்லபுரம்
- ★ விழுப்புரம் – கோட்டக்குப்பம்
- ★ நாமக்கல் – வேலூர்
- ★ கோயம்புத்தூர் – பல்லடம்
- ★ செங்கல்பட்டு – அம்பத்தூர், மாதவரம்
- ★ திருவாரூர் – பொன்னேரி
- ★ கடலூர் – சேத்தியாத்தோப்பு
- ★ தருமபுரி – பென்னாகரம்
- ★ ஈரோடு – பவானி, சத்தியமங்கலம்


★ நீலகிரி – உதகமண்டலம் ★ திருச்சி –மணப்பாறை (ஊரகம்), தேவலா
★ புதுக்கோட்டை – ஆலங்குடி ★ தஞ்சாவூர் – வல்லம்
★ திருவாரூர் – நன்னிலம் ★ மதுரை – திருமங்கலம்
★ விருதுநகர் – சாத்தூர், திருவில்லிபுத்தூர்
★ திண்டுக்கல் – ஒட்டன்சத்திரம்
★ தேனி – உத்தமபாளையம்
★ இராமநாதபுரம் – திருவாடானை, இராமேஸ்வரம்
★ சிவகங்கை – தேவகோட்டை
★ திருநெல்வேலி – திருநெல்வேலி (ஊரகம்), நாங்குநேரி
★ தூத்துக்குடி –விளாத்திகுளம்

பாதிப்புக்கு உள்ளாகும் பெண்கள் பயமோ, தயக்கமோ இன்றித் தங்களது குறைகளை எடுத்துக்கூறி அவற்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக, தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் காவல் உட்கோட்டங்களிலும், ஒரு காவல் உட்கோட்டத்திற்கு ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படும் என்று கடந்த 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

இதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்த 40 அனைத்து மகளிர் காவல் நிலையங் களுடன் தற்போது தமிழ்நாட்டில் 188 காவல் உட்கோட்டங் களிலும் ஒரு காவல் உட்கோட்டத்திற்கு ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என 188 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

● ● ●

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட
## "சர்க்கரைத் தொழிலில் நிருவாகச் சவால்கள்" - நூல்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 23.2.2004 அன்று சென்னையில், மாநிலத் தேர்தல் ஆணையர் டாக்டர் வி. பழனிச்சாமி அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "சர்க்கரைத் தொழிலில் நிருவாகச் சவால்கள்'' (Administrative challenges in Sugar Industry) எனும் நூலை வெளியிட்டார்கள்.

மாநிலத் தேர்தல் ஆணையராக பணியாற்றி வரும் டாக்டர் வி. பழனிச்சாமி தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், சர்க்கரைத் துறையின் ஆணையராகவும், பணியாற்றிய காலத்தில் கொள்கைகளை வகுப்பதிலும், அவற்றை செயலாக்குவதிலும் பெற்ற சிறப்பான அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சி மேற்கொண்டார். அப்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை நூல் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. தனியார் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கான கொள்கை, நிருவாகம், அமைப்பு மற்றும் செயலாக்கம் ஆகியவை குறித்து விரிவாக இந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும், நலிந்த சர்க்கரை ஆலைகளுக்கு மறுவாழ்வு அளிப்பதுடன், மற்றுமுள்ள சர்க்கரை ஆலைகளை நவீனப்படுத்துவது, மாற்றுப் பணி மேற்கொள்வது ஆகியவை குறித்தும் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.


டாக்டர் வி. பழனிச்சாமி அவர்களின் "சர்க்கரைத் தொழிலில் நிருவாகச் சவால்கள்'' (Administrative challenges in Sugar Industry) நூலை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவரது அறிவார்ந்த முயற்சிக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

★ ★ ★

# வணிகவரித் துறையில் தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் தொடங்கிவைத்தார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், வணிகவரித்துறையின் பல்வேறு அலுவலகங்களின் பயன்பாட்டிற்காக, 1 கோடியே 25 இலட்ச ரூபாய் மதிப்பில் வாங்கப்பட்டுள்ள 36 புதிய வாகனங்களை நேரில் வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த புதிய வாகனங்களின் ஓட்டுநர்களிடம், அவர்களது வாகனங்களுக்குரிய சாவிகளை வழங்கினார்கள்.



இதனை அடுத்து, வணிகவரித்துறையில் 2002–2003 ஆம் ஆண்டில் சிறப்பாகப் பணியாற்றிய வணிகவரி அலுவலர் திரு.இல.செல்லதுரை, துணை வணிகவரி அலுவலர் திரு.சையது அலி அகமது, செயலாக்கப் பிரிவு துணை வணிகவரி அலுவலர் திரு.வ.கலியமூர்த்தி, உதவி வணிகவரி அலுவலர் திரு.சி.முத்து ஆகியோருக்கு தலா ரூ.25,000 ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, சென்னை, கோவை, திருநெல்வேலி, வேலூர், சேலம், திருச்சி ஆகிய வரிவிதிப்பு வட்டங்களைச்



சேர்ந்த தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் 38 நபர்களின் குடும்பங்களுக்கு குடும்ப நல உதவியாக தலா 20,000 ரூபாயும், 2 உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவியாக தலா 25,000 ரூபாயும் ஆக மொத்தம் 8 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதி உதவியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்.

மேலும், இதே நிகழ்ச்சியில், பொதுமக்கள் தொலைபேசி மூலம் தெரிவிக்கின்ற வரி ஏய்ப்பு குறித்த ரகசியத் தகவல்கள், ஆலோசனைகள், குறைகள் மற்றும் புகார்களைப் பெற்று அதன் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வகைசெய்யும் தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறையினையும் (Interactive Voice Recording System) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். வரி ஏய்ப்பு குறித்த ரகசியத் தகவல்களை கமுக்கமாக வழங்குகின்ற இந்த திட்டம் முதன் முறையாக தற்போதுதான் தொடங்கப்படுகிறது. இந்தத் தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை சென்னை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் இயங்கும். இதற்கான தொலைபேசி எண்.044–28520535 ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தத் தொலைபேசி எண்ணுடன்தொடர்பு கொண்டு இந்த தகவல் பரிமாற்றக் குரல் பதிவு முறை சிறப்புடன் செயல்பட வாழ்த்தி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வின் போது, மாண்புமிகு வணிகவரி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செ.ம.வேலுச்சாமி, வணிகவரித் துறைச் செயலாளர் திரு.எஸ்.ராஜரத்தினம், இ.ஆ.ப., வணிகவரித்துறை ஆணையர் திரு. எம்.அபுல்ஹசன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தனர்.



அடிப்படையில் யூனிட் ஒன்றுக்கு 20 காசு அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை விருப்புரிமை அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு 1 குதிரை விசைப் பம்பு செட்டிற்கு 250/– ரூபாய் வீதம் என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயித்தது. இதன் அடிப்படையில் ஒவ்வொரு விவசாயியும் இந்தக் கட்டணத் தொகையை இரண்டாகப் பிரித்து 6 மாதத்திற்கு ஒரு முறை கட்ட வேண்டும் என்று ஆணையிட்டது.

முந்தைய தி.மு.க. அரசு நிதி நிலைமையை மிகவும் சீர்கேடான நிலையில் விட்டுச் சென்ற போதிலும், கூடுதல் நிதிச் சுமையை ஏற்க இயலாத நிலையிலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்காவது எந்தவித பாதிப்பும் இல்லாத வகையில், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள கட்டணங்களை சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்தும் வகையில் இந்த அரசே

# அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை
(18.2.2004)

**வி**வசாயிகளின் நலனில் எனது அரசு எப்பொழுதுமே மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. 1998–ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதிய சட்டத்தை மைய அரசு இயற்றியது. இந்தச்சட்டத்தின் கீழ் முந்தைய தி.மு.க. அரசு 17.3.1999 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தைத் தோற்று வித்தது. அதன் பின்னர், சட்டப்படியாக பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப் படும் கட்டணத்தை சராசரி செலவு அடிப்படையில் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் மட்டுமே நிர்ணயிக்க இயலும்.

2001–ஆம் ஆண்டு மார்ச் திங்கள், முந்தைய தி.மு.க. அரசு துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ( Accelerated Power Development Programme) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கான நிதி உதவியைப் பெற்றதால், வேறு வழியின்றி இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துக்களை நிறைவேற்றும் கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டது.

கடந்த தி.மு.க.அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 2003–ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் தேதி முதல் செயல்படுத்தும்படியான மின் கட்டண விகித ஆணையை பிறப்பித்தது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சிறு மற்றும் குறு விவசாயிகள் உட்பட அனைத்து பயனீட்டாளர்களுக்கும் கட்டணம் விதித்து ஆணை பிறப்பித்தது. அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களது பயனீட்டின்

நேரடியாக அவர்களுக்குப் பண அஞ்சல் வாயிலாக பண உதவி அளித்து வருகிறது. இதனால், அவர்களுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைத்து வருகிறது.

இவ்வாறாக 3 குதிரை விசைப் பம்பு செட்டினைப் பயன்படுத்தும் ஒரு விவசாயி அரசிடமிருந்து நேரடியாக 1000/– ரூபாய் பண உதவி பெறுகிறார். பின்னர் அவர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 750/– ரூபாய் கொடுக்க வேண்டும். உண்மையில் அவர் நிகர உதவியாக 250/– ரூபாய் பண உதவி பெறுகிறார். இந்த அடிப்படையில், பம்பு செட்டின் குதிரைத் திறன் பொறுத்து, அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 1,250/– ரூபாயை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு எனது அரசு வழங்கி வருகிறது. அரசு அளித்துள்ளஇந்தப்பண உதவியினால் முதல் அரையாண்டிற்கான கட்டணத்தை பெரும்பாலான விவசாயிகள் எளிதாகச் செலுத்திவிட்டனர். இதனால், 8.56 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடைந்துள்ளார்கள். இதற்காக அரசு ஏற்றுக் கொண்டுள்ள செலவு ஆண்டு ஒன்றிற்கு 90 கோடி ரூபாய் ஆகும்.

கடந்த பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணத்தினால் 2.5 ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலத்திற்கு மிகையாக வைத்துள்ள விவசாயிகளும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் என்றும், அவர்களுக்கு அரசு பண உதவி செய்ய வேண்டும் என்றும் எனக்கு விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, சிறு மற்றும் குறு விவசாயிகளைப் போல் 6.76 இலட்சம் இதர விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படும். அதாவது, 3 குதிரை விசைப் பம்புசெட்டினை பயன்படுத்தும் ஒரு விவசாயிக்கு அரசிடமிருந்து நேரடியாக 1,000/– ரூபாய் பண உதவி வழங்கப்படும். பின்னர் அவர் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 750/– ரூபாய் கொடுக்க வேண்டும். 5 குதிரைத் திறன் மற்றும் அதற்கு மேல் உள்ள பம்பு செட்டுகளைப் பொறுத்த வரை, அதிகபட்சம் ஆண்டு ஒன்றுக்கு 1,250/– ரூபாய் வழங்கப்படும். நடப்பு நிதி ஆண்டில், இரண்டாவது அரையாண்டு தவணை செலுத்துவதற்காக பண அஞ்சல் 6.76 இலட்சம் இதர விவசாயிகளுக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்படும். இதனால், அரசுக்கு ஒரு ஆண்டிற்கு 81 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகும். நடப்பு நிதி ஆண்டில் மட்டும் 40.5 கோடி ரூபாய் செலவு ஆகும். ஆக மொத்தம் தமிழ்நாட்டில் பம்புசெட்டு வைத்துள்ள 15.32 இலட்சம் விவசாயிகளுக்கும் ஆண்டுக்கு 171 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் விவசாய பம்புசெட்டுகளுக்கு வகுத்துள்ள மின் கட்டணம் மிகவும் குறைவானது. இந்தக் குறைவான கட்டணத்தைக் கூட அரசே உதவிப்பணம் வாயிலாக விவசாயிகளுக்கு செலுத்தி வருகிறது. இதனால், அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. மின்சார வாரியத்திற்கு ஆகும் உற்பத்திச் செலவை விட அரசு, விவசாயிகளின் சார்பாக செலுத்தக்கூடிய இந்தக் கட்டணம் மிகவும் குறைவான அளவில் உள்ளதால், ஆண்டு ஒன்றுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 2,500 கோடி ரூபாய் மானியச் சுமையை தாங்க வேண்டிய நிலையில் உள்ளது.

இருந்தபோதிலும், கிராமப்புறங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டுள்ள நான், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில், இந்த சிறப்புப் பண உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி, இதன் மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தர தற்போது ஆணையிட்டுள்ளேன்.

எவ்வளவோ நிதி நெருக்கடி இருந்த போதிலும், அனைவரும் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற 1998–இல் போடப்பட்ட மைய அரசின் சட்ட நிர்ப்பந்தம் இருந்த போதிலும், நான் அனைத்து விவசாயிகளின் நலனையும் பாதுகாக்கும் வகையில், இந்தச் சிறப்பான வழிமுறையை வகுத்து, அனைத்து விவசாயிகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் கிடைக்க வழி செய்துள்ளேன். இதனை அனைத்து விவசாயிகளும் முழு மனதுடன் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

□ □ □

# நலிவடைந்த கலைஞர்களுக்கு ஆயுட்காலம் வரை நிதிஉதவி

– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு!

**வா**ழ்நாள் முழுவதும் கலையையே தொழிலாகக் கொண்டு தற்போது அகவை முதிர்ந்த நிலையில் நலிந்த நிலையில் வாழ்ந்து வருகின்ற 500 கலைஞர்களுக்கு, அவர்களது ஆயுட்காலம் வரை மாதந்தோறும் 500 ரூபாய் உதவித்தொகை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

“கலையை வளர்ப்பது என்பது கலை வல்லுநர்களை வளர்ப்பதே ஆகும். எனவே, கலை வல்லுநர்களின் நலனைக் காப்பதில் எனது அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது'' என்று கடந்த 25.11.2003 அன்று நடைபெற்ற இயல், இசை, நாடக மன்றத்தின் கலைமாமணி விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்ததற்கு இணங்க, தமிழகத்தில் கலைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் கலையையே தொழிலாகக் கொண்டு வாழ்கின்ற கலைஞர்களின் குடும்ப நலனைக் காப்பதிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்.

இதன் அடிப்படையில் வாழ்நாள் முழுவதும் கலை ஒன்றையே தங்களது தொழிலாகக் கொண்டு தற்போது அகவை முதிர்ந்த நிலையில் நலிவடைந்து மிகுந்த சிரமத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிற 500 கலைஞர்களுக்கு தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் நலிவடைந்த கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் அவர்களது ஆயுட்காலம் வரை மாதந்தோறும் 500 ரூபாய் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

❖ ❖ ❖

# தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்திக்கு தமிழகத்திலுள்ள சாதகமான சூழ்நிலைகளை உரிய முறையில் பயன்படுத்தி, அறுவடைக்குப்பின் மேலாண்மை மற்றும் சேமிப்பு ஆகிய இனங்களிலும் அதிக கவனம் செலுத்திடும் நோக்கில் தமிழக அரசால் உருவாக்கப்பட்டுள்ள 'தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தை' (Tamil Nadu Horiticulture Development Mission) தொடங்கி வைத்தார்கள்.

சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை மூலமாக உற்பத்தியைப் பெருக்குதல், தரமான நடவுச் செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை சீராக்க உரிய வழி முறைகளை உருவாக்குதல், தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், நவீன தொழில்நுட்ப முறைகளை முனைப்புடன் கையாள விவசாயச் சங்கங்களை ஊக்குவித்தல் ஆகிய குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் செயல்படுத்தப்படும் புதிய தொழில் நுட்பங்கள் உருவாக்கம் மற்றும் ஆராய்ச்சி சிற்றியக்கம் (Mini - Mission), தோட்டக்கலைத் துறையால் செயல்படுத்தப்படும் தொழில்நுட்ப செயலாக்கம் மற்றும் வளர்ச்சி சிற்றியக்கம், வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் விற்பனைத் தொடர்பை ஏற்படுத்தல் சிற்றியக்கம் ஆகிய மூன்று சிற்றியக்கங்களை உள்ளடக்கியுள்ளது. தமிழ்நாட்டில் பெருமளவில் சாகுபடி செய்யப்படும் முக்கிய தோட்டக்கலைப் பயிர்களின் வளர்ச்சிக்காக மாம்பழ வளர்ச்சி இயக்கம், வாழை வளர்ச்சி இயக்கம், காய்கறி மற்றும் மரவள்ளி வளர்ச்சி இயக்கம், முந்திரி வளர்ச்சி இயக்கம், மலர்கள் வளர்ச்சி இயக்கம், மூலிகைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம் ஆகிய பயிர் வாரியான வளர்ச்சி இயக்கங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம், தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியிலும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மையிலும் ஒரு புதிய மறுமலர்ச்சியை உருவாக்கும்.

இதே நிகழ்வின் போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வேளாண்மை பொறியியல் துறையால் செயல்படுத்தப்பட உள்ள 30 கோடி ரூபாய் மதிப்பிலான நுண்ணிய நீர்ப்பாசனத் திட்டம், வேளாண் துறையின் மாவட்டத் தகவல் மற்றும் வழிகாட்டல் மையங்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் செயல்படுத்தப்பட உள்ள தமிழ்நாடு சிறு வேளாண் வணிகக் கூட்டமைப்பு (Small Farmers Agri Business Consortium) ஆகியவற்றையும் தொடங்கி வைத்தார்கள்.

இதுவன்றி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தமிழ்நாடு துல்லிய பண்ணையியல் (Precision Farming) திட்டத்தைச் செயல்படுத்திட தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும், தோட்டக்கலைத் துறையும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.அண்ணாவி, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சித் துறை ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு.என். நாராயணன், இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு.சி.ராமசாமி, வேளாண்மைத்துறைச் செயலாளர் திரு.கண்ணன், இ.ஆ.ப., தோட்டக்கலைத் துறை இயக்குநர் திரு.தனவேல், இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர். ★



# சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
தொடங்கி வைத்தார்கள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள நிரந்தரப் புத்தகக் கண்காட்சியினைத் தொடங்கி வைத்தார்.

பொதுமக்களும், புத்தக ஆர்வலர் களும் அனைத்து நூல்களையும் ஒரே இடத்தில் பார்வையிட்டு தங்களுக்குத் தேவையான நூல்களைத் தேர்வு செய்து வாங்குகின்ற வகையில் சென்னை மாநகரில் தற்போது ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் புத்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் புத்தகக் கண்காட்சி குறிப்பிட்ட சில நாள்கள் மட்டுமே நடைபெறுவதால் பெரும் பாலானோர் பயன் அடைய வாய்ப்பு இல்லை. இதனைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஒரே இடத்தில் அனைத்து நூல்களும் இடம் பெறும் நிரந்தரப் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்தால் ஆண்டு முழுவதும் பொதுமக்கள் பயனடைய முடியும் என்பதுடன் வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் சென்னைக்கு வரும்போது ஒரே இடத்தில் தங்களுக்குத் தேவையான நூல்களை வாங்கிக் கொள்ள முடியும் என்னும் நோக்கத்துடன் பதிப்பாளர்கள் உதவியுடன் சென்னையில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சியை அமைத்திட ஆணையிட்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணையின்படி தற்போது சென்னை கன்னிமாரா பொது நூலகக் கட்டடத்தில் 3,000 சதுர அடி பரப்பளவில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் புத்தகக் கண்காட்சியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்தக் கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்பாளர்கள் பங்கு பெற்றிருப்பதாகவும், மொத்தம் 30,000க்கும் அதிகமான அனைத்து வகை நூல்களும் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன என்றும் கல்வித்துறைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார். இதைக்கேட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பெறும் வகையில் இந்த நிரந்தரப் புத்தகக் கண்காட்சி சிறப்புடன் நடந்திட தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்துள்ள நிரந்தரப் புத்தகக் கண்காட்சியின் பயனாக பொதுமக்கள் தங்களுக்குத் தேவைப்படும் நூல்களைத் தேடி சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள பதிப்பகங்களுக்கோ, கடைகளுக்கோ செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல் ஒரே இடத்தில் அவற்றை வாங்கிக் கொள்ளலாம். இந்தப் புத்தகக் கண்காட்சியின் மூலம் பொதுமக்களிடம் புத்தகங்கள் வாங்கும் ஆர்வம் தூண்டப்படுவதுடன் படிக்கின்ற பழக்கமும் வெகுவாக அதிகரிக்கும். பொதுமக்களும், புத்தக ஆர்வலர்களும் பயன்பெறும் வகையில் அனைத்து பதிப்பாளர்களும் பங்கேற்க, அரசின் சார்பில் புத்தகங்களுக்கென்றே நிரந்தரக் கண்காட்சி அமைவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு.செ.செம்மலை, பள்ளிக் கல்வித்துறை (பொறுப்பு) செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத் தலைவர் திரு. இரா. முத்துக்குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். ❖

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் சாதனைகளை விளக்கும் நூல்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றிய முழு விவரங்கள், முன்னேற்றம் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை விளக்கும் வகையில், சமூக நலத்துறைச் செயலர் திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., மற்றும் டாக்டர் எஸ்.கே. வெட்டிவேல் ஆகியோர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள ''மகளிர் – தங்கள் முன்னேற்றத்திற்காக'' (`Women's Own') என்ற நூலை வெளியிட்டார்கள்.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக உயர மகளிர் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று, தமது சொந்தக் கால்களில் நிற்கும் வலிமையையும், தன்னம்பிக்கையையும் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1992 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழு என்ற புதுமையான திட்டத்தை அறிமுகப் படுத்தினார்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் மக்களின் பேராதரவைப் பெற்று, தமிழகத்தில் உள்ள 30 மாவட்டங்களிலும் மொத்தம் 1,55,022 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்படும் மேலான நிலை உருவாகி உள்ளது. இந்தக் குழுக்களில் தற்போது மொத்தம் 26,30,438 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். வங்கிகளில் உள்ள இவர்களது மொத்தச் சேமிப்பு ரூபாய் 407.54 கோடி ஆகும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் இயக்கத்தின் பரிணாமத்தை விளக்கும் வகையில், மகளிர் இயக்கத்தின் செயல்பாடுகளை சரியான கண்ணோட்டத்தில் ஆய்வுசெய்து, அறிவியல் அடிப்படையில் அந்த மதிப்பீட்டு அனுபவங்களைத் தொகுத்து, சமூகநலத் துறையின் செயலாளர் மற்றும் டாக்டர் எஸ்.கே. வெட்டிவேல் ஆகியோர் ''மகளிர் – தங்கள் முன்னேற்றத்திற்காக'' (`Women's Own') எனும் பெயரில் ஆங்கிலத்தில் நூல் வடிவில் உருவாக்கி உள்ளனர். இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதுடன் இத்தகைய இயக்கத்தில் ஆர்வமுடையவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழை எளிய கிராமப்புற மகளிரின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியை உருவாக்குகின்ற மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்தின் உந்து சக்தியாக இருந்து, அவர்களது கண்ணீரைத் துடைத்து மகளிர் தங்கள் வாழ்வில் நம்பிக்கையும், முன்னேற்றமும் பெற்றிட அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ''மகளிர் – தங்கள் முன்னேற்றத்திற்காக''(`Women's Own') என்னும் இந்த நூலை 25.2.2004 அன்று வெளியிட்டார்கள். முதல் பிரதியை தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக்கொண்டார். மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சிறப்பான இந்த முயற்சியை மேற்கொண்டமைக்காக திருமதி சி.கே.கரியாலி இ.ஆ.ப., அவர்களுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திருமதி லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., நூல் ஆசிரியர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் திரு. பா. ஆனந்த், பொது மேலாளர் திரு.நா.மாரிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர். ❖


# நீலகிரி மாவட்டத்தில் 50 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக உயர்த்தப்பட்டன

தமிழக அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் 3–ஆவது திட்டம் நீலகிரி மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 334 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகிறது. இவற்றில் 50 மையங்களை நர்சரி பள்ளிகளாக உயர்த்தி இயங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி உதகை வட்டத்திலுள்ள 17 அங்கன்வாடி மையங்களும், குன்னூர் வட்டத்திலுள்ள 7 அங்கன்வாடி மையங்களும், கூடலூர் வட்டத்திலுள்ள 17 அங்கன்வாடி மையங்களும், கோத்தகிரி வட்டத்திலுள்ள 9 அங்கன்வாடி மையங்களும் ஆக மொத்தம் 50 அங்கன்வாடி மையங்கள் இனி நர்சரி பள்ளியாக இயங்கும்.

நீலகிரி மாவட்டத்தில் 13.1.2004 முதல் இவ்வாறு அறிவிக்கப்பட்ட உதகை வட்டத்திலுள்ள கல்லக்கொரை, சோலூர் ஒசட்டி, கோட்டட்டி, மேல்கவ்வட்டி, கொதுமுடி, அணிக்கொரை, கீழ் தலையாட்டிமந்து, முள்ளிக்கொரை, தக்கர்பாபாநகர், போர்த்தியாடா, உல்லத்தி, நடுவட்டம், சின்னகுன்னூர், கோடப்ப மந்து, இடுஹட்டி, நுந்தளா, பிக்கட்டி ஆகிய இடங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களும், குன்னூர் வட்டத்திலுள்ள கிருஷ்ணபுதூர், கேத் தொரை, அனியாடா, பெராமியா, அளக்கரை, தூதூர்மட்டம், இளித் தொரை ஆகிய இடங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களும், கூடலூர் வட்டத்திலுள்ள அத்திப்பள்ளி, கல்லிங் கரை, பாண்டகாப்பு, தொரப்பள்ளி, மசினகுடி, அம்பலவயல், பொன்னூர், தேவாலா, காந்திநகர், தேவர்சோலை, நந்தாட்டி, வண்டிப்பேட்டை, பக்கனா, சூண்டி, நாடுகாணி, அம்பலமூலா, மேபீல்ட் ஆகிய அங்கன்வாடி மையங்களும், கோத்தகிரி வட்டத்திலுள்ள ஜெகதளா, காமராஜ்நகர், சோலூர் மட்டம், இட்டக்கல், கன்னிகாதேவிகாலனி, காக்காசோலை, ஓம்நகர், கெரடாமட்டம், கொட்டக்கம்பை ஆகிய அங்கன்வாடி மையங்களும் ஆக மொத்தம் 50 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக இயங்கும்.

13.1.2004 அன்று காலை 10 மணிக்கு உதகையில் கீழ்தலையாட்டிமந்து அங்கன்வாடி மையத்தை நர்சரி பள்ளியாக உயர்த்தி அதன் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப. அவர்கள் தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தனது தலைமையுரையில் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:–




"நீலகிரி மாவட்டத்தில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்தைச் சார்ந்த நான்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்களில் மொத்தமாக 334 அங்கன்வாடி மையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றது. இவைகளில் இம்மாவட்டத்தில் 50 அங்கன்வாடி மையங்களை நர்சரி பள்ளிகளாக உயர்த்தி செயல்படவும், மாநில அளவில் 5000 அங்கன்வாடி மையங்கள் நர்சரி பள்ளிகளாக உயர்த்தி செயல்படவும், அரசு அனுமதித்துள்ளது. நம் தாய்மொழி தமிழ்மொழியாக இருப்பினும் ஆங்கில மொழியையும் குழந்தைகளுக்கு முறையாகக் கற்றுக் கொடுக்கவும், பெற்றோர்களுக்கு பணச்சுமை இல்லாமலிருக்கவும், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைத்து தர குழந்தைகளும் ஆங்கிலக் கல்வியைக் கற்கவுமே அரசு இப்புதிய திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாம் தினசரி பயன்படுத்தும் ஆங்கிலச்

# விளையாட்டு வீரருக்கு அடுக்குமாடிக் குடியிருப்பு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், சர்வதேச கையுந்துபந்து (Volley Ball) விளையாட்டு வீரரும், தேசிய பயிற்றுநருமான திரு ஜி.இ. ஸ்ரீதரன் அவர்களுக்கு பரிசாக 15 இலட்சம் ரூபாய் மதிப்புடைய உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்புக்கு உரிய சாவியினையும், டேபிள் டென்னிஸ் பயிற்றுநர் திருமதி பி. புவனேஸ்வரி அவர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையையும் நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

சர்வதேச கையுந்துபந்து விளையாட்டு வீரரும், தேசிய பயிற்றுநருமான தமிழகத்தைச் சேர்ந்த திரு. ஜி.இ. ஸ்ரீதரன், 250 சர்வதேச விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் சார்பாக பங்கேற்று விளையாடி உள்ளார். திரு. ஜி.இ. ஸ்ரீதரன் அவர்கள் 1982 ஆம் ஆண்டில் விளையாட்டு வீரருக்கான "அர்ஜுனா விருது'' வழங்கி கௌரவிக்கப்பட்டார். மேலும், தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் 1982 ஆம் ஆண்டு இவருக்கு "மாமல்லன் விருது'' வழங்க கௌரவித்தது. இவர் இந்திய இளைஞர் கையுந்துபந்து விளையாட்டு அணிக்குத் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டு இவரது சீரிய தலைமையின் கீழ் இந்திய இளைஞர் கையுந்துபந்து அணி ஆசிய இளைஞர் கையுந்துபந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கத்தையும், 2003 ஆம் ஆண்டு ஜூலையில் நடைபெற்ற இளைஞருக்கான உலக கையுந்துபந்து சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி பதக்கத்தையும் வென்றது. திரு. ஜி.இ. ஸ்ரீதரன் அவர்களின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை வில்லிவாக்கத்தில் தமிழ்நாடு வீட்டு வசதிவாரியத்தால் கட்டப்பட்டுள்ள "உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்பில்'' 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஒரு இல்லத்தை அவருக்குப் பரிசாக வழங்கி அந்த வீட்டிற்குரிய சாவியை 27.2.2004 அன்று நேரில் அளித்துப் பாராட்டினார்கள்.



டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரரான திரு. எஸ். இராமன் அவர்கள் 2002 ஆம் ஆண்டில் இங்கிலாந்து மான்செஸ்டர் நகரில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் கலந்துகொண்டு இரண்டு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றார். தமிழக அரசால் இவருக்கு உயர் ஊக்கத்தொகையாக ரூபாய் 20 இலட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டது. விளையாட்டு வீரருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையில், 15 சதவிகிதத் தொகை அவரது பயிற்றுநருக்கு வழங்கப்படும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திரு. எஸ். இராமன் அவர்களின் பயிற்றுநரான திருமதி. பி. புவனேஸ்வரி அவர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையை ஊக்கத் தொகையாக மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2004 அன்று நேரில் வழங்கிப் பாராட்டினார்கள்.

பரிசாக வழங்கப்பட்ட வீட்டிற்குரிய சாவியைப் பெற்றுக் கொண்ட திரு. ஜி.இ. ஸ்ரீதரன், ஊக்கத்தொகையைப் பெற்றுக்கொண்ட திருமதி பி. புவனேஸ்வரி ஆகியோர் தங்களது நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டனர். ✶

---

சொற்களை அனைத்து குழந்தைகளும் கிளிப்பிள்ளை போல் கூறாது, வார்த்தையின் அர்த்தம் புரிந்து ஐம்புலன்களால் உணர்ந்தும் கற்றுக் கொள்கின்றனர்.

எனவே தமிழக அரசால் நடத்தப்படும் நர்சரி பள்ளிகளுக்கு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை தினமும் காலை 9.30 மணிக்கு தவறாது தாங்களே அனுப்பி அதன் முழுப்பயன்களையும் அடையுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 18 அம்சத் திட்டங்களில் தமிழகத்தை ஊட்டச்சத்து பற்றாக்குறையில்லாத மாநிலமாக உருவாக்குதல் முக்கியம் வாய்ந்த ஒரு திட்டமாகும். இதனடிப்படையில் நீலகிரி மாவட்டத்தை முழுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையில்லாத மாவட்டமாக உருவாக்கிட அங்கன்வாடி மையங்கள் மூலம் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே நீலகிரி மாவட்டம் முழுமையான ஊட்டச்சத்து பற்றாக் குறையில்லா மாவட்டமாக உருவாக்கிட தாங்கள் தங்கள் மேலான ஒத்துழைப்பினை நல்கிடுமாறும் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.''

இவ்வாறு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உதகை நகராட்சி ஆணையாளர் திரு.பொன்முனிராஜ், யு.எஸ்.எஸ்.எஸ். அரசு சாரா நிறுவனத்தலைவர் அருட்தந்தை அலெக்சாண்டர் மேத்யூ, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் திரு.போஸ், அனைவருக்கும் கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. தா.குணசேகரன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. மு.ஞானகுரு, மாவட்ட பொது சுகாதார செவிலியர் திருமதி. மாலைமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி தா.இராமுத்தாய் அனைவரையும் வரவேற்றார். ❖

# தமிழகத்தில் போலியோ ஒழிப்பு நடவடிக்கை



இந்த ஆண்டிற்கான இரண்டாம் சுற்று பல்ஸ் போலியோ சிறப்பு முகாம் 22.2.2004 ஞாயிறு அன்று நடைபெற்றது. முதலாம் சுற்று முகாமில் ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் 72 இலட்சம் குழந்தைகள் பயனடைந்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் இரண்டாம் தவணையாக 22.2.2004 அன்று மீண்டும் சொட்டு மருந்து கொடுக்க பொது சுகாதாரத்துறை அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தது. மேலும் முதலாம் சுற்று முகாமின் போது ஏதோ ஒரு காரணத்தினால் சொட்டு மருந்து போடாமல் விடுபட்ட குழந்தைகளுக்கும் மற்றும் புதிதாகப் பிறந்துள்ள குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

## முதல் சுற்று முகாமின் அனுபவங்கள்

பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் பங்கேற்று முதல் சுற்று முகாமை வெற்றி பெறச் செய்தனர். இதற்கு அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஈடுபாடும் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளின் ஒத்துழைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் பொது சுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட டிப்ஸ்டிக் (DIPSTICK SURVEY) ஆய்வின்படி, ஒரு சில பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு மேலும் கூடுதல் சொட்டு மருந்து தேவையில்லை என்று கருதுவதாகத் தெரியவந்துள்ளது. போதுமான அளவு விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் பெற்றோர்களிடையே இன்னும் சில சந்தேகங்கள் இருந்து வருகின்றன. எனவே பொதுமக்கள் கவனத்திற்கு கீழ்க்கண்ட விளக்கங்கள் அவசியமாகிறது.

## பல்ஸ் போலியோ முகாம் எதற்காக?

ஒரே சமயத்தில் ஒட்டு மொத்தமாக ஐந்து வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பது போலியோ நோய் ஒழிப்புத் திட்டத்தின் நோக்கமாகும். பாதுகாப்பான வேக்ஸின் கொடுக்கப்படும்போது, நோய் பாதிப்புக்கு ஏதுவாகும் குழந்தைகளின் குடல்களிலுள்ள போலியோவை உண்டாக்கும் கொடிய நுண்கிருமிகள் இரத்தத்திற்குள் செல்லவிடாமல், மலத்தின் வழியாக வெளியேற்றப்பட்டு, சூரிய வெப்பத்தால் அழிக்கப்படுகிறது. வழக்கமாகக் கொடுக்கும் தடுப்பு மருந்தின் மூலம் போலியோ நோய் பரவாமல் தடுக்கப்பட்டாலும் ஒரே சமயத்தில் அனைத்துக் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ நுண்கிருமிகள் பரவாமல் சுற்றுச் சூழலிலிருந்து அறவே ஒழிக்க முடியும். ஆகவே, ஒரு குழந்தை கூட விடுபடாமல் அனைத்து ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

## முக்கிய அம்சங்கள் :

1. போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது.
2. எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; அதனால் எந்த பாதிப்பும் இல்லை.
3. ஓரிரு நாள்களுக்கு முன்பு சொட்டு மருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும் முகாம் நாள்களில் மீண்டும் கொடுக்க வேண்டும்.
4. முகாம் நாள்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்.
5. வயிற்றுப் போக்கு, சளி, காய்ச்சல் மற்ற சிறு சிறு உபாதைகள் உள்ள குழந்தைகளுக்கும் முகாம் நாள்களில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்கப்பட வேண்டும்.
6. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் நாள்களில் சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும்.
7. முதல்முறை முகாமின்போது விடுபட்ட குழந்தைகளுக்கும் இரண்டாம் முறை முகாமில் தவறாமல் சொட்டு மருந்து கொடுக்க வேண்டும்.

## கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களுக்கு அபராத வட்டி, சேவைக் கட்டணம் தள்ளுபடி

### – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வகையிலும், கடனைத் திருப்பி செலுத்திட அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை முழுமையாகத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்தத் திட்டத்தின்படி, முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்று, திரும்ப செலுத்த வேண்டிய தவணையைச் செலுத்தத் தவறியவர்கள் 1.10.2003 அன்று நிலுவையில் உள்ள தங்களது தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை 30.4.2004–க்குள் முழுமையாகச் செலுத்தினால், அதற்குரிய அபராத வட்டியோ, சேவைக் கட்டணமோ, அவர்கள் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல, முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களும் 1.10.2003 அன்று நிலுவையில் உள்ளவாறு, தமிழ்நாடு வீட்டுவசதி இணையத்திற்கு தவணை தவறிய அசல் மற்றும் வட்டித் தொகையை செலுத்தினால், அந்தச் சங்கங்களும் அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய தேவை இல்லை.

இந்த ஆணையின்படி தமிழகம் முழுவதும் உள்ள 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்க உறுப்பினர்கள் பயன் அடைவார்கள். அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டிய 125 கோடி ரூபாய் அளவுக்கு அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும்.

முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் கடன் பெற்றவர்களின் கடன் சுமையைக் குறைத்து, தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்திட அவர்களை ஊக்குவிக்கும் இத்திட்டத்தின் மூலம் புதிய கடன்கள் வழங்கவும், அதன்மூலம் வீட்டுவசதி பெருமளவில் பெருகிடவும் வாய்ப்பு உருவாகும்.

---

முதல் முறையைப் போலவே இரண்டாம் சுற்றிலும், தமிழ்நாட்டில் சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட்டன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாள்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

சுமார் 72 இலட்சம் குழந்தைகள் இதன் மூலம் பயன் பெற்றனர். இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பல்வேறு அரசுத் துறைகள், ரோட்டரி சங்கம் மற்றும் பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இரண்டாவது முகாமிலும் ஈடுபட்டார்கள். சொட்டுமருந்து கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டு விரலில் “ஜென்ஷன் வயலட்” என்ற அடையாள திரவம் வைக்கப்பட்டது. குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்த திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள குழந்தைக்கு சொட்டு மருந்து தந்துள்ளதை “P” என்ற குறியீடு செய்து உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் இதுவரை நடத்தப்பட்ட பல்ஸ் போலியோ முகாம்கள் நல்ல வெற்றியைத் தந்துள்ளன. போலியோ நோய் ஒழிப்பில் நாம் இறுதி கட்டத்தை அடைந்துள்ளோம். இருந்தபோதிலும் சமீபத்தில் திருச்சியிலும் சென்னையிலுமாக இரண்டு குழந்தைகள் போலியோவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் கர்நாடகா மற்றும் ஆந்திராவில் அதிக அளவில் குழந்தைகள் போலியோவினால் பாதிக்கப்பட்டுள்ளதால், போலியோ சிறப்பு முகாமை முனைப்புடன் செயல்படுத்தியுள்ளது தமிழக அரசு. ஒரு குழந்தை கூட விடுபடாமல் சொட்டு மருந்து கொடுக்கப்பட்டால் மட்டுமே போலியோ நோயை முற்றிலுமாக நமது மாநிலத்திலிருந்து ஒழிக்க முடியும்.

வருங்கால இளைஞர்களை ஊனமில்லாமல் காப்பது நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஊனமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்.

*– சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை*
*தமிழ்நாடு அரசு*



# தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

வலுவான பொருளாதாரத்தை அமைப்பதற்கு அடித்தளமாக விளங்குவதே உள்கட்டமைப்பு தான். தமிழ் நாட்டிலுள்ள உள்கட்டமைப்புகளை உலகத் தரம் வாய்ந்தவையாக மேம்படுத்திட தமிழ்நாடு அரசு விரிவாக்கத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. உலக வங்கியின் கடன் உதவியுடன் பல திட்டங்கள் செயலாக்கப்படவுள்ளன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் அவற்றில் முதன்மையான, மிகப் பெரிய திட்டமாகும். சாலைகளின் தரத்தை மேம்படுத்தி, சாலைப் போக்குவரத்து பாதுகாப்பாகவும், விரைவாகவும், சிக்கனமாகவும், சொகுசாகவும் அமைத்து, தொழில்களும், வேளாண்மையும் வளர்ச்சியடையவும், மீன் முதலான கடல் சார்ந்த பொருட்கள் எளிதாகக் கொண்டு செல்லப்படவும் சுற்றுலாவை மேம்படுத்திடவும் வழி வகுப்பதே இத்திட்டத்தின் முதன்மையான குறிக்கோளாகும்.

உலக வங்கியுடன் கடன் ஒப்பந்தம் 2003–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கையெழுத்திடப்பட்டது. இத்திட்டம் 450 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூபாய் 2,160 கோடி) செலவில் செயலாக்கப்படவுள்ளது. இதில் உலக வங்கி 348 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூபாய் 1,670 கோடி) கடன் அளிக்கும். இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் நிறைவடையும். இத்திட்டம் இப்போது செயலாக்கப்பட ஆயத்த நிலையில் உள்ளது. இத்திட்டத்திற்காகப் பணியாற்றுவோர் யாவரும் தங்களது கடமைகளையும், தாங்கள் ஆற்ற வேண்டிய பணிகளையும் நன்குணர்ந்து செயலாற்றி, காலதாமதமும், நிதி இழப்புமின்றி இத்திட்டத்தைச் செயலாக்கும் வழிமுறைகளை எடுத்துரைக்கும் பொருட்டு திட்டப் பயிலரங்கம் 2004–ஆம் ஆண்டு பிப்ரவரி 12–ஆம் நாள் நடத்தப்பட்டது.

சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் கீழ்க்கண்ட மூன்று பாகங்கள் உள்ளன.

## சாலை மேம்பாடு

14 புறவழிச்சாலைகள் மற்றும் 9 சாலை மேம்பால கட்டுமானப் பணி உட்பட 750 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, உறுதியாக்கப்படுவதே சாலை மேம்பாட்டின் தலையாய குறிக்கோளாகும். மேலும் தனியார் நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு கூட்டு சேர்ந்து சாலைகளையும் பாலங்களையும் துணைத் திட்டங்கள் மூலம் அமைக்கவும் இத்திட்டம் வழிவகுக்கிறது. சாலை மேம்பாட்டுப் பணிகள் கீழ்க்கண்டவாறு ஐந்து தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

## ஒப்பந்தத் தொகுதிகள் மற்றும் சாலைகள்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் – 01 (393 கி.மீ.) – 1. ஆற்காடு–திருவண்ணாமலை – திருக்கோவிலூர்–இலவனசூர், 2. போளூர் – செங்கம், 3. விருத்தாச்சலம் – ஜெயங்கொண்டம் –கும்பகோணம்–திருவாரூர், 4. அரியலூர் – செந்துறை – ஜெயங்கொண்டம்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம் – 02,03 மற்றும் 04.(334 கி.மீ.) – 1. நாகப்பட்டினம் – கட்டுமாவடி, 2. கட்டுமாவடி – இராமநாதபுரம், 3. இராமநாதபுரம் – தூத்துக்குடி.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் –(05 17 கி.மீ.)– கும்பகோணம் புறவழிச்சாலை (தொடர்ச்சிப் பகுதி) மற்றும் இராமநாதபுரம் புறவழிச்சாலை.

## சாலைப் பராமரிப்பு மற்றும் சாலைப் பாதுகாப்புப் பணிகள்

மாநிலச் சாலைகளில் இலகுவாகவும், பாதுகாப்பாகவும், தங்கு தடையின்றியும், போக்குவரத்து நடைபெற வழிவகுத்திட காலமுறைப் பராமரிப்புப் பணிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு சார்ந்த சிறு பணிகள் செய்யப்படுவது இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 2,000 கி.மீ. நீளமுள்ள மாநிலச் சாலைகள் நான்கு ஆண்டு காலத்தில் செப்பனிடப்படும். சாலைப்பாதுகாப்பு முறைகள் தான் இத்திட்டப் பாகத்தின் முதன்மைக் குறிக்கோளாகும்.

இத்திட்டப் பாகத்தின் மூலம் சாலை விபத்துப் பகுதிகளைக் கண்டறிந்து, ஆய்வு செய்து, சுமார் 100 இடங்களில் தகுந்த நிவாரணப் பணிகள் வடிவமைக்கப்பட்டு, செயலாக்கப்படும்.

### துறை நிருவாகச் சீரமைப்பும், கொள்கைகளை உருவாக்குதலும்

நெடுஞ்சாலைத்துறையின் நிருவாக முறைகளைச் சீர் திருத்தி, புதுமைகளைப் புகுத்தி, உறுதிப் படுத்துவதே இத்திட்டப் பாகத்தின் குறிக்கோள். இத்துறைக்கான தகவல் தொழில்நுட்பத்தை உருவாக்கி, கணினி மயமாக்கப்பட்ட சாலைப் பராமரிப்பு மற்றும் மேலாண்மை சாதனத்தைத் தயாரிப்பதும் இத்திட்டத்தில் அடங்கும். சாலைப் போக்குவரத்துக் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அரசுத் துறையுடன் தனியார் நிறுவனங்கள் பங்கேற்க வழிகோலுவது மற்றொரு நோக்கமாகும்.

### சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் சீர்திருத்தங்கள்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏராளமான சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. சாலை மேம்பாட்டில் சீர்திருத்தங்களைச் செய்வதில் தமிழ்நாடு அரசுதான் இந்தியாவிலேயே முதன்மை யானதாகத் திகழ்கிறது. சாலைப் பராமரிப்பு நிதி மற்றும் வாரியம் ஆகியவற்றை நிறுவுதல், பிற சட்டமுறைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுதல் ஆகியவை இவற்றில் அடங்கும்.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது இலட்சியத்தை நிறைவேற்றிட இத்திட்டம் பெரிதும் துணைபுரியும். ❖

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

## துன்புறுத்தப்பட்ட ஒட்டகங்களை மீட்டு பராமரிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உத்தரவு

இயற்கையின் ஓர் அங்கமான விலங்குகள் மீது தனி அன்பு காட்டிவரும் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் சரியான உணவு வழங்கப்படாமலும், முறையாகப் பராமரிக்கப்படாமலும் துன்புறுத்தப்பட்ட இரண்டு ஒட்டகங்களை மீட்டு வண்டலூர் உயிரியல் பூங்காவில் வைத்து பராமரித்திட ஆணையிட்டுள்ளார்கள்.

இயற்கையின் ஓர் அங்கமாக மனிதர்கள் மட்டுமல்லாமல், விலங்குகளும், மரம், செடி, கொடிகளும் உள்ளன என்பதைக் கருத்தில் கொண்டு, மனிதர்கள் மட்டுமல்லாமல், ஏனைய அனைத்து உயரினங்களும் நம்முடைய அன்புக்கு உரியவையே என்னும் அடிப்படையில், விலங்குகளிடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தனி அன்பும், கருணையும் கொண்டுள்ளார்.

சென்னை மெரினா கடற்கரையில் உல்லாச சவாரிக்குப் பயன்படுத்தப்படும் குதிரைகள் மிகவும் மோசமான நிலையில், தக்க பராமரிப்பின்றி நடத்தப்படுவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்ததும், அரசு கால்நடை மருத்துவர்களை அனுப்பி, அந்தக் குதிரைகளை மீட்டு தக்க மருத்துவ சிகிச்சை அளித்ததுடன், இத்தகைய விலங்குகளை வணிக ரீதியில் பயன்படுத்துவதையும், தக்க பராமரிப்பின்றி கொடுமைப் படுத்தப்படுவதையும் உடனடியாகத் தடுத்து நிறுத்த தக்க ஆணைகளைப் பிறப்பித்தார். மயிலாப்பூரில் ஒரு யானை அதனுடைய பாகனால் கடுமையாக நடத்தப்படுவது குறித்தும், அந்த யானை முறைகேடாக பிச்சையெடுக்க பயன்படுத்தப்படுவது குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்துக்கு வந்தவுடன், உடனடியாக அந்த யானையை வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைத்து, மருத்துவ சிகிச்சையும், அடைக்கலமும் அளித்திட ஆணையிட்டார். மேலும், தமிழ்நாட்டில் கோயில்களிலும், தனியார் பொறுப்பிலும் உள்ள 100 யானைகளுக்கு புத்துணர்வு அளித்து உடல்நலமும், மனநலமும் பேணும் வகையில், முதுமலையில் ஒரு மாத காலம் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் நடத்தினார். விலங்குகள்பால் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கொண்டுள்ள அன்புக்கும், அக்கறைக்கும் இந்த நிகழ்ச்சிகள் ஒரு சில உதாரணங்கள் ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நீலகிரி மாவட்டத்தில் இரண்டு ஒட்டகங்கள் தக்க உணவு வழங்கப்படாமலும், முறையான பராமரிப்பின்றியும், வணிக ரீதியில் பலன் பெறுவதற்காக அதன் உரிமையாளர்களால் துன்புறுத்தப்படுவதைத் தொலைக் காட்சி செய்திகள் வாயிலாக அறிந்தார்கள். தங்களது குறைகளை வாய்விட்டுச் சொல்ல முடியாத இத்தகைய விலங்குகளுக்கு எவ்வகையான துன்பமும் இழைக்கப்படக் கூடாது என்றும், இவை தக்க உணவளிக்கப்பட்டு முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்த கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடனடியாக இந்த ஒட்டகங்களை மீட்டு மருத்துவ சிகிச்சையும், அடைக்கலமும் அளிப்பதற்காக வண்டலூர் உயிரியல் பூங்காவிற்கு அனுப்பி வைக்க ஆணையிட்டார்.

இதன்படி, இந்த இரண்டு ஒட்டகங்களும் மீட்கப்பட்டு, முறையாகப் பராமரிக்கப்படும் வகையில், வண்டலூர் உயிரியல் பூங்கா அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

* * *



# பொங்கல் திருநாளையொட்டி, தமிழ்நாட்டில் ஏழை, எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 15–8–2003 அன்று நடைபெற்ற 57ஆவது சுதந்திர தின விழாவின்போது, ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி சேலை வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கேற்ப வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு 81 இலட்சம் பாலிகாட் சேலைகளும், 74 இலட்சம் பாலிகாட் வேட்டிகளும் வழங்கப்பட வேண்டும் என அரசாணை வெளியிடப் பட்டது.

ஊரகப் பகுதிகளில் 15–1–2004 முதல் 25–1–2004 வரையிலும் நகர்ப்புற பகுதிகளில் 1–2–2004 முதல் 10–2–2004 வரையிலும் இலவச வேட்டி சேலை வழங்கும் பணி நடைபெற்றது. 15–1–2004 பொங்கல் திருநாளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இலவச வேட்டி சேலை திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பு ஏழை எளிய மக்களும் பயன்பெற வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன், ஏழை எளிய மக்கள் எவரும் இலவச வேட்டி சேலை கிடைக்காமல் ஏமாற்றம் அடைந்துவிடக் கூடாது என்பதற்காகவும், இத்திட்டத்தினை மேலும் விரிவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்து, அதன்படி தமிழ்நாட்டில் பொது விநியோக முறையில் அரிசி கூப்பன் மூலம் அரிசி வாங்கும் அனைத்துப் பிரிவு ஏழை எளிய மக்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட அடையாள சீட்டுகளை வழங்கி











தகுதியுள்ள அனைத்து ஏழை எளிய மக்களும் பயன்பெறத்தக்க வகையில் ஆணையிட்டார்கள்.

இதன்படி, 1,07,02,530 வேட்டிகளும் 1,07,02,530 சேலைகளும் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகை ரூ.173 கோடி ஆகும். இதனால் 2 கோடியே 22 இலட்சம் ஏழை எளிய மக்கள் பயன் பெறுகிறார்கள். அரிசி கூப்பன் வழங்கப்பட்டுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் தகுதியின் அடிப்படையில் தலா ஒரு வேட்டி ஒரு சேலை வழங்கப்பட வேண்டுமென்றும், முதற்கட்டமாக ஊரக மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் இலவச வேட்டி சேலை விநியோகத்தை 20–2–2004–க்குள் முழுவதுமாக செயல்படுத்தி முடிக்கவும், நகர்ப்புற மற்றும் மாநகரப் பகுதிகளில் 21–2–2004 அன்று தொடங்கி 29–2–2004க்குள் சிறப்புற செயல்படுத்தி முடிக்க வேண்டுமெனவும், ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் செயலாக்கப் பட்டது.

இலவச வேட்டி/சேலை கிராமங்களில் உள்ள பொது விநியோகக் கடைகளில் கிராம நிர்வாக அலுவலர் தலைமை கொண்ட மூன்று நபர் குழுவினால் வழங்கப்பட்டது.

இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாக பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை : *சென்னை – 4,98,931, கோயம்புத்தூர் – 6,50,433, கடலூர் – 4,18,881, தருமபுரி – 5,47,507, திண்டுக்கல் – 3,17,439, ஈரோடு – 3,48,938, காஞ்சிபுரம் – 4,92,129, கன்னியாகுமரி–3,69,914, கரூர்–1,58,105, மதுரை –4,57,738, நாகப்பட்டினம் – 2,87,337, நாமக்கல் –1,73,224, பெரம்பலூர் – 2,58,927, புதுக்கோட்டை–2,58,618, இராமநாதபுரம் – 2,43,204, சேலம் – 4,16,900, சிவகங்கை – 2,40,162, தஞ்சாவூர் – 4,07,258, நீலகிரி – 1,75,157, தேனி – 2,24,692, தூத்துக்குடி –2,38,672, திருச்சிராப்பள்ளி – 4,04,596, திருநெல்வேலி – 4,97,990, திருவள்ளூர் – 4,30,332, திருவண்ணாமலை – 4,29,170, திருவாரூர் – 2,23,556, வேலூர் – 6,26,948, விழுப்புரம் –6,17,607, விருதுநகர் – 2,88,075.*

இலவச வேட்டி, சேலைகள் பெற்று மனமகிழ்ச்சியுடன் பொங்கல் திருநாளைக் கொண்டாடிய ஏழை, எளிய மக்கள், இந்த அரிய திட்டத்தினை செயல்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

★ ★ ★







மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில், உலகப் புகழ் பெற்ற கணித மேதை திரு. ஸ்ரீனிவாச இராமானுஜன் அவர்களது திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

1887–ஆம் ஆண்டில் எளிய குடும்பம் ஒன்றில் பிறந்த திரு ஸ்ரீனிவாச இராமானுஜன் தனது அளப்பரிய கணிதத் திறமையால் உலக நாடுகளைச் சேர்ந்த கல்வியாளர்களின் கவனத்தை ஈர்த்தார். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் பயின்ற திரு.ஸ்ரீனிவாச இராமானுஜன் பின்னர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார், இதனை அடுத்து, கேம்பிரிட்ஜ் தத்துவயியல் கழகத்தின் உயர் உறுப்பினராகவும், லண்டன் ராயல் குழு உறுப்பினராகவும், கேம்பிரிட்ஜ் டிரினிடி கல்லூரி உயர் உறுப்பினராகவும் தேர்வு பெற்று புகழ் அடைந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இத்தகு பெருமையும், சிறப்பும் கொண்டு உலக நாடுகளின் பார்வையை இந்தியாவை நோக்கித் திருப்பி தமிழகத்திற்கு தனிப் பெருமை சேர்த்த கணித மேதை திரு. ஸ்ரீனிவாச இராமானுஜன் அவர்களுக்கு சிறப்பு செய்திடும் வகையில், மகாமகம் திருவிழாவை ஒட்டி, அவரது திருவுருவச் சிலையை கும்பகோணம் அரசினர் கல்லூரியில் அமைத்திட ஆணையிட்டார்.

இதன்படி, கும்பகோணம் அரசினர் கல்லூரியில் நிறுவப்பட உள்ள, கணித மேதை திரு. ஸ்ரீனிவாச இராமானுஜனின் மார்பளவு வெண்கலச் சிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்11.2.2004 அன்று திறந்து வைத்தார்கள்.

## கணித மேதை ஸ்ரீனிவாச இராமானுஜன் திருவுருவச்சிலை

மாண்புமிகு முதலமைச்சர் திறந்துவைத்தார்



இந்த நிகழ்வின் போது மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.செம்மலை, தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி ப்ராணேஷ், இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., உயர் கல்வித் துறைச் செயலாளர் திரு.கே.ஞானதேசிகன், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு.முத்துவீரகணபதி ஆகியோர் உடனிருந்தனர். ❖

கணிதமேதை எஸ். இராமானுஜன் எண்ணறிவியலில் இந்தியாவைத் தலை நிமிரச் செய்தவர். 1887 டிசம்பர் 22 ஆம் நாள் பிறந்த இவரது பெற்றோர் கே. சீனிவாச அய்யங்கார் – கோமளத்தம்மாள். படிப்படியாகக் கல்வி பயின்று சென்னை கணக்கு தணிக்கை அலுவலகம், சென்னை துறைமுகம் என பணியாற்றி பின்னர் கணித ஆய்வில் ஈடுபடும் பொருட்டு பணியிலிருந்து விலகினார். இவரது கணித ஆற்றலைக் கண்ட அறிஞர்கள் இவரை இலண்டனுக்கு வரவழைத்தனர். அங்கு 5 ஆண்டுகள் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொண்டார். பின்னர் உடல்நிலையைக் கருதி சென்னை திரும்பினார். பெர்னௌலிஸ் எண்களின் தன்மைகள், டைவர்ஜென்ட் சீரிஸ், நூற்றுக்கும்மேற்பட்ட தேற்றங்கள் உள்ளிட்ட பல கணித வகைகளைக் கண்டறிந்தார்.


கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், ராயல் அறிவியல் கழகம், டிரினிடி கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் போன்றவை கணிதமேதை இராமானுஜனைப் பெருமைப்படுத்தியுள்ளன.

இளம் வயதிலிருந்தே கணித ஆற்றல்கள் நிரம்பப் பெற்ற இராமானுஜன் தமது 33ஆம் வயதில் 26.04.1920 அன்று காலமானார்.

# மகாமகம் திருவிழாவையொட்டி மகத்தான கலையரங்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் திராவிடப் பாரம்பரிய கலை நுணுக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள புதிய கலையரங்கத்தை திறந்துவைத்தார்.





தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரில் மகாமகத் திருவிழா இந்த ஆண்டு 6.3.2004 அன்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மகாமகத் திருவிழாவிற்கு வருகைதரும் பக்தர்களும், இப்பகுதியில் வாழ்கின்ற மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையில் 4.5 ஏக்கர் பரப்பளவில் 20 ஆயிரம் சதுர அடியில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்கத்தினை 20.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் திறந்துவைத்தார்கள்.

பெரிய அளவிலான விழாக்களும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தக்கூடிய வகையில் பரந்த மேடையும், அதன் இருபக்கங்களிலும் அனைத்து வசதிகளுடன் கூடிய ஒப்பனை அறைகளும் இந்தக் கலையரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அரங்கத்தில் ஆயிரம் நபர்கள் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணும் வகையில் இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மாபெரும் கலையரங்கம் 2003 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் தொடங்கப்பட்டு ஏறத்தாழ 100 நாட்களில் பொதுப்பணித் துறையால் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணித்துறை, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு ஓ. பன்னீர் செல்வம், பொதுப்பணித்துறை செயலாளர் நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) திரு. ஜெயச்சந்திர மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கும்பகோணத்தில் புதிய புறவழிச்சாலை

## மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று தலைமைச் செயலகத்தில் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் மகாமகத் திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு 24 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள 8.76 கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச் சாலை, காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 2 உயர்மட்டப் பாலங்கள் மற்றும் அரசலாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒரு உயர்மட்டப் பாலம் ஆகியவற்றைத் திறந்துவைத்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் கொண்டாடப்படும் மகாமகத் திருவிழாவிற்கு வட மாநிலத்தில் நடைபெறுகின்ற கும்பமேளா திருவிழாவிற்கு இணையாக இந்தியா முழுவதிலும் இருந்து இலட்சக் கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். அதுமட்டுமன்றி ஏராளமான திருக்கோயில்களைத் தன்னகத்தும், தன்னைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கொண்டுள்ள கும்பகோணம் நகருக்கு நாள்தோறும் பெருவாரியான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இவ்வாறு மிகப் பெரிய அளவில் வாகனங்களில் வருகின்ற பக்தர்களின் நலன் மற்றும் வளர்ந்து வரும் கும்பகோணம் நகரின் போக்குவரத்து மேம்பாட்டை கருத்தில் கொண்டு, கும்பகோணம் நகரத்திற்கு ஒரு புறவழிச்சாலை அமைத்திட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நெடுநாளையக் கோரிக்கை ஆகும்.

இந்தக் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், எதிர்வரும் மகாமகத் திருவிழாக் காலத்தில் போக்குவரத்து நெரிசலை சமாளிக்கின்ற வகையில் தற்போதுள்ள கும்பகோணம் சாலைகளும், மற்றும் அதனைச் சுற்றியுள்ள சாலைகளும் இல்லை என்பதால், இதற்கென 24 கோடியே 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து கும்பகோணம் புறவழிச் சாலை அமைக்கும் பணியினைப் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றிட ஆணையிட்டார்கள்.

இந்த ஆணையை ஏற்று சாதாரணமாக ஒரு ஆண்டு காலம் பிடிக்கும் இந்தப் பணி நான்கு மாதங்களுக்குள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க



சாதனையாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள கும்பகோணம் புறவழிச் சாலையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 20.2.2004 அன்று திறந்துவைத்தார்கள். அப்போது இந்தச் சாதனையைப் படைத்த நெடுஞ்சாலைத் துறை பணியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்தப் புறவழிச் சாலையின் மொத்த நீளம் 8.76 கி.மீட்டர் ஆகும். சாலையின் இருபுறமும் 2.5 மீட்டர் அகல புருவங்களோடு, 7 மீட்டர் அகலமுடைய ஒடுதளத்துடன் இந்த புறவழிச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் புற வழிச் சாலையின் பாதையில் குறுக்கிடுகின்ற காவேரி ஆற்றின் குறுக்கே உமாமகேஸ்வரபுரம் மற்றும் பாபுராஜபுரம் ஆகிய இரண்டு இடங்களிலும், அரசலாற்றின் குறுக்கே வலையப்பேட்டையிலும் மொத்தம் மூன்று உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இவைமட்டுமின்றி, புறவழிச் சாலை செல்லுகின்ற பாதையில் 17 குழாய் பாலங்களும், 28 சிறு பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பொதுப்பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு ஓ. பன்னீர் செல்வம், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் திரு. பா. இராமமோகன்ராவ், இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (பொது) திரு காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். ★

# தேயிலை விவசாயிகளுக்கு வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி

**-மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறட்சியினாலும், கடந்த பல ஆண்டுகளாக தேயிலை விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள தேயிலை விவசாயிகளின் நலன் கருதி, அவர்கள் செலுத்த வேண்டிய தவணை கடந்த கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளார்கள். நீண்டகாலக் கடனுக்காக தள்ளுபடி செய்யப்படும் வட்டி மற்றும் அபராத வட்டி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஆகும். குறுகிய காலக் கடனுக்காகத் தள்ளுபடி செய்யப்படும் வட்டி மற்றும் அபராத வட்டி 60 இலட்சம் ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவிற்கு வட்டி மற்றும் அபராத வட்டியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தேயிலை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து 29.2.2004 அன்று ஆணையிட்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக உலகச் சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சியினால் பச்சை தேயிலை விலை குறைந்துள்ளது. எனவே, தேயிலை விவசாயிகள் போதிய வருவாய் இன்றி இன்னலுற்றனர். இவ்வாறு பாதிக்கப் பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் துன்பத்தைப் போக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 28.8.2001 அன்று முதல், தயாரிக்கப்பட்ட தேயிலையை, ஏல மையங்களில் `INDCOSERVE' நிறுவனம் வாங்கி, தேயிலையைப் பதப்படுத்திப் பாக்கெட்டுகளில் அடைத்து, நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். 'ஊட்டி டீ' என்னும் பெயரில் இந்தத் தேயிலை நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், வணிக நடவடிக்கைச் செலவை 40 சதவிகிதம் குறைக்கும் அளவிலும், இடைத் தரகர்களை ஒழித்திடும் வகையிலும், தேயிலை விவசாயிகளின் தேயிலைக்கு சரியான விலை கிடைப்பதற்காகவும் "TEA SERVE" என்னும் மின்னணு ஏல மையத்தை 13.9.2003 அன்று ஊட்டியில் தொடங்கி வைத்தார்கள். மேலும், இந்த மையத்தில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு தமிழ்நாடு விற்பனை வரி மற்றும் மத்திய விற்பனை வரியில் 50 சதவிகிதம் வரிச் சலுகையும் வழங்கினார்கள். மேலும், சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக, மைய அரசால் ஏற்படுத்தப்பட்ட விலை நிலைபாட்டு நிதிக்கு தேயிலை விவசாயிகள் செலுத்த வேண்டிய தொடக்க பங்குத் தொகையான 1 கோடியே 15 இலட்சம் ரூபாயை மாநில அரசே வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

தற்போது நிலவி வரும் வறட்சியாலும், கடந்த பல ஆண்டுகளாக தேயிலையில் ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சியால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாலும், அதனால் கூட்டுறவு வங்கிகளில் இருந்து பெறப்பட்ட கடன்களை உரிய தருணத்தில் செலுத்த இயலவில்லை என்பதாலும், தவணை கடந்த கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டி தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தேயிலை விவசாயிகள் கோரிக்கை வைத்திருந்தனர். தேயிலை விவசாயிகளின் இந்தக் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 31.12.2003 அன்று வரை நிலுவையில் உள்ள தவணை தவறிய கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்கள். நீண்ட காலக் கடன்களுக்கான தவணை தவறிய வட்டி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஆகும். குறுகிய கால கடன்களுக்கான தவணை தவறிய வட்டி 60 இலட்சம் ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவிற்கு 31.12.2003 அன்றைய நிலுவைப்படி உள்ள காலம் தவறிய வட்டி மற்றும் அபராத வட்டியினை தேயிலை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 29.2.2004 அன்று உத்தரவிட்டார்கள்.

* * *

**தமிழ் தாத்தா உ.வே.சா அவர்களின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசின் சார்பில் 19.2.2004 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து சிறப்பு செய்தார்கள்.**



# புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட மகளிர் மேம்பாட்டுத் திட்டமான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மாவட்டத்தில் நகர்புறங்களில் 334, ஊரகப் பகுதிகளில் 4,435 ஆக மொத்தம் 4,769 குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களில் 78,972 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 33,441 மகளிர் ஆதிதிராவிடர்கள். இக்குழு உறுப்பினர்கள் சேமிப்பு நிதியாக ரூ.10.22 கோடி வைத்துள்ளனர். மொத்தம் 3,139 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.11.14 கோடி வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. வங்கிக் கடன் பெற்ற சுயஉதவிக் குழுக்கள் பெரும்பாலோருக்கு ஏற்கெனவே தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப் பட்டிருப்பதால், அவர்கள் பல்வேறு சுயதொழில்களைச் செய்து வருகின்றனர்.

விராலிமலை ஒன்றியம் குமாரமங்கலம் ஊராட்சி மாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த வீரசக்தி சுயஉதவிக் குழு 7–12–2001இல் தொடங்கப்பட்டது. 15 உறுப்பினர்கள் கொண்ட இக்குழுவினர் ரூ.29,100 சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். ரூ.25 ஆயிரம் சுழல் நிதியாக வங்கியிலிருந்து பெற்று ஆயத்த ஆடைகள், ஊறுகாய், வடகம், வத்தல் ஆகியவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மாதம் ஒன்றிற்கு ரூ.10,000 மதிப்பிலான பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர்.

அறந்தாங்கி ஒன்றியம் குருந்திராக்கோட்டை ஊராட்சியில் செயல்பட்டு வரும் சாரதா அம்மையார் சுயஉதவிக்குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். ரூ.40,500 சேமிப்பு நிதியாகக் கொண்டுள்ள இக்குழுவினர் பொருளாதாரச் செயல்பாட்டிற்காக எஸ்.ஜி.எஸ்.ஒய். திட்டத்தின்கீழ் ரூ.2.5 இலட்சம் மற்றும் வங்கிக் கடனாக ரூ.30,000 பெற்று ஆடு வளர்ப்பு, பால் மாடு வளர்த்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருவரங்குளம் ஒன்றியம் கீரமங்கலம் பேரூராட்சியில் ஓசோன் தொண்டு நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட பிஸ்மி சுயஉதவிக் குழுவின் 20 உறுப்பினர்கள் ரூ.32,400 சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். நபார்டு வங்கியிலிருந்து ரூ.1 இலட்சம், தொண்டு நிறுவனம் மூலமாக ரூ.1.80 இலட்சம் கடனுதவி பெற்று மளிகைக் கடை நடத்தி வருகின்றனர்.

அரிமளம் ஒன்றியம் கும்பங்குடி ஊராட்சியைச் சேர்ந்த கல்லுக்குடியிருப்பு கிராமத்தில் காசா தொண்டு நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்ட செவந்தி சுயஉதவிக் குழுவில் 20 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ.47,270 சேமிப்பு நிதி வைத்துள்ளனர். கடந்த 2½ ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இக்குழுவினர் நபார்டு வங்கி மூலம் ரூ.76,000, சுழல் நிதி ரூ.25,000, இணையத்தின் மூலம் ரூ.2,00,000 மற்றும் மாவட்ட வழங்கல் விற்பனை சங்கத்தின் மூலம் ரூ.50,000 ஆயிரம் கடனுதவி பெற்று நர்சரி மற்றும் காய்கறி பயிரிடும் தொழிலில் ஈடுபட்டு மாதந்தோறும் ரூ.10,000 இலாபம் ஈட்டி வருகின்றனர். தஞ்சாவூர், மதுரை, விழுப்புரம் மாவட்டங்களிலிருந்து வரும் விவசாயிகள் மரக்கன்றுகள், செடிகளை வாங்கிச் செல்கின்றனர்.



அறந்தாங்கி ஒன்றியம் பால கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகாநதி சுயஉதவிக் குழுவில் உள்ள 20 உறுப்பினர்கள் ரூ.78,000

## உலமாக்களுக்கு ஓய்வூதியத் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு



உலமா ஓய்வூதியத் திட்டம் தமிழக அரசால் 1981–இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளிவாசல்களில் பணிபுரியும் பேஷ், இமாம் மோதினார், மதரசாக்களில் பணிபுரியும் அரபி ஆசிரியர் மற்றும் தர்காக்களில் பணிபுரியும் முஜாவர் ஆகியோர் இத்திட்டத்தின்படி உலமாக்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களது ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு அதற்கு நிவாரணம் வழங்குமுகமாகவே அரசு இத்திட்டத்தை துவக்கியது. 60 வயது நிரம்பிய 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பேஷ், இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் போன்ற உலமாக்கள் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள். இவர்களுக்கு மாதம் ரூ.500 வீதம் இவர்கள் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படுகிறது. உலமா ஓய்வூதிய ஒப்பளிப்புக் குழு விண்ணப்பதாரர்களை நேரில் வரவழைத்து விண்ணப்பங்களைப் பரிசீலித்த பின் 2003–2004ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முழுவதும் 188 பயனாளிகளுக்கு உலமா ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தற்போது பயனடைந்து வருவோர் எண்ணிக்கை 1,825 ஆக உயர்ந்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி ரூ.1,20,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியப் பயனாளிகளுக்கு 18.2.2004 அன்று மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் வக்ஃபு அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள் உலமா ஓய்வூதிய ஆணைகளை நேரில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வக்ஃபு வாரிய தலைவி ஜனாபா பதர் சயித், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திரு. ஏ. நாகராஜன் இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மைச் செயல் அலுவலர் திரு. இ. முகமது ஜமாலுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர். ★

சேமிப்பு நிதி வைத்துள்ளனர். இக்குழு வங்கியிலிருந்து சுழல் நிதியாக ரூ.25,000 தொண்டு நிறுவனம் மூலமாக ரூ.36,000 கடனுதவி பெற்றுள்ளனர். இக்குழுவினர் கயிறு திரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரிமளம் ஒன்றியம் கைகுளான்வயல் ஊராட்சி புதுப்பட்டி கிராமத்தில் செயல் பட்டு வரும் ஜான்சிராணி சுய உதவிக்குழுவில் 17 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் சேமிப்பு நிதியாக ரூ.37,450 வைத்து உள்ளனர். நபார்டு வங்கியின் மூலம் ரூ.1.40 இலட்சம், சுழல் நிதியாக ரூ.25,000, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் ரூ.50,000 கடன் பெற்று பேக்கரி மற்றும் ஹாலோ பிளாக் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். மாதத்திற்கு பேக்கரித் தொழிலின் மூலம் ரூ.4,100/–ம், ஹாலோ பிளாக்குகள் தயாரிப்பின் மூலம் ரூ.3,600/–ம், இலாபம் ஈட்டி வருகின்றனர்.

அரிமளம் ஒன்றியம் கே.ராயவரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் அன்னை தெரஸா மகளிர் சுயஉதவிக் குழுவினர் ரூ.67,580 சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். இக்குழுவினர் ரூ.5.50 இலட்சம் கடனுதவி பெற்று திருமண நிகழ்ச்சிகளுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் வாடகைக்கு அளிக்கும் தொழிலில் கடந்த 2 மாத காலமாக ஈடுபட்டு வருகின்றனர். மாத வருமானமாக ரூ.4,000 வரை பெறுகின்றனர்.

சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் குழு தொடங்குவதற்கு முன்னர் விவசாயக் கூலிகளாகவும்



குழு தொடங்கிய பின்னர் சேமிப்பு பழக்கம் ஏற்பட்டதுடன், ஓய்வு நேரத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் மாத வருமானம் ஈட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். இதன் மூலம் இவர்கள் பொருளாதார மேம்பாடு அடைந்து வருகின்றனர்.

இதுபோன்று ஏராளமான சுயஉதவிக் குழுக்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயல்பட்டு பொருளாதாரப் புரட்சிக்கு வழி வகுக்கப் பட்டு வருகிறது.

**– துரை. தாமரைச்செல்வம்,**
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.

❖ ❖ ❖



# தோட்டக்கலைத் துறையின் தொடர்பணிகள்

தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் நிலவும் பல்வேறு வேளாண் பருவநிலை காரணமாக அனைத்து தோட்டக்கலைப் பயிர்களும் விளையக்கூடிய உகந்த சூழ்நிலை நிலவுகிறது. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 130 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் நிகர சாகுபடி செய்யப்படும் பரப்பு 53 இலட்சம் எக்டேர். இவற்றில் சுமார் 8.57 இலட்சம் எக்டேர் பரப்பில் பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், நறுமண சுவைப் பயிர்கள், மூலிகைப் பயிர்கள், மலர்கள் ஆகியன சாகுபடி செய்யப்படுகின்றன. மாநிலத்தின் நிகர சாகுபடிப் பரப்பில் 16 சதவிகிதம் தோட்டக்கலைப் பயிர்களாகும்.

தேசிய அளவில் தமிழ்நாட்டின் பங்கு தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவில் 5.7 விழுக்காடும் உற்பத்தியில் 7.7 விழுக்காடாகவும் உள்ளது.

**தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்**

அண்மை காலத்தில் வேளாண்மையில் தோட்டக்கலை ஒரு வளர்ச்சி அங்கமாக உருவாகி வருவதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, தோட்டக்கலைப் பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர்கள் ஆகியவற்றின் உற்பத்திக்கும், இவற்றிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருள்களின் உற்பத்திக்கும், இவைகளை சிறந்த முறையில் விற்பனை செய்வதற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில், "தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தை" அறிவித்துள்ளது.

1. சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை மூலமாக உற்பத்தியைப் பெருக்குதல்.
2. தரமான நடவுச் செடிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை சீராக்க உரிய வழிமுறைகளை உருவாக்குதல்.
3. தேவையின் அடிப்படையிலான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.
4. அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனைக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
5. நவீன தொழில்நுட்ப முறைகளை முனைப்புடன் கையாள விவசாயச் சங்கங்களை ஊக்குவித்தல் ஆகியவை இந்த இயக்கத்தின் குறிக்கோள்களாகும்.

மேலும் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் பல்வேறு உட்கூறுகளை உள்ளடக்கி கீழ்க்கண்ட மூன்று சிற்றியக்கங்களை கொண்டுள்ளது.

சிற்றியக்கம்– 1 – தொழில்நுட்பப் பெருக்கம் மற்றும் ஆராய்ச்சி

2 – தொழில்நுட்பச் செயலாக்கம் மற்றும் வளர்ச்சி

3 – அறுவடைக்குப் பின்பு மேலாண்மை மற்றும் விற்பனைத் தொடர்பை ஏற்படுத்துதல்

**விரிவான தரிசு நிலத் திட்டம்**

தமிழ்நாட்டில் உள்ள தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றிட தமிழ்நாடு அரசு விரிவான தரிசு நிலத் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. தரிசு நிலத்தில் நடவு செய்யத் தேவையான தரமான நடவுச் செடிகள் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன. மா, கொய்யா, சப்போட்டா, முந்திரி, நெல்லி, எலுமிச்சை போன்ற தோட்டக்கலைச் செடிகள் 2002–2003ஆம் ஆண்டில் 8,500 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டது. 2003–2004ஆம் ஆண்டிலும் இது வரையில் 15,000 எக்டேர் பரப்பில் தோட்டக்கலைச் செடிகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

**வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்**

தோட்டக்கலைப் பயிர்களில் ஏற்றுமதி வாய்ப்பை கருத்தில் கொண்டு 2002–2003ஆம் ஆண்டில் 3 வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலங்கள் ஓசூர் மற்றும் நீலகிரியிலும் மாவிற்காக ஒரு ஏற்றுமதி மண்டலம் தேனியிலும் (மதுரை, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கியது) 2003–2004ஆம் ஆண்டில் வாழைக்காக திருச்சிராப்பள்ளி மாவட்டமும் முந்திரிக்காக கடலூர் மாவட்டமும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களாக அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

ஊரகப் பகுதிகளில் தொழில் முதலீடு, வேலைவாய்ப்பு போன்ற இனங்களை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ரூ.1 கோடி





முதலீட்டில் சிறு அளவிலான தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது ஆகும். இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பொருட்கள் பதப்படுத்துதல், மலர்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பொருட்கள் ஆகிய இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

**தமிழ்நாடு துல்லிய தோட்டக்கலை பண்ணை அமைத்தல்**

தருமபுரி மாவட்டத்தில், தமிழக அரசின் சிறப்புத் திட்டமான "தமிழ்நாடு துல்லிய தோட்டக்கலைப் பண்ணையம்'' அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. விவசாயிகளின் நிலங்களில் 1,000 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள், சொட்டுநீர்ப் பாசனம் மற்றும் நீர்வழி உரமிடுதல் ஆகிய நவீன தொழில்நுட்பங்களில் சாகுபடி செய்யப்படும். இத்திட்டம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மூலம் தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தர மேம்பாடு மற்றும் மாற்றுப்பயிர் மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி மாவட்டத்தில் தேயிலையின் தரத்தினை மேம்படுத்தி அதன்மூலம் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வழி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தேயிலை வாரியமும் தோட்டக்கலைத்துறையும் இணைந்து தேயிலை தர மேம்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்குவதற்காக கிராம அளவிலான விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இத்திட்டத்திற்காக இதுவரையில் ரூ.63 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலையுடன் தகுந்த மாற்றுப்பயிர்களையும் பயிரிடுவது அவசியமாகிறது.



எனவே, புதிய வகைப்பயிர்களின் 'பீக்காநட்' மற்றும் 'மெகடாமியா' போன்ற பயிர்களை அறிமுகப்படுத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பல அடுக்குப் பயிர்கள் முறை, அதாவது தேயிலை தோட்டத்தில் சில்வர் ஒக், மிளகு, ஏலக்காய், ஆரஞ்சு போன்ற பயிர்களை நடவு செய்தல் போன்ற முறைகள் விவசாயிகளால் பின்பற்றப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு 2003–2004ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் மாற்றுப் பயிர் திட்டத்தினை மேம்படுத்த ரூ.50 இலட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


மேலும் மாநிலத் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

**மாநிலத் திட்டங்கள்**

1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
3. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்
4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**மத்திய - மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்கள்**

1. ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்
2. ஒருங்கிணைந்த பழங்கள் அபிவிருத்தித் திட்டம்
3. ஒருங்கிணைந்த நறுமண சுவைப் பயிர்கள் திட்டம்
4. காய்கறிகள் மற்றும் வேர் மற்றும் கிழங்குப் பயிர்கள்
5. ஒருங்கிணைந்த மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்
6. ஒருங்கிணைந்த கோக்கோ அபிவிருத்தித் திட்டம்
7. வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம்
8. காளான் அபிவிருத்தித் திட்டம்
9. தோட்டக்கலையில் பிளாஸ்டிக்கின் பயன்பாடு
10. தோட்டக்கலை அபிவிருத்திக்கான புதுமைத் திட்டங்கள்





மாநிலத் திட்டங்களில் தோட்டக்கலைச் செடிகள், வீரிய ஒட்டு காய்கறி விதைகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள் போன்றவைகள் 50 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுக்கும் நோக்கிலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடனும் தோட்டக்கலைச் செடிகள் 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்யப் படுகின்றன. மேலும் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கவும் நிதி உதவி வழங்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்களே பெரும்பங்கு வகித்து வருவதால் இம்மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும் திட்டங்களில் முந்திரி, மா, பலா, கொய்யா, எலுமிச்சை போன்ற பல்லாண்டுப் பயிர்கள் பரப்பு விரிவாக்கத்திற்கான தரமான செடிகள் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டன. கொய்மலர்கள் (Cut Flowers) மற்றும் கனகாம்பரம், செவ்வந்தி போன்ற மலர்கள் பரப்பு விரிவாக்கத்திற்கும் கோக்கோ பரப்பு விரிவாக்கத்திற்கும் 25 சதவிகித மானிய விலையில் செடிகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன. மேலும் நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு விவசாயிகளின் நிலங்களில் செயல்விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. இவைகள் தவிர, உயர் தோட்டக்கலை தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்துகொள்ளும் பொருட்டு கீழ்கண்டுள்ள இனங்கள் 2003–2004ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன.

**உயர் தொழில்நுட்ப செயல்விளக்கப் பண்ணை அமைத்தல்**

உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்கப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. 20 எக்டேர் பரப்பில் விவசாயிகளின் சம்மதத்துடன் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிலங்களை தேர்வு செய்து இந்தப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் காய்கறி பயிர்களில் இப்பண்ணைகள் அமைக்கப்பட்டன.

**விரிவாக்கப் பணியாளர்களுக்கான பயிற்சி**

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியில் புகுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைய விரிவாக்கப் பணியாளர்களின் பங்கு இன்றியமையாதது. தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு நமது மாநிலத்திலும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலும் உள்ள தோட்டக்கலை மையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டன.

**விவசாயிகள் பயிற்சி**

நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிக்காக விவசாயிகள் நமது மாநிலத்திலும் அண்டை மாநிலங்களிலும் உள்ள வேளாண் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் முன்னோடி விவசாயிகளின் நிலங்கள் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப் பட்டுள்ளார்கள். இந்த நிதியாண்டு முடிவிற்குள் 10,000 விவசாயிகளுக்கு இவ்வித பயிற்சி அளிக்கப்படும்.

**தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம்**

விரிவாக்கப் பணிகளில், புதிய கண்டுபிடிப்புகள் விவசாயிகளைச் சென்றடைவது மிக முக்கியமான ஒன்றாகும். எனவே, செயல்விளக்கம் அமைத்தல் மற்றும் பயிற்சி அளிப்பதுடன், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி தொழில்நுட்பங்களை அச்சிட்டு புத்தக வடிவில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதுதவிர விழிப்புணர்ச்சி முகாம்கள், கருத்தரங்குகள் ஆகியவைகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாட்டில் தோட்டக்கலை வளர்ச்சிக்கென மேற்கூறிய பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. இவ்வாறு கடந்த 2001–2002, 2002–2003 மற்றும் 2003–2004 (டிசம்பர் முடிய) ஆகிய காலகட்டத்தில் மாநிலத் திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ.28 கோடியும், மத்திய மாநில அரசுகள் பங்குபெறும் திட்டங்களின் கீழ் ரூ.40 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

**– இயக்குநர்**
**தோட்டக்கலை மற்றும்**
**மலைப்பயிர்கள் துறை.**





# உங்கள் வலிமையே என் வலிமை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

கிருஷ்ணகிரியைத் தலைநகராகக் கொண்டு அமையும் இந்த கிருஷ்ணகிரி மாவட்டத் தொடக்க விழாவில் கலந்துகொண்டு என் அன்புக்குரிய கிருஷ்ணகிரி மக்களாகிய உங்கள் அனைவரையும் காண்பதற்கு இன்று எனக்குக் கிடைத்து இருக்கும் இந்த இனிய வாய்ப்பு குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாவட்டத்தின் தொடக்க விழா இன்று என்றாலும், இந்தப் பகுதி 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றைக் கொண்டது என்பதில் மாவட்டத்து மக்கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்ளலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டம் சுவாரஸ்யமான வரலாற்றைக் கொண்டது. 18–ஆம் நூற்றாண்டிலேயே கிருஷ்ணகிரி மாவட்டம் செயல்பட்டிருக்கிறது.

இப்போது 21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறுபடியும் கிருஷ்ணகிரி மாவட்டம் செயல்படத் தொடங்குகிறது.

இடைக்காலத்தில், கிருஷ்ணகிரியிலிருந்து தலைநகரம் தருமபுரிக்கும், 1830இல் சேலத்துக்கும், பின்னர் ஒசூருக்கும், மீண்டும் 1860 ஆம் ஆண்டு சேலத்துக்கும் மாற்றப்பட்டு, 1965 ஆம் ஆண்டு சேர்வராயன் மலைக்கு வடக்கே உள்ள பகுதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டு தருமபுரி மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்டது.

200 ஆண்டுகளுக்கு முன் மாவட்டத் தலைநகராயிருந்து, அந்தத் தகுதியைப் பின்னால் இழந்துவிட்ட கிருஷ்ணகிரி, இன்றைக்கு உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் மறுபடியும் மாவட்டத் தலைநகரம் என்னும் தகுதியைப் பெறுகின்றது என்பது உங்களைப் போல எனக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது.

"தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துப் புதியதாக ஏற்படுத்தப்படும் மாவட்டம், கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும்" என்று எனது அரசின் 2001 – 2002 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் அறிவித்தோம். எனினும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளைப் புதிதாக வரையறை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணையம் இதுவரை உள்ள நிருவாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றக் கூடாது என்று தடை விதித்து இருந்ததால் இந்த அறிவிப்பை உடனடியாக நடைமுறைப்படுத்த இயலவில்லை. தருமபுரி மாவட்டத்தைப் பிரிப்பதற்கான

சிறப்பு அனுமதி இந்த ஆணையத்திடம் இருந்து அண்மையில் பெறப்பட்ட பின், அதற்கான அரசாணை 20.11.2003இல் வெளியிடப்பட்டு, இன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தின் தொடக்க விழா சீரோடும் சிறப்போடும் இங்கு நடைபெறுகிறது.

## ரூ.10 கோடியில் பெருந்திட்டவளாகம்

புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தியபின் பல ஆண்டுகளுக்குப் பின்பு அலுவலகக் கட்டடங்கள் போன்ற கட்டமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படுவது கடந்த கால வரலாறு. அரசு அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் வாடகைக் கட்டடங்களில் செயல்படுவதால், மக்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். எனது அருமை கிருஷ்ணகிரி மாவட்டத்து மக்களுக்கு இதுபோன்ற இன்னல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே, மாவட்டப் பெருந்திட்ட வளாகம் அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பித்துள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



ஒருபெரிய மாவட்டம் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்படும்போது, மாவட்ட நிருவாகம் மற்றும் மாவட்ட மக்கள் ஆகிய இரு தரப்புக்கும் பயன் விளைகிறது. மாவட்டம் சிறியதாக இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட அலுவலர்கள் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அடிக்கடி சென்று மக்களின் தேவையை அறிந்து பணியாற்ற முடியும். மாவட்ட மக்கள், மாவட்டத் தலைநகருக்கு எளிதில் சென்று மாவட்ட அலுவலர்களைச் சந்திக்க இயலும்; பயணச் செலவும் குறையும். எனவே தான் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றங்களுக்கு வழிகோலும் வகையில் தருமபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் புதிதாக உருவாக்கப்படுவதால், தருமபுரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுமோ என்று எனது அன்புக்குரிய தருமபுரி மாவட்டத்து மக்கள் அஞ்சத் தேவையில்லை என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வீட்டில் எத்தனை குழந்தைகள் இருந்தாலும், அவற்றைத் தாய், பேதம் பிரித்துப் பார்ப்பதில்லை. அதைப் போலவேதான், தாய் உள்ளம் படைத்த உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் தேவையான அனைத்து வளர்ச்சிப் பணிகளையும் பேதம் ஏதுமின்றி வழங்குவேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## புதிய வரலாறு தொடங்குகின்றது

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட இந்த மாவட்டம் 2 நகராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்கள், 7 பேரூராட்சிகள், 337 ஊராட்சிகள் ஆகியவற்றோடும் 2 வருவாய்க் கோட்டங்கள், 5 வருவாய் வட்டங்கள் ஆகியவற்றோடும் தனி மாவட்டமாய்ப் புதிய வரலாற்றை இன்று தொடங்குகின்றது.

இன்று புதிதாகத் துவக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் தருமபுரி மாவட்டத்து மக்கள் பயனடையும் வண்ணம் மொத்தம் 101 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பிலான, முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 18,568 பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட

உதவிகளை வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### முடிவுற்ற பணிகள்

இந்தச் சீர்மிகு விழாவில் புதிதாக இன்று துவக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 23 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட 3,754 வளர்ச்சிப் பணிகளையும், தருமபுரி மாவட்டத்தில் 17 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்ட 3,314 பணிகளையும் இன்று திறந்து வைத்ததில், மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை மூலமாக, 9 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பில், பள்ளி வகுப்பு அறைகள், சமுதாயக் கூடம், குடிநீர் வசதிகள், பாலங்கள், ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தும் பணி, அவசர விபத்து சிகிச்சை மையம், அறுவை சிகிச்சை அரங்கம் போன்ற பல்வேறு பணிகளையும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, 4 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட தனி மின் விசைத் திட்டம், சிறு மின் விசைத் திட்டங்கள் போன்ற குடிநீர்ப் பணிகளையும், தடுப்பு அணைகளையும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக, 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் சாப்பர்த்தி குட்டி கவுண்டனூரில் கட்டி முடிக்கப்பட்ட 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தினையும் இன்று திறந்து வைத்ததில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நகராட்சித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சி மற்றும் வனத்துறை மூலமாக, 22 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்களையும், பட்டு உற்பத்தி மையம், தார்ச் சாலைகள், கதிர் அடிக்கும் களங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக் கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், சிறு பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், அலுவலகக் கட்டடம், புதிய பேருந்து நிலையம், வணிக வளாகம் போன்ற பல்வேறு பணிகளையும் இன்று திறந்து வைத்ததில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

மிகப்பெரிய பணக்காரர் ஒருவர் இருந்தார். பிரம்மாண்டமான மாளிகை! பதினைந்து கார்கள்! வங்கியில் ஏகப்பட்ட பணம்! அந்த நகரத்திலேயே அவர்தான் பெரிய பணக்காரர்!

ஒருநாள் ஒரு நண்பர் அவரைப் பார்க்க வந்தார். அப்பொழுது அந்தப் பணக்காரர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.


“என்ன சார், கப்பல் கவிழ்ந்து விட்டது மாதிரி கன்னத்தில் கை வைத்து உட்கார்ந்து விட்டீர்கள்! அப்படி என்ன கவலை உங்களுக்கு?” என்று நண்பர் கேட்டார். “கப்பல் கவிழ்ந்திருந்தால் கூடப் பரவாயில்லையே; இன்சூரன்ஸ் பணமாவது கிடைத்திருக்கும். இது அதைவிட மோசம்!” என்றார் பணக்காரர்!

“ஓ அவ்வளவு சோகமான விஷயமா?” என்று நண்பர் ரொம்பவும் வருத்தப்பட்டுக் கொண்டே கேட்டார். “ஆம்! என் மனைவி பணம் கேட்கிறாள்” என்றார் பணக்காரர். பல ஆண்களுக்கு மனைவி பணம் கேட்பதே சோகமான விஷயம்தான். நண்பர் நினைத்துக் கொண்டார். நிச்சயம் பல இலட்சம் ரூபாயாவது பணக்காரரின் மனைவி கேட்டிருக்க வேண்டும். “ஆமாம், அவ்வளவு ஊதாரியா உங்கள் மனைவி?” என்று கேட்டார் நண்பர். “அதை ஏன் கேட்கிறீர்கள்? முந்தாநாள் 5 ரூபாய் கேட்டாள்; நேற்று 10 ரூபாய் கேட்டாள். இன்றைக்கு (சொல்லும்போதே துக்கம் தொண்டையை அடைக்க) இன்றைக்கு காலையில், 15 ரூபாய் கேட்டாள்!” என்று பணக்காரர் ஆதங்கத்தோடு பதில் சொன்னார். நண்பராலும் இந்த அநியாயத்தைத் தாங்க முடியவில்லை. ஏனென்றால் அவரும் அப்படித்தான்! அவர் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய மனைவி வேலை பார்க்கிறார். மனிதர் பொல்லாதவர். 1 ஆம் தேதி பிறந்து விட்டால் மனைவி வாங்குகின்ற முழு சம்பளத்தையும் அப்படியே சுளையாக அவர் கையில் ஒப்படைத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் அந்த மனிதருக்குப் பைத்தியம் பிடித்துவிடும். கண்ணை மூடிக்கொண்டு கத்த ஆரம்பித்து விடுவார். அப்படிப்பட்டவர் அவர்! ஆகவே பணக்கார நண்பரின் மனைவி தன் கணவரிடத்தில் 15 ரூபாய் பணம் கேட்டது அவருக்கு பயங்கரமாகத் தெரிந்தது.

அவர் கேட்டாராம் – “அப்படி அவ்வளவு பணத்தை வாங்கிக் கொண்டு என்ன செய்கிறார்களாம் அந்த அம்மா?” பணக்காரர் பதில் சொன்னாராம். “எனக்கு எப்படித் தெரியும்? நான்தான் கொடுப்பதே இல்லையே!” என்றாராம். கேட்டது அதிகபட்சம் 15 ரூபாய்; கேட்டவர் கட்டிய மனைவி! பணக்காரக் கணவரோ 10 பைசாக் கூட கொடுக்கவில்லை. ஆனால் மனைவி பணம் கேட்ட சோகத்தை அவரால் தாங்க முடியவில்லை.

இந்த கோடீஸ்வரரைப் போன்ற கோமான்களும் தமிழகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்றால் அந்தக் கஞ்சப் பிரபுக்களுக்கு திடீரென்று மக்கள் மீது கரிசனம் பிறந்து விடும். என்றைக்காவது எதையாவது கொடுத்து விட்டு நாங்கள் இப்படித்தான் எல்லோருக்கும் கொடுப்பது வழக்கம் என்று நாக்கூசாமல் பொய் சொல்லுவார்கள்.

மக்கள், ஒரு கேலிச்சிரிப்போடு இந்த மகானுபாவர்களின் நன்கொடை நாடகத்தைப் பார்த்துக்





கொண்டிருக்கிறார்கள் என்பது பாவம் இவர்களுக்குத் தெரியாது.

## அடிக்கல் நாட்டுதல்

இந்த இனிய விழாவில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 25 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவிருக்கும் 373 பணிகளுக்கும், தருமபுரி மாவட்டத்தில் 21 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவிருக்கும் 263 பணிகளுக்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் தாட்கோ நிறுவனம் மூலமாக 14 கோடி ரூபாய் மதிப்பில் மாணவர் விடுதிகள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள், பள்ளி வகுப்புஅறை கட்டடங்கள், மருத்துவமனை மற்றும் பள்ளிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் படுக்கை வசதி, அறுவை சிகிச்சை அரங்கம், உயர்மட்ட பாலம், சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளுக்கும், இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஊரக வளர்ச்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் கல்வித் துறை மூலமாக 19 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுகாதார வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், தார்ச்சாலைகள், சிறு பாலங்கள், கதிர் அடிக்கும் களங்கள், கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், குடிநீர்ப் பணிகள், பேருந்து நிலையம் ஆகியவை கட்டுவதற்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலமாக 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பில் தனி மின் விசை, சிறுமின் விசை திட்டப் பணிகள், தடுப்பு அணை போன்ற பணிகளுக்கும், எம்.செட்டி அள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் மின்சார வாரியத்தின் மூலமாக ஆலப்பட்டியில் 1 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கவும் அடிக்கல் நாட்டியதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## விவசாயம் மற்றும் தரிசு நில மேம்பாடு

தமிழக மக்கள் தொகையில் 62 சதவீதத்தினரின் வாழ்க்கைக்கு வேளாண்மையே ஆதாரமாக அமைந்துள்ளதால் வேளாண்மைத் தொழிலுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

தமிழக விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு நீர் ஆதாரங்களைப் பெருக்கவும், தற்போதுள்ள நீர் ஆதாரத்தை மேம்படுத்தவும் கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் மொத்தம் 10 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பில் 10 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ள நான் சமீபத்தில் உத்தரவிட்டுள்ளேன்.

இத்திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப் பட்டி வட்டத்தில் உள்ள 18 ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில் 86 இலட்சம் ரூபாய் செலவில் பொதியம்பள்ளம் அணைக்கட்டினை சீரமைத்து நவீனப்படுத்துவதற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கப்பல்வாடி அணைக்கட்டில் இருந்து சென்றாயநாயக்கன் ஏரி, சோழன்குட்டை ஏரி,

மற்றும் இதர ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில் 85 இலட்சம் ரூபாய் மதிப்பில் வரத்துக்கால்வாய்களை ஆழப்படுத்தும் பணிகளுக்கும், போச்சம்பள்ளி வட்டம், பெனுகொண்டபுரம் ஏரியின் வாய்க்காலில் இருந்து அத்திப்பள்ளம் ஏரி வாய்க்காலுக்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் இணைப்பு வாய்க்கால் அமைக்கும் பணிக்கும் இன்றைக்கு அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் 1,021 ஏக்கர் நிலம் பயன்பெறும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், வேளாண் பொறியியல் துறையின் மூலமாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாய்க்கால் அமைத்தல் மற்றும் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் 1 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டு அவற்றை இன்று நான் திறந்து வைத்துள்ளேன். 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் கால்வாய் அமைத்தல் மற்றும் மண் வளப்




பாதுகாப்புப் பணிகளுக்காக அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 1000 ஏக்கரில் தோட்டக்கலைப் பயிர் துல்லியப் பண்ணையம்

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில், தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை வெகுவாக மேம்படுத்தும் வகையில் உயரிய தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு 1000 ஏக்கர் நிலப்பரப்பில் 7 கோடியே 21 இலட்சம் ரூபாய் செலவில் தோட்டக்கலைப்பயிர்களுக்கான துல்லியப் பண்ணையம் அதாவது Precision Farming அமைத்துச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளேன். இத்திட்டத்தின் மூலம் தோட்டக்கலைப் பணிகள், வேளாண் பொறியியல் பணிகள், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி Post Harvest Measures ஆகியவற்றை மேற்கொள்வதுடன் விவசாயிகளுக்கும் உரிய ஆலோசனைகளும் வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் தற்போதைய உற்பத்தித் திறன் 40 விழுக்காடு அதிகரிக்கும். தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்சாகுபடி செய்யும் விவசாயிகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியையும், பெரும் வளர்ச்சியையும் இது உருவாக்கும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து தரிசு நிலங்களையும், விவசாயப் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய இலட்சியத்தோடு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை நான் கொண்டு வந்தேன். இத்திட்டத்தின் கீழ் பயிரே செய்யப்படாமல் வீணாகக் கிடக்கும் தரிசு நிலங்கள் விளைநிலங்களாக மாற்றப்படும். அரசின் தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், சிறு நிறுவனங்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்குக் குத்தகைக்கு விட நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், தனியாரிடம் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தி அவற்றை விளை நிலங்களாக மாற்றப் பல்வேறு திட்டங்களை எனது அரசு நிறைவேற்றி வருகிறது.

வறட்சிக்கு இலக்கு ஆகி வரும் கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் மானாவாரி சாகுபடியில் உற்பத்தியினை உயர்த்திடவும், நீர் மற்றும் மண்

வளத்தினைப் பாதுகாத்திடவும், 2 இலட்சத்து 70 ஆயிரத்து 574 ஏக்கர் நிலம் பயனடையும் வகையில், 57 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## சமூகப் பொருளாதாரத் திட்டம்

1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டுக் கிடந்தன. கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தின்போது நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கிவிட்டன. தற்போது தருமபுரி மாவட்டத்தில் இருந்த நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகளை எனது அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கி இம்மாவட்ட மக்கள் அச்சமின்றி வாழ வழிவகை செய்துள்ளது.

இம்மாவட்டத்தில் நிலவி வரும் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுச் சூழ்நிலைகள் காரணமாக இளைஞர்கள் நக்சலைட்டுகள் போன்ற தீவிரவாத இயக்கங்களுக்குச் செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் இளைஞர்களின் வாழ்வு வளம்பெற 5 கோடி ரூபாய் செலவில் சமூகப் பொருளாதாரத் திட்டம் ஒன்றினை நான் ஏற்படுத்தியுள்ளேன் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

100 கிராமங்களில் இளைஞர் குழுக்கள் அமைத்து விளையாட்டுத் திறனை மேம்படுத்துதல், அறிவை வளர்க்கும் வகையில் நூலகங்கள் அமைத்தல், பட்டு வளர்ச்சித் தொழிலில் ஈடுபடப் பயிற்சி அளித்தல்; காவல் துறை மற்றும் ராணுவத்தில் சேர்ந்திட சிறப்புப் பயிற்சிகள் வழங்குதல்; மற்றும் வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்குதல்; துணைச் சுகாதார மையங்கள் அமைத்தல்; சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கூடுதல் தெருவிளக்குகள் அமைத்தல்; இளைஞர்களுக்குச் சுகாதாரப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எனது ஆணைக்கு இணங்க தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தொழில் முனைவோர் பயிற்சிகள், திறன் நுட்பப் பயிற்சிகள் மற்றும் தொழில் தொடங்க கடன் உதவி வழங்க 716 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து நான் மனநிறைவு அடைகிறேன்.

## உழைப்பால் உயர வேண்டும்

ஒருவருக்கு ஏகப்பட்ட நிலம் இருந்தது. 7000 ஏக்கருக்கு மேல் பரந்து விரிந்து கிடந்தது அந்த நிலம். ஆனால் எல்லாம் பொட்டல் வெளி. கொஞ்சம் தண்ணீர் வசதி இருந்தது என்றாலும் பயிர் பச்சை விளையாத கட்டாந்தரையாக நிலம் இருந்ததால் வேளாண்மை செய்யவில்லை; வருமானத்துக்கும் வழியில்லை.

“இந்த நிலத்தை விற்று விட்டால்தான் என்ன?” என்று நினைத்தார்.

அவருடைய நாட்டம் எல்லாம் எங்காவது வைரச் சுரங்கத்தைக் கண்டுபிடித்து பெரும் பணக்காரராக ஆக வேண்டும் என்பதில் இருந்தது.

ஒரு நாள் வந்த விலைக்கு நிலத்தை விற்றுவிட்டு வைரச் சுரங்கத்தைத் தேடி நாடு நாடாகத் திரிந்தார். ஆப்பிரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில், அவர் தேடாத இடம் இல்லை. ஆனால் வைரச் சுரங்கம் இருக்கும் இடம் எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை. கையில் இருந்த பொருள் எல்லாம் கரைந்து போய்விட்டது. ஏறத்தாழ பிச்சைக்கார நிலைக்கு வந்து விட்டார். மனதிலே பாரம். உடலிலே நோய்கள். கையிலோ காசில்லை. இவ்வாறு வறுமையிலும் மன வருத்தத்திலும் வாடிய அவர் ஆற்றிலே குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

அவரது நிலை அப்படியிருக்க அவரிடம் நிலத்தை வாங்கினாரே அவர் என்ன செய்தார்? மேடு பள்ளத்தைச் சமமாய் ஆக்கினார்; நிலத்தடி நீரைக் கஷ்டப்பட்டு மேலே கொண்டு வந்தார். அவரது உழைப்பால் அந்த நிலத்தின் சிற்றோடைகளில் தண்ணீர் ஓடியது. ஒரு நாள் அந்த வழியாக ஒட்டகத்தில் வந்த ஒருவர், தண்ணீர் பருக அங்கே வந்தார்.

நீரோடைகளில் நீர் குடிக்கக் குனிந்தவர் அங்கே கிடந்த கற்களில் வான வில்லின் ஜாலம் தெரிவதைப் பார்த்தார்.

அனுபவசாலியான அவருக்கு உண்மை ஒரு நொடியில் விளங்கியது. அவர் பார்த்த கற்கள் அத்தனையும் வைரம்!

வழிப்போக்கர் விஷயத்தை நிலத்துச் சொந்தக்காரரிடம் சொன்னார்.

அந்த நிலம் முழுதும் வைரக் கற்கள் கிடைத்தன. அந்த நிலத்தின் உரிமையாளர் கோடி கோடியாகச் சம்பாதித்தார்.

நிலத்தை விற்று விட்டுப் போனவர் வெளிநாடுகளில் வைரத்தைத் தேடியே வாழ்வை முடித்துக் கொண்டார். அவரிடம் நிலத்தை வாங்கியவருக்கோ அந்த நிலம் முழுவதுமே வைர வயலாக அமைந்திருந்தது.

இதுதான் விதியா? சொர்க்கம் எங்கோ இருக்கிறது என்று நினைக்கிறான் சோம்பேறி மனிதன்.

அது தன் காலடியிலேயே இருக்கிறது என்பதைக் கண்டுகொள்கிறான் உழைப்பாளி.

உங்களிடம் உள்ள திறமையைக் கொண்டு உங்கள் உழைப்பால் அரசு தரும் உதவியைப் பயன்படுத்தி நீங்கள் வாழ்வில் உயர வேண்டும் என்பதே உங்கள் அன்புச் சகோதரியான எனது வேண்டுகோள்!

### நலத்திட்ட உதவிகள்

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் விரைந்து சென்று அடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் உண்டு. என்னுடைய எண்ணத்தை ஈடேற்றும் வண்ணம் புதியதாக அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 8,385 பயனாளிகளுக்கு 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 10,183 பயனாளிகளுக்கு 6 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் இந்த மாபெரும் விழாவில் வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஊரக வளர்ச்சித்துறை, மகளிர் திட்டம் மற்றும் தாட்கோ நிறுவனம் மூலமாக 17,968 பயனாளிகளுக்கு, 12 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய வீடுகள், சுழல் நிதி மற்றும் தொழில் தொடங்க கடன் உதவிகள் போன்றவையும், வருவாய்த் துறை மூலமாக 463 பயனாளிகளுக்கு, 38 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிலப்பட்டா, வீட்டுமனைப் பட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை போன்ற உதவிகளையும், சமூக நலத்துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலமாக 48 பயனாளிகளுக்கு 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவி, மூன்று சக்கர வண்டிகள், சலவைப் பெட்டி போன்ற உதவிகளையும், வேளாண்மைத் துறை மூலமாக 76 பயனாளிகளுக்கு 19 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு உதவிகளையும் வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன்.

### மக்கள் தீர்ப்பு

ஓர் ஆற்றில் நிறைய வெள்ளம் போய்க் கொண்டிருந்தது. அங்கே ஓர் மனிதர் வந்தார். ஆற்றைக் கடக்க வேண்டும் என்ன செய்வது என்று தெரியாமல் அவர் நின்று கொண்டிருந்தார். அவர் ஏற்கெனவே பயந்த சுபாவமுள்ள மனிதர். எனவே, அவர் எப்படி ஆற்றைக் கடந்து செல்வது, என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில், ஒரு வலிமையான காளைமாடு வந்து கரையில் நின்றது. கண நேரத்தில் அது ஆற்றுக்குள் குதித்து நீந்தத் தொடங்கியது. அப்போது




கரை அருகே விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவன் உடனே ஆற்றிலே குதித்தான். காளை மாட்டின் வாலை உறுதியாகப் பிடித்துக் கொண்டான். காளை மாடும் விரைவாக நீந்தியது. வாலைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தச் சிறுவனும் அதன் பின்னாலேயே போனான். காளைமாடு கரை ஏறியது. அந்தச் சிறுவனும் கரை ஏறினான்.

“ஓ, இப்படிக் கூட ஆற்றைக் கடக்கலாமோ?” என்று அந்த மனிதர் நினைத்தார். நமக்கு ஒரு காளைமாடு அகப்படாதா என்று தேடிப் பார்த்தார். அப்போது அந்தப் பக்கம் நாய் ஒன்று வந்துகொண்டிருந்தது.

நாய் ஆற்றுக்குள் குதித்தது. இந்த மனிதரும் உடனே ஆற்றுக்குள் குதித்தார்; குதித்து, நாயின் வாலை இறுகப் பிடித்துக் கொண்டார். நாய் தத்தளிக்கத் தொடங்கியது. அந்த மனிதரோ நாயின் வாலை விடவே இல்லை. எந்தச் சனியனோ தன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று பயந்து போன நாய் கடிக்கப் பார்த்தது. அந்த மனிதர் நாய் வாலைப் பிடித்துத் தொங்கத் தொடங்கினார். அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து பாருங்கள்!

நடு ஆற்றுக்குள் வருகிறபோது நாய்க்கும் அந்த மனிதருக்கும் நடந்தது ஒரு ஜீவ மரணப் போராட்டம்! ஒரு சில நொடிகள் தான்! நாய் நீந்த முயற்சிக்க மனிதர் அதன் வாலைப் பிடித்துத் தொங்க, நாயையும் அந்த மனிதரையும் சேர்த்து ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விட்டது.



நாய், தான் மட்டும் நீந்தியிருந்தால் ஒரு வேளை உயிர் பிழைத்திருக்கக் கூடும். பாவி மனிதர் அந்த நாயையும் நீந்த விடாமல் சாகடித்து விட்டார்.

இந்தக் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? அகப்பட்டதை துணைக் கொண்டால் என்றைக்கும் ஆபத்து!

நாய் வாலைப் பிடித்துக் கரையேற நினைத்த மனிதருக்கு ஆற்றைக் கடக்க ஆசை இருந்த அளவுக்கு அறிவு இல்லை.பாவம்! அந்த நாயின் நிலைதான் பரிதாபத்துக்குரியது!

இந்தக் கதை எந்தெந்தக் கூட்டுகளையோ உங்களுக்கு நினைவூட்டலாம். அப்படி நினைவூட்டி அவர்கள் யார் யார் என்று நீங்கள் கற்பனை செய்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பு அல்ல. ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். "மக்கள் தீர்ப்பு" என்ற மகத்தான வெள்ளத்திலே அவர்கள் அடித்துச் செல்லப்படுவது உறுதி! உறுதி!

என்னைப் பொறுத்தவரையில், உங்கள் துணை – மக்கள் துணை – என்றென்றும் உண்டு. உங்கள் வலிமையே என் வலிமை என்பதால் எனக்கு எங்கும் வெற்றி தான்! எதிலும் வெற்றி தான்!

எனது முயற்சிகளில் எல்லாம் எனக்குப் பக்கபலமாக நிற்கும் உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம், நானே எனது கைகளாலேயே பயனாளிகள் அனைவருக்கும் வழங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் இந்த மேடையில் 15 பேருக்கு மட்டும் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும் இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும் வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.ஏ. சித்திக் அவர்களுக்கும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மங்கத்ராம் சர்மா அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும் மற்றும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!
புரட்சித்தலைவர் நாமம் வாழ்க!
எனக்கூறி விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்!

(9.2.2004 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத் துவக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா**
அவர்கள் ஆற்றிய உரை)



# நிதிநிலை அறிக்கை 2004 - 2005

**தமிழக அரசின் நிதியமைச்சர் திரு. சி.பொன்னையன் அவர்கள், 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை, 2004 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவை முன்வைத்து ஆற்றிய உரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.**

( துன்பம் வருங்கால் அதற்கு இரையாகாது, தளரா உள்ளத்துடன், எதிர்நோக்குபவர் முன் அத்துன்பமே நலிவுற்றுத் துயருற்று அஞ்சிப் பின்வாங்கிச் சென்று விடும்.)

சீரிய சிந்தனையும் மனஉறுதியும் தெளிந்த தொலை நோக்குப் பார்வையும் பேராற்றலும் கொண்டு தமிழ்நாட்டை வளமிக்க வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நிலை நிறுத்திய எனது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களது நல்லாசியுடன் 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு களையும், 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம் மாமன்றத்தின் முன்வைக்க நான் விழைகிறேன்.

2. தமிழ்நாடு கடந்த காலத்தில் எய்திய பெரும் புகழ், பலமுனை வளர்ச்சி மற்றும் வளமான நிலை ஆகியவற்றிற்கு மீண்டும் திரும்பும் என்கிற நம்பிக்கையுடன், தமிழ்நாட்டு மக்கள், 2001 மே திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குபிரம்மாண்ட வெற்றியை அளித்து மீண்டும் பொறுப்பேற்கச் செய்தனர். இன்று அவர்களுடைய எதிர்பார்ப்புகளும், கனவுகளும் ஈடேறியுள்ளன. வளர்ச்சியினை ஒட்டுமொத்தமாக நிலைகுலையச் செய்து சீரழியச் செய்யும் நிதிச் சரிவுகண்ட துன்பம்மிக்க 1990 ஆம் ஆண்டுகளின் பின்பகுதியை தமிழ்நாடு கடந்து வந்துள்ளது. மிகப் பாதகமான சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் உறுதியான

முடிவுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெளிவான சிந்தனையுடனும் அரசின் நிதிநிலையைச் சீர்செய்ய மாபெரும் முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். இம்முயற்சியின் பயன்கள் வியக்கத் தக்க வகையில் அமைந்துள்ளன. தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வகையில் நிதிநிலை திருப்பத்தை எய்தியுள்ளது. வளர்ச்சிக் கோட்பாடுகள் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் மீண்டும் முடிவான நோக்கமாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் கருத்தில் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம், இந்நோக்கத்தை உள்ளடக்கியதாக இருப்பதுடன், இம்மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிடும் வகையிலும் அமைந்துள்ளது. இவை அனைத்தும், நிதிச்



முன்னிறுத்தப்பட்டுள்ளன. மூன்றாண்டுகளுக்கும் மிகக்குறைவான கால அளவுக்குள் இச்சாதனை எய்தப்பட்டுள்ளது. இது, எங்களுடைய தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் திறமைவாய்ந்த ஆற்றல்மிகு தலைமையின் கீழ் இந்த அரசு எய்திய குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

3. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் நிலவிய சரி செய்ய இயலாததாக தோற்றமளித்த நிதி நிலைமையினை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். தொடர்ந்து மூன்றாண்டுகளாக பருவமழை பொய்த்து அதன் விளைவாக, 2002–2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி, நிதி நிலைமையைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை மேலும் சிக்கலாக்கியது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், செயலிழக்கச் செய்யும் இத்தகைய இன்னல்களைக் கடந்து இம் மாநிலத்தை இருளிலிருந்து ஒளிமயமான பாதைக்கு தன்னிகரற்ற தலைவியாக முன்னின்று நடத்திச் சென்றார்கள்.

4. மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பொருளார்ந்த மேம்பாடுகளை உறுதிசெய்வதே, ஆளுகையின் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நல்ல நிருவாகம் வாயிலாக சேவைப்பணிகளை மேம்படுத்துதல், வறுமைக் குறைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்தப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தின்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

5. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் வலுவான தலைமையினாலும், ஒவ்வொரு நிலையிலும் சட்டம்–ஒழுங்கை நிருவகிப்பதில் அவர்கள் மேற்கொண்ட தனிக் கவனத்தினாலும் மட்டுமே, தமிழ்நாடு இடர்ப்பாடற்ற அமைதி நிலவும் பூங்கா எனப் போற்றப்படுகிறது. இதனால், நிதி நிலைமையை சரிசெய்து பொருளாதாரத்தைச் சீரமைக்க உதவுவதற்கேற்ற சிறந்த அடித்தளம் அமைந்துள்ளது.

## நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம்

6. பொது நிதியை முறையாக நிருவகிப்பதில் அரசு உறுதியாக இல்லையெனில், மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளை எய்துதல் மற்றும் மக்கள் நலன் பெருமளவு பாதிக்கப்படும் என்பதை, தமிழ்நாட்டிற்கு, 1996–2001 ஆம் ஆண்டுக்கால அளவில் ஏற்பட்ட

அனுபவம் காட்டுகிறது. 1990–களின் மத்திய காலம் வரை நிதிவகையில் நன்கு நிருவகிக்கப்பட்டிருந்த தமிழ்நாடு ஆழமான நிதி இடர்ப்பாடுகளில் சிக்கித் தவித்து, 2000–2001 ஆம் ஆண்டின் இறுதியில் சரிவுப் பாதையில் செல்லத் தொடங்கிவிட்டது என்பது காணப்பெற்றது. நிதி இடர்ப்பாடென்பது புதிதான ஒன்றல்ல என அடிக்கடி எண்ணப்பட்டு வருகிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த எண்ணம் உண்மையானதல்ல; இம்முறை நாம் எதிர்கொண்ட நிதி இடர்ப்பாடு இதற்கு முன்னர் எப்பொழுதும் உணர்ந்திராத ஒன்றாகும். கடன் சுமை அச்சமூட்டும் அளவிற்கு உயர்ந்துவிட்டது, இந்த இடர்ப்பாட்டினைச் சமாளிப்பதற்குத் தேவையான கடன்பெற வாய்ப்பு அமையப் பெறவில்லை. ஒட்டுமொத்தச் சீர்குலைவைத் தடுக்க இந்த அரசு விரைவாகவும், தெளிவான முடிவுடனும் செயல்பட வேண்டியிருந்தது. வறியோர் மீது எவ்விதச் சுமையையும் ஏற்றாது, இது மதி நுட்பத்துடன் செய்து முடிக்கப் பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை யெனில் வளர்ச்சிக்கான புதிய உத்வேகம் அமையப் பெறாது.



7. 2001–2002 ஆம் ஆண்டிற்கான திட்ட முதலீட்டினை ரூபாய் 6,040 கோடியிலிருந்து ரூபாய் 5,200 கோடியாக குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூரலாம். முந்தைய அரசு கொடுக்கத் தவறிய ரூபாய் 4,000 கோடிக்கு மேற்பட்ட செலவுப் பொறுப்பினையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தோடு, அரசுப் பணியாளர் களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ரூபாய் 1,800 கோடி 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதிக்கு அப்பால் கொடுக்கப்படும்படி முடக்கப்பட்டிருந்தது. தமிழ் நாட்டிற்கு 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரைக்கும் கிடைக்கப்பெற வேண்டிய லிக்னைட் உரிமைத் தொகை ரூபாய் 250 கோடியையும் முந்தைய அரசு 2001 மார்ச் திங்களிலேயே முன்னதாகப் பெற்றுவிட்டது. ஆளுகையின் அடிப்படைக் கோட்பாடு இழக்கப் பட்டதுடன், மக்களின் அடிப்படை வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்வதில் மாநிலத்தின் நம்பகத் தன்மைகூட கேள்விக் குறியாக ஆகிவிட்டிருந்தது.

8. மூன்றாண்டுகளுக்கும் குறைவான கால அளவில், 2001ஆம் ஆண்டில் நிலவிய முன்னெப்போதும் இருந்திராத பிரச்சினைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றிகரமாகத் தீர்வு கண்டுள்ளார்கள். முற்றிலும் புதிய, துணிச்சலான தொலைநோக்குப் பார்வை கொண்ட வளர்ச்சிப் பொருள்நிரல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலங்களிடையே தமிழ்நாடு தனக்குரிய முதலிடத்தை அடையச் செய்யும் வகையில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது நிதியை உரிய முறையில் நிருவகிப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதிப்பாட்டினால்தான் இச்சாதனைத் திருப்பம் சாத்தியமாகியுள்ளது. நம்பிக்கையற்றதென கைவிடப்பட்ட சூழ் நிலையைச் சீர் செய்தமைக்கு, தொலை நோக்குப் பார்வை கொண்ட எங்களது தலைவிக்கு இத்தருணத்தில் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

9. கடந்த நிதியாண்டில், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். பொது நிருவாகத்தில் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதி செய்வதற்கும், தகுந்த பொறுப்புடைமைக்கும் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10ஆம் நாள் அன்று திருத்தியமைக்கப்பட்ட இச்சட்டம் ஒரு வழிகாட்டிச் சின்னமாகிவிட்டது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் சீர்திருத்தங்களுக்கும் ஏற்ற தொரு செயல் திட்டத்தைக் கோடிட்டுக் காட்டும் நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கும் பொறுப்பை இச்சட்டம் அரசுக்குக் கொடுத்துள்ளது.

10. மேற்குறிப்பிட்ட பொறுப்பினை நிறைவேற்றும் வகையில், நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம் ஒன்று

தயாரிக்கப்பட்டு வரவு-செலவுத் திட்ட உரையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்த மற்றும் வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையில் இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

❑ இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையினை அறவே நீக்கிட இலக்கிட்டுள்ளது. ஆதாயமற்ற வருவாய் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் கூடுதலான வருவாய் வர்வுகளை உறுதிசெய்வதன் மூலமும் இதனை எய்த வேண்டும்.

❑ அரசின் நிகரக் கடன் பொறுப்புகளைக் குறிக்கும் நிதிப் பற்றாக்குறையானது, நீடித்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான ஒரு வழிவகையாக, 2008-2009 ஆம் ஆண்டிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்குக் குறைவாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

❑ மூலதனச் செலவை 2002-2003 ஆம் ஆண்டிலிருந்த ரூபாய் 1891.50 கோடி என்ற அளவிலிருந்து தொடர்ந்து அதிகரிக்கச் செய்திட அரசு முயலும். சாலைகள், பாலங்கள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட இந்த முன்னுரிமைப்பாடு வகை செய்யும்.

❑ உருவாக்கப்பட்டுள்ள சொத்துக்களை சரிவரப் பராமரிப்பதை உறுதி செய்வதற்காக பராமரிப்பு மற்றும் இயக்கப் பணிகளுக்குக் கூடுதல் முன்னுரிமை அளிக்கப்படும்.

❑ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்த இவ்வரசு கொண்டுள்ள உறுதிப்பாடு இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த கோட்பாடாக அமையும்.

❑ மொத்தத்தில், வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பொருளாதார சீர்திருத்தத் திட்டத்துடன் இணைந்த நடுத்தர கால நிதிநிலைத் திட்டமானது சமுதாயத்தில் வாய்ப்புரிமை இழந்தோர், வறியோர் ஆகியோரது நலனைப் பாதுகாத்து வளர்ச்சி நடைமுறைகளில் அவர்களுக்கு பங்கேற்பு உரிமையை அளிக்கும் வகையில் பொருளாதார உயர் வளர்ச்சி வீதத்தினை அடைய உதவும்.

❑ "அனைவருக்கும் வளர்ச்சி" என்பதே இச்சீர்திருத்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

11. இந்தியப் பொருளாதாரமும், தமிழகத்தின் பொருளாதாரமும் 2002-2003 ஆம் ஆண்டில் வறட்சியின் கடுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டன. நடப்பு விலை நிலவரத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2001-2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2002-2003 ஆம் ஆண்டில் 3.46 சதவிகிதம் ஆக இருந்தது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட முதன்மைத் துறையின் உற்பத்தி அளவுகளில் ஏற்பட்ட கடுமையான சரிவு, காவிரியில் நமக்குச் சட்டப்படி உரிமையுள்ள பங்கு நீரை விடுவிக்க மறுப்பதில் கர்நாடகத்தின் விட்டுக் கொடுக்காத போக்கு, அனைத்துத் துறைகளையும் பாதித்த உலக அளவிலான பொருளாதாரப் பின்னடைவு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட சரிவுக்குக் காரணங்களாகும்.

12. 2003-2004 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி வாய்ப்புகள் ஊக்கம் அளிப்பதாக உள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி 2002-2003 ஆம் ஆண்டில் இருந்ததைவிட தற்போதைய விலை நிலவர அடிப்படையில் 7.17 சதவிகிதமாக இருக்குமென்று தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் வறட்சியினால் ஏற்பட்ட சீரழிவுகளிலிருந்து தற்போது பொருளாதாரம் மீண்டு வருகிறது என்பது தெளிவு. 2003 ஆம் ஆண்டில் பருவகாலச் சூழ்நிலைகள் முற்றிலும் திருப்தி அளிப்பதாக இல்லை யெனினும், பெரும் பிரச்சினைகளைத் திறம்படக் கையாண்டதால் பொருளாதாரம் மீண்டும் உயிரோட்டம் பெற்றுள்ளது.

## 2004-2005 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சிக் கோட்பாடுகள்

13. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15-அம்சத் திட்டத்தின் வாயிலாக "அனைவருக்கும் சுகாதாரமான மற்றும் ஆக்க வளமுடைய வாழ்க்கைக்கான வாய்ப்புகளை" அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு, 2004-2005 ஆம் ஆண்டின் வளர்ச்சிப் பணிகளுக்கான பொருள் நிரலில் ஒருங்கிணைந்த கோட்பாடாக அமையும். இந்த வளர்ச்சிப் பணி குறித்த பொருள் நிரலில் பின்வருபவை அடங்கும்.

❑ புதிய மதிப்புக்கூட்டு நடைமுறைகளை கையாளும் மாற்றுப் பயிர்த் திட்டம், நீரைத் திறமையாகப் பயன்படுத்தல், துல்லிய பண்ணை முறை, புதிய பாசன ஆதாரங்களை உருவாக்க வேளாண்மையில்

முதலீடுகள், வீட்டுப் பண்ணைத் திட்டத்தை ஊக்குவித்தல், மீனள மேம்பாடு, ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, 2003–2004–ஆம் ஆண்டில் முதன்மைத் துறையில் காணப்பட்ட பொருளாதார முன்னேற்றம் மேலும் வலுப்படுத்தப்படும்.

❑ முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை மேம்படுத்துவதற்கேற்ற சீர்திருத்தங்கள், குறிப்பாக உற்பத்தித் துறையில் சீர்திருத்தங்கள், மேற்கொள்ளப் படும். தரமான மின் வழங்கல், வரிவிதிப்பு சீர்திருத்தங்கள், தொழிலாளர்துறை சீர்திருத்தங்கள், நிருவாக நடவடிக்கைகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டமைப்பு மேம்பாடுகளுக்குப் புதிய உத்வேகம் அளிப்பதும் இதில் அடங்கும்.

❑ தற்போது முன்னேறி வரும் துறைகளான தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மேம்பாடு போன்றவைகளில் தமிழ்நாடு பெற்றுள்ள உள்ளார்ந்த வல்லமை (Core Competence) மேம்படுத்தப்படும்.

❑ மின்னணுவழி நிருவாகத்தின் மூலம் நல்லாளுமையை உறுதி செய்யும் ஒரு முக்கிய அங்கமாக, பொதுமக்கள் தொடர்பு மிகுந்துள்ள பத்து முக்கிய சேவைப் பணிகளில் பணித்திறனை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

❑ புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்காக மனிதவள மேம்பாட்டிற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.

❑ ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் வலுவூட்டப்படும்.

❑ வறுமைக் குறைப்புக்கான புதியதொரு செயல் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## ஆண்டுத் திட்டம்

14. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு (2002–2007) ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீட்டில் வளர்ச்சித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் மத்திய திட்டக் குழுவின் அனுமதியைப் பெற்றுள்ளார்கள். 2001–2002 ஆம் ஆண்டு பொதுநிதியின் இடர்ப்பாடான நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இது ஒரு மாபெரும் சாதனையாகும். 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003–2004 ஆம் ஆண்டில் ரூபாய் 7,000 கோடியாக உயர்த்திப் பெற்றது இந்த அரசின் வியத்தகு சாதனை. இதனைத் தொடர்ந்து 2003–2004 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 7,000 கோடி என்ற திட்ட இலக்கு முழுவதுமாக எய்தப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

15. இந்த வரவு–செலவுத் திட்டம் முன்னெப்போதுமிருந்திராத ரூபாய் 8,001 கோடி அளவிற்கான ஆண்டுத் திட்டத்தை உள்ளடக்கி யுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 8,001 கோடி என்ற இந்த உயரளவு வளர்ச்சித் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலைப் பெற மத்திய திட்டக் குழுவினை நாங்கள் அணுகுவோம். 2001–2002 ஆம் ஆண்டு ஒதுக்கீடான ரூபாய் 5,200 கோடியுடன் ஒப்பிடும்போது, மாநில அரசின் வளர்ச்சிப் பணி குறித்த செலவு பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பதை இது காட்டுகிறது.

## பன்னிரண்டாவது நிதிக் குழு

16. 2005–2010 கால அளவில் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதைத் தீர்மானிக்கும் கொள்கைகளைப் பரிந்துரை செய்வதில் பன்னிரண்டாம் நிதிக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. அண்மைக் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் வருவாய் ஆதார நிலைமை மற்றும் வளர்ச்சிப் பொறுப்புக்கள் ஆகியவற்றில் குறிப்பான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாநில அரசுகள் செயலாக்க வேண்டிய மேம்பாட்டுக் கடமைப் பொறுப்புகளை அதிகரிக்கச் செய்யும் திட்டவட்டமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், அவற்றிற்குக் கிடைக்கும் நிதி ஆதாரங்கள் அதற்கேற்ற அளவு அதிகரிக்கவில்லை. மாநிலங்களுக்கு நியாயமாக சேரவேண்டிய சேவைப் பணிகள் மீதான வரி மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இதனை நாங்கள் எதிர்த்துள்ளோம். மாநிலங்களுக்குக் கிடைக்கும் மத்திய அரசின் வரிகளின் பங்கீட்டுத் தொகுதியை நியாயமான மற்றும் கணிசமான அளவு அதிகரிக்கச்செய்ய வேண்டியதன் அவசியம் தற்போது முன்னிறுத்தப்பட வேண்டியதாகிறது. பகிர்ந்தளிக்கக் கூடிய மத்திய வரிப்பகிர்வுத் தொகுப்பில் மாநிலங்களுக்கிடையே

பிரித்தளிப்பதை நிர்ணயிக்கும் கொள்கைக் கூறுகளை முடிவு செய்வது இரண்டாவது பிரச்சினையாகும்.

17. மத்திய வரிகளில் நமது மாநிலத்தின் பங்கு 6.637 சதவிகிதத்திலிருந்து 5.385 சதவிகிதமாக பதினோராம் நிதிக் குழு குறைத்ததால் தமிழ்நாடு கடுமையான பாதிப்பிற்குள்ளாகியது. இது 1.252 சதவிகிதக் குறைவு அல்லது ஆண்டிற்காண்டு வித்தியாச அடிப்படையில் 18.86 சதவிகிதக் குறைவு என்றாகிறது. இதன். விளைவாக 2001–2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு ரூபாய் 781 கோடி இழப்பு ஏற்பட்டது. மேலும் அவ்வாண்டில், மத்திய வரிகளிலிருந்து, இம்மாநிலம் இவ்வாறு குறைத்து நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் இறுதியாகப் பெற்ற தொகை ரூபாய் 512 கோடி. மொத்தக் குறைப்பு ரூபாய் 1,293 கோடியாகும். நிதி நிலை ஆதாரங்களில் இந்த அளவு குறைப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியினை எந்த ஒரு மாநிலத்தினாலும் தாங்கிக் கொள்ள இயலாது. இந்த மாபெரும் பின்னடைவை எதிர்கொள்வதற்கு நாங்கள் முயன்றுள்ளோம்.

18. விரிவான நிதி நிலைக் குறிப்பு, எதிர்காலக் கணிப்பு மற்றும் பன்னிரண்டாவது நிதிக்குழு கோரிய ஏனைய தகவல்களைக் குழுவிற்கு அளித்துள்ளோம். 2005–2010 கால அளவில் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்தளிக்க வேண்டியதில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை அதில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

19. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசுக்கும், 12–ஆவது நிதிக் குழுவின் தலைவர் பொருளாதார வல்லுநர் டாக்டர் சி. ரங்கராஜன் மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களுக்கும் இடையேயான கூட்டம் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் அன்று சென்னையில் நடைபெற்றது. மத்திய–மாநில அரசுகளுக்கிடையே நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான கொள்கைகளை முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிக் குழுவிடம் கோரியுள்ளார். பன்னிரண்டாவது நிதிக் குழுவிடம் இந்த அரசு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய அம்சங்களைக் கோடிட்டுக்காட்ட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விழைகிறேன்.

❑ மத்திய அரசு அதன் வரிகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு: மத்திய வரித் தொகுப்பில் இருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகுதியின் அளவை தற்போதுள்ள 29.5 சதவிகிதம் என்பதிலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்தி அளிக்குமாறு இந்த அரசு கோரியுள்ளது.

❑ மாநிலங்களுக்கிடையே மத்திய வரிகளைப் பகிர்ந்தளித்தல்: மத்திய வரிகளை மாநிலங்களுக் கிடையே பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு பன்னிரண்டாவது நிதிக்குழு கோரப்பட்டுள்ளது.

▪ 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்கள் தொகைக்கு 40 சதவிகிதம்.

▪ வரி நடவடிக்கைகளுக்கு 40 சதவிகிதம். (மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் வரிகளின் பங்கு சதவிகிதமாக)

▪ 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையை கணக்கில் கொண்ட தனிநபர் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு மாநிலங்களுக்கிடையேயான இடைவெளியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதற்கு 10 சதவிகிதம்.

▪ மத்திய வரியில் மாநிலத்தின் பங்கிற்கு 10 சதவிகிதம்.

❑ கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதிலும், வட்டிச் சுமையைக் குறைப்பதிலும் மாநிலத்திற்குப் பெரும் நிவாரணம் அளிக்கும் வகையிலான ஒட்டுமொத்தக் கடன் குறைப்புத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு பன்னிரண்டாவது நிதிக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

❑ இயற்கைச் சீற்றங்களின் போது மக்களுக்கு நிவாரணமும் உதவியும் அளித்திட மாநில அரசு உரிய நேரத்தில் பயனளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், பேரிடர் நிவாரண நிதியின் தொகையின் அளவினைக் கணிசமாக உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

❑ உள்ளாட்சி மன்றங்கள் வழங்கும் பணிகளின் அளவையும் தரத்தையும் மேம்படுத்த, ரூபாய் 4,881 கோடி நிதி உதவி அளிக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

❑ மாவட்ட நிருவாகம், காவல் துறை, தீயணைப்பு–மீட்புப்பணிகள் துறை, சிறைச்சாலைகள், மின்னணு வழி

நிருவாகம் போன்ற துறைகளோடு பிற துறைகளின் தரத்தினை மேம்படுத்த ரூபாய் 1,856.80 கோடி மானியம் வழங்குமாறு பன்னிரண்டாம் நிதிக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

❑ தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள தனிப்பெரும் பிரச்சினைகள் குறித்தும் குழுவிடம் தெரிவிக்கப் பட்டன. குளங்கள், குட்டைகள், ஊருணிகள் போன்ற நீர் ஆதாரங்களைப் புனரமைத்தல், சென்னையில் தொடர்ந்து நீடித்துவரும் குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல், குடிசைப் பகுதியினரை மறு குடியமர்த்தும் ஒட்டுமொத்தத் திட்டம் போன்ற தனிப்பெரும் பிரச்சினைகளைச் சமாளிக்க மாநில அரசுக்கு உதவிடும் வகையில் ரூபாய் 6,167.69 கோடி மானிய உதவி கோரப்பட்டுள்ளது.

20. பன்னிரண்டாம் நிதிக்குழு கூட்டாட்சி நிதி பகிர்வு கோட்பாடுகளில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் என்றும், தமிழ்நாட்டு மக்களின் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் அதன் பரிந்துரைகள் அமையுமென்றும் இந்த அரசு நம்புகிறது.

### வறட்சி நிவாரண நடவடிக்கைகள்


21. மூன்றாண்டுகாலமாக மோசமான பருவநிலையைத் தொடர்ந்து 2002–2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வறட்சியை எதிர்கொண்டு, நிதி இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு முன்னெப்போதும் காணாத உயரளவில் நிவாரணப் பணிகளை விரைந்து செயல்படுத்தியது.

22. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 310.50 கோடி அளவிற்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி



மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யும் திட்டம் ஒன்றை அறிவித்தார்கள். 47.83 இலட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் இவ்வரசு ரூபாய் 324.32 கோடி நிதியுதவி அளித்துள்ளது. விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட இந்த நிதியுதவி அடுத்த சாகுபடிப் பணியை மேற்கொள்ள உதவியுள்ளது. சிறு விவசாயிகளும், குறு விவசாயிகளும் பெற்ற கடன்பேரிலான வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான திட்டம் ரூபாய் 20 கோடி செலவில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதற்காக கூடுதலாக ரூபாய் 41.05 கோடி ஒதுக்கப்படுகிறது.

23. ரூபாய் 341.92 கோடி செலவில் வேலைக்கு உணவு அளிக்கும் பெரும் திட்டம் ஒன்றின் கீழ் ஊரகப் பகுதிகளில் தேவையின் அடிப்படையில் வறிய குடும்பங்களுக்கு உணவு மற்றும் வேலை பாதுகாப்பு



அளிப்பதை உறுதிசெய்துள்ளோம். 2003 ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து ஆகஸ்டு வரையில் ஒவ்வொரு மாதமும் தேவை அடிப்படையில் ஊரகக் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக 30 கிலோ அரிசி வழங்கி உணவுப்பாதுகாப்பு அளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டது. ரூபாய் 115.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் 9.71 இலட்சம் குடும்பங்களுக்கு பயனளித்தது. 2002–2003 ஆம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குக் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக இந்த அரசு ரூபாய் 163.11 கோடி வழங்கியது. 2003–2004 ஆம் ஆண்டில் சென்னை உட்பட வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடிநீர் வசதி செய்துகொடுப்பதற்காக ரூபாய் 84.48 கோடி செலவிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

24. 2003 ஆம் ஆண்டில் பருவமழை அதற்கு முந்தைய ஆண்டைவிட நன்றாக இருந்தது என்றாலும்

திருப்தியளிப்பதாக இல்லை. சில மாவட்டங்கள் மீண்டும் பாதிப்புக்குள்ளாயின. இது குறித்து விரிவான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்த விரிவான அறிக்கை ஒன்றை இந்த அரசு மத்திய அரசிற்கு அளித்துள்ளது. தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 1584 கோடி தொகையும், வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின்கீழ் 10.8 இலட்சம் மெட்ரிக் டன் அரிசியும் உடனடியாக வழங்குவதற்கான கோரிக்கையும் இதில் அடங்கும். கோடைக்காலத்தில் ஏற்படக்கூடிய தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினைகளைத் தீர்க்க, பல்வேறு மாவட்டங்களுக்கு குடிநீர் வழங்கும் வசதியைச் செய்துகொடுக்க ரூபாய் 50 கோடி அனுமதித்துள்ளோம். மத்திய அரசின் குழு ஒன்று அமைக்கப்பட்டு விரைவில் நம் மாநிலத்திற்கு வருகைதரவிருக்கிறது. இக்குழுவின் விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில், கூடுதல் நிவாரணப் பணிகள் ஏற்பளிக்கப்படும்.

25. சென்னை மாநகரம் தொடர்ந்து தண்ணீர்ப் பற்றாக்குறையின் பிடியில் சிக்கியுள்ளது. இந்த ஆண்டு நிலைமை மேலும் மோசமாக உள்ளது. பதிவு செய்யப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில், கடந்த 55 ஆண்டுக்கால வரலாற்றில் கண்டிராத மிகக் குறைந்த அளவிற்கு, நகரத்திலுள்ள நீர்த் தேக்கங்களில் நீரின் அளவு குறைந்துள்ளது. சென்னை மாநகரின் தற்போதைய குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையை உடனடியாகச் சமாளிக்கப் பெரும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளோம். ஆரணியாறு, கொசஸ்தலையாறு நீர் ஆதாரங்களிலிருந்தும், பூவிருந்தவல்லி, மாமண்டூர், பாலூர் ஆகிய இடங்களில் உள்ள தனியார் வேளாண் கிணறுகளிலிருந்து வாடகை அடிப்படையிலும்,



தண்ணீர் பெற்று வழங்கப்பட்டு வருகிறது. நாள்தோறும் சுமார் 8,500 லாரி கொள்ளளவிற்கு சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைச் சமாளிப்பதற்காக, ஒவ்வொரு நாளும் சுமார் ரூபாய் 80 இலட்சம் செலவு செய்யப்பட்டு வருகிறது. தண்ணீர்ப் பிரச்சினையை உடனடியாக சமாளிக்க உதவும் வகையில், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ரூபாய் 700 கோடி அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மத்தியக்குழு மதிப்பீட்டிற்குட்பட்டு இந்த நிதியிலிருந்து ரூபாய் 50 கோடி உடனடியாக வழங்கப்பட்டுள்ளது.

26. ரூபாய் 720 கோடி செலவிலான சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்–I (புதிய வீராணம் திட்டம்) விரைவாக முன்னேறி வருகிறது. இத்திட்டம், 2004 மே திங்களில் முடிக்கப்படும். சென்னையில் ஆண்டாண்டாக தொடர்ந்து வரும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கான நிரந்தரத் தீர்வாக, கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் அமையும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக அடுத்த ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொடக்க நிதியாக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் ஒட்டுமொத்த குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துவதென்று அறிவிக்கப் பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். சென்னையில் தொடர்ந்து வரும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கக்கூடிய நீண்டகால ஒட்டுமொத்தத் தீர்வுகாண இதனை நாம் பயன்படுத்துவோம்.

27. வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனதனால் ஏற்பட்ட சூழ்நிலையைச் சமாளிப்பதில் இந்த அரசு எத்தகைய தளர்வும் கொள்ளாது என்று இம்மன்றத்திற்கு நான் உறுதியளிக்கிறேன். இந்த அரசு, அடுத்த நிதியாண்டிலும், பல்வேறு நிவாரண நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலும் வகையில், வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 200.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**காவல்துறை**

28. குற்றம் புரிவதைத் திறமையாகத் தடுத்தல், சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துதல், சிறைச் சீர்திருத்தங்கள், கைதிகளுக்கு முறையான மறுவாழ்விற்கு வகைசெய்தல், நீதித் துறையில் விரைவான நடைமுறைகள் ஆகியவை, சட்டம்–ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதற்கான முக்கிய கூறுகளாகும். இந்த அரசு இவை அனைத்தையும் முறையாக முழுமையாக நிருவகித்துள்ளது.

29. நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 1,262.60 கோடி என்றிருக்க, 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,327.15 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 112 கோடியும் அடங்கும். ரூபாய் 30 கோடி மதிப்பீட்டுச் செலவில், காவல் துறைத் தலைவரின் அலுவலக வளாகம் கட்டுவதற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறைச்சாலைகள்

30. சிறைச்சாலைகளுக்காக, இவ்வாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 76.80 கோடி நிதிஒதுக்கியிருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 117.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

31. ரூபாய் 77.09 கோடி செலவில் புழலில் புதிய சிறை வளாகம் ஒன்றினைக் கட்டுவதற்கானப் பணி விரைவாக நடந்தேறிவருகிறது. இதற்காக ரூபாய் 47.09 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 11.19 கோடி நிதியொதுக்கத்துடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### நீதித்துறை

32. இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நீதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான மொத்த ஒதுக்கீடு 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 140.99 கோடியிலிருந்து 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 171.89 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**உயர்நீதிமன்றத்தைக் கணினி மயமாக்குவதற்கும் ஏனைய நீதிமன்றங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம்.**
**உச்சநீதிமன்றம் பிறப்பித்திருந்த ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் திருத்திய சம்பள வீதங்களையும் இந்த அரசு செயல்படுத்தியுள்ளது.**


33. உயர்நீதிமன்றத்தைக் கணினிமயமாக்குவதற்கும் ஏனைய நீதிமன்றங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த ஆணைகளின் அடிப்படையில் தமிழ் நாட்டிலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் திருத்திய சம்பள வீதங்களையும் இந்த அரசு செயல் படுத்தியுள்ளது. மதுரையில் உயர் நீதிமன்றக் கிளை 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ந் தேதி துவக்கப்படும்.

### புத்துயிர் பெற்ற முதன்மைத் துறை

34. முதன்மைத் துறைக்குப் புதிய நீடித்த வளர்ச்சி வேகத்தை முடுக்கிவிடுவதை நோக்கமாகக் கொண்ட துணிச்சலான பல்முனை வளர்ச்சி செயல் திட்டம் ஒன்றை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. இந்த அணுகுமுறையில் அடங்கியுள்ளவையாவன:

- ❑ மாற்றுப் பயிர்த் திட்டம்
- ❑ ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாடு
- ❑ திறன்மிக்க நீர்ப்பயன்பாட்டை ஊக்குவித்தல்
- ❑ துல்லிய பண்ணையியல்
- ❑ புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல்
- ❑ தகவல்களை விரைந்து பகிர்ந்து கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தை கையாளுதல்.
- ❑ தாராள சந்தை மூலம் நல்ல விலை கிடைக்கச் செய்தல்.
- ❑ ஊரக பண்ணை சாராத் துறையில் கவனம் செலுத்துதல்
- ❑ கூட்டுறவுக் கடன் கட்டமைப்பிற்குப் புத்துயிர் அளித்தல்

35. இந்த அரசு, சுற்றுச் சூழலுக்கு ஏற்பில்லாத அதிக நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தும் பயிர் சாகுபடி முறையை மாற்றி, குறைந்த நீரைக் கொண்டு அதிக மதிப்புள்ள பயிர்ச் சாகுபடியை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு பெரும் முயற்சி எடுத்து வருகிறது. தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி பெருமளவில் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. வீரிய ஒட்டுரக காய்கறிகள், தாவர



எரிபொருள் மரங்கள் மற்றும் மூலிகைப் பயிர்களின் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு துல்லிய பண்ணையம் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் வயல்வெளிப் பயிற்சி அளிக்கும் வகையில் வரும் நிதியாண்டில் மாதிரி தோட்டக்கலை கிராமங்கள் ஏற்படுத்தப்படும்.

36. இந்த அரசு மாநிலத்தின் பல பகுதிகளில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தி வருகிறது. வகைப்படுத்தப்பட்ட மலர்களின் ஏற்றுமதிக்காக ஓசூரில் ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 25 கோடி மதிப்பில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மலர்களுக்கென நீலகிரியில் மற்றொரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 16 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. மாம்பழ ஏற்றுமதிக்கென ஆறு தென் மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தேனியில் ரூ.25 கோடி மதிப்பில் ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ரூபாய் 13 கோடி மதிப்பில் ஓர் 'உணவுப் பூங்கா' அமைக்கப்படவுள்ளது. ஈரோட்டிற்கு அருகில் ஒரு மஞ்சள் வணிக வளாகம் ரூ.36.32 கோடி மதிப்பில் அமைக்கப்படும். 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூபாய் 707.95 கோடியாக இருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் வேளாண்மைக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூபாய் 882.41 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


37. ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. வரும் வேளாண் பருவத்தில் 1.50 இலட்சம் ஏக்கர் பரப்பில் மரவகைகள் மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடிக்காக புதிய நடவு மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கென 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

38. 'நபார்டு' நிதியுதவியுடன், 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 57 கோடி திட்ட ஒதுக்கீட்டில் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் உள்ளிட்ட திறன்மிக்க நீர்ப் பயன்பாட்டு உத்திகளை இந்த அரசு செயல்படுத்தும். மேலும் மாற்றுப் பயிர் சாகுபடி, சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்தல், சிக்கன சக்தி பம்புசெட்டுகள் வழங்குதல், துல்லிய பண்ணையம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தும் பம்புசெட் உரிமையாளர்கள் பங்கேற்கும் ஒரு முன்னோடித்திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் பம்புசெட்டுகள் வைத்துள்ள விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இது செயல்படுத்தப்படும்.

39. இந்த அரசு 2004–2005 ஆம் ஆண்டில் 45,000 பண்ணை பம்புசெட்டுகளுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்குவதை உறுதிசெய்யும். இதில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள கடைமடை மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படவுள்ள 15,000 இணைப்புகளும் அடங்கும். காவிரி நீரில் சட்டரீதியாக கிடைக்க வேண்டிய நமது பங்கினை கர்நாடக அரசு மறுத்து வருவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிப்பதற்கும், நவீன பாசனத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிப்பதற்கும் இத்திட்டம் வகை செய்யும்.

**கால்நடை வளர்ப்பு**

40. ஊரகக் குடும்பங்களுக்குத் துணை வருமானத்தை உயர்த்துவதற்குக் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் மிகவும் இன்றியமையாததாகும். கால்நடை சிறப்புப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் சுமார் 9,432 கால்நடை சுகாதார




முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மாநில அளவில் கால்நடை மற்றும் எருமை இனப் பெருக்கத்தை மேம்படுத்த கடந்த இரண்டாண்டுகளில் மிக உயர் அளவாக 64.62 இலட்சம் செயற்கை முறையில் கருவூட்டலை செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக சாதனை படைத்துள்ளது.

41. தொடர்ப்புப்பணி தம்பதியினருக்கு பயிற்சி அளித்துவரும் டானிடா நிதி உதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 1.41 கோடி ஒதுக்கீட்டுடன் தற்போதைய 17 மாவட்டங்களுடன் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. ரூபாய் 3.87 கோடி செலவில் தற்போதுள்ள துணை மையங்களை மேம்படுத்தி 75 கால்நடை மருந்தகங்களை அமைக்கும் திட்டத்தை அவையின் உறுப்பினர் வரவேற்பர். வீட்டுப் பண்ணை பயிர் வளர்ப்பு முறைக்கு அடுத்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## மீனவ மேம்பாடும் மீனவர் சமுதாயத்தின் நலனும்

42. ரூபாய் 40 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை ஏற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. பழவேற்காடு ஏரிப்பகுதியில் வசிக்கின்ற மீனவர்களின் வாழ்க்கை வளத்தை மேம்படுத்த பழவேற்காடு ஏரியில் சிப்பிகள், சிங்கொரால், நண்டுகள் ஆகியவற்றை வளர்க்கின்ற கடல்சார் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான பரவலாக்கப்பட்ட திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். மீன் பிடிக்க இயலாத பருவ காலங்களில் கடல்சார் மீனவர்களுக்கு உதவுவதற்கான நிவாரணத் திட்டத்திற்காக ரூபாய் 29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மீனவர்களுக்காக 4,000 வீடுகள் கட்டும்பணி



மேற்கொள்ளப்படும். இதற்காக ரூபாய் 15.65 கோடி நிதி வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாசனம்

43. தமிழ்நாடு, தன்னுடைய நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்திவிட்டது. சிறிய அளவில் உள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களும், மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. காவிரி ஆற்று நீரில் தமிழ்நாட்டின் நியாயமான பங்கினை விடுவிக்க மறுப்பதில் கர்நாடக அரசு காட்டிவரும் பிடிவாதமான போக்கினை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். காவிரி நீரில் நம்முடைய நியாயமான பங்கினைப் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் நாங்கள் ஒருபோதும் தளரமாட்டோம். நீர் ஆதாரங்கள் அனைத்தையும் தேசியமயமாக்கி நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்துதல் ஒன்றே நடைமுறைக்கு ஏற்ற நீண்ட காலத் தீர்வாகும். மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை தீபகற்ப நதி இணைப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு திட்ட தயாரிப்பை விரைவுபடுத்துமாறு நதிகள் இணைப்பிற்கான பணிக்குழுத் தலைவர் திரு. சுரேஷ் பிரபுவிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். விரைவில் தீர்வு காணக்கூடிய இதர சில சிறிய இணைப்புத் திட்டங்களையும் விரைவாக முடிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்



இத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என இந்த அரசு வலியுறுத்தும்.

44. பாசன வசதி மேலாண்மையிலும் தண்ணீரை திறம்படப் பயன்படுத்துவதிலும் உழவர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 1,566 பாசனநீர் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான தேர்தல்கள்

தற்போது முடிக்கப்பட்டுள்ளன. உழவர்களின் உரிமையினை நிலைநாட்டுவதிலும், மாநிலத்தில் உள்ள பாசன முறைகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்பில் அவர்களை பங்கேற்கச் செய்வதிலும் எங்களது இடையறாத உறுதிப்பாட்டினை இது பிரதிபலிக்கிறது. நடப்பாண்டில் ரூபாய் 2,900 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய ஆற்று வடிநில அடிப்படையிலான ஒட்டுமொத்த நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

45. இந்த அரசு, வேலைக்கு உணவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2004–2005 இல் ரூபாய் 100 கோடி ஒதுக்கீட்டில், 100 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக்கட்டைக் கொண்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றை மேற்கொள்ளும். பாசனத்திற்கான மொத்த ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 912.45 கோடியாக இருக்க 2004–2005–இல் ரூபாய் 967.45 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள்

46. வெளிநாட்டு நிதிநிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நடப்பு நிதியாண்டில் நிறைவுபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். காடுவளர்ப்பில் கூட்டு நிருவாகத்தைக் கொண்ட இத்திட்டம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் தமிழ்நாடு இயற்கைவள நிர்வாகத் திட்டம் எனும் தலைப்பில் ரூபாய் 779.33 கோடி மதிப்பீட்டில் ஐந்து ஆண்டு கால அளவில் மேற்கொள்ளப்படுவதற்காக வகுக்கப்பட்டு ஜப்பான் பன்னாட்டுகூட்டுறவு வங்கி (Japan Bank for International Cooperation) யின் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்புதலை எதிர்நோக்கி வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 65.63 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 21.40 கோடி மொத்த மதிப்பீட்டில் ஆற்றுப் படுகைகளில் தேக்கு மரங்களை வளர்க்கும் பெருந்திட்டம் ஒன்றிற்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### நமது கிராமம்

47. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களின் முழுமையான வளர்ச்சியினை உறுதிசெய்யும் நோக்கத்தினைக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டு 'நமது கிராமம்' என்று அவர்களால் பெயரிடப்பட்ட புதியதொரு திட்டத்தை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். ரூபாய் 200 கோடி செலவில் இந்தத் துணிகர முயற்சி செயல்படுத்தப்படும். வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 52.21 கோடி தொடக்க நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நபார்டுவங்கியின் நிதியுதவியைப் பெறுவோம்.

48. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமமும் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்காக ஜனநாயக அதிகாரப் பகிர்வு மற்றும் பங்கேற்பு அணுகுமுறையில் அமைந்த கோட்பாடுகளுக்கு 'நமது கிராமம்' திட்டம் வடிவம் கொடுக்கிறது. இத்திட்டத்தின்கீழ், குடிநீர், துப்புரவு, வடிகால், சுகாதாரம், பெண்ணுரிமை, சத்துணவு, தூய்மை மற்றும் உடல்நலன், ஆரம்பக்கல்வி, சுற்றுச்சூழல் மேம்பாடு, நீர் ஆதாரங்களின் மேலாண்மை, கிராமச் சாலைகள், தெருவிளக்குகள் போன்ற துறைகளில் திட்டவட்டமான மேம்பாடுகளை




உறுதிசெய்ய செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்க கிராமசபை கூடும். தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க ஒவ்வொரு அரசுத் துறையின் அதிகாரிகளும் இந்தக் கிராமசபைக்கு உதவிபுரிவர். கிராம சபைகள் தமது திட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணிக்கும் வகையில் குறிப்பிட்ட கண்காணிக்கத்தக்க குறியீடுகள் வெளியிடப்படும். உள்ளூர்ப் பள்ளிகளில் பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுகின்ற மாணவர் எண்ணிக்கை வீதம் குறித்தும், கிராமத் துப்புரவு, பொது சுகாதாரம் மற்றும் உடல்நலன் ஆகியவற்றிற்குக் கவனம் அளிப்பதும் இதில் அடங்கும். கிராம சபைகள் மக்களுக்கு உண்மையான நலன்களை அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் வாழும் சூழலையும் மேம்படுத்த உதவும் திட்டங்களின் மீது கவனம் செலுத்தச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### அதிகார உரிமை மற்றும் வறுமை குறைப்பு

49. மாநிலத்திலுள்ள ஊரகப் பகுதிகளில் வறுமையை விரைந்து குறைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும் மற்றொரு துணிகரமான முயற்சியை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின் முதற்கட்டமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஏழைகளில் மிகவும் ஏழ்மையாக உள்ள 25 குடும்பங்கள் சில குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் கிராமசபை மூலமாகக் கண்டறியப்படுவர். இப்பயனீட்டாளர்களுக்குத் தேவையான வாழ்வாதாரப் பாதுகாப்பு, சத்துணவுப் பாதுகாப்பு, வீட்டுவசதிக்கான பாதுகாப்பு, சுகாதார வசதிக்கான பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை வாழ்நாள் தேவைகளை அளிக்க முற்படுவோம். இப்பயனீட்டாளர்கள் அவர்களுடைய குடும்ப வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான புதிய மற்றும் துணைத் தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பொதுவிநியோக முறையின் கீழ் பயன்பெறுதல், ஊரக வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் தரமான சுகாதார வசதிகள் ஆகியவை இப்பயனீட்டாளர்கள் தங்களது வாழ்நாள் அடிப்படைத் தேவைகளை மனநிறைவளிக்கும் வகையில் பெறக்கூடிய உரிமையைப் பெற்றுத்தரும். சமூகநலன் என்பதன்கீழ் ரூபாய் 6.50 கோடி தொடக்க ஒதுக்கீட்டுடனும், ஊரக வளர்ச்சி என்பதன்கீழ் ரூபாய் 5 கோடி ஒதுக்கீட்டுடனும் ஆகமொத்தம் ரூபாய் 11.50 கோடி ஒதுக்கீட்டுடன் இந்தப் புரட்சிகரமான அதிகார உரிமைத் திட்டம் 2004–2005 இல் செயல்படுத்தப்படும். இத்திட்டம், 2004–2005 இல் உலகவங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள தமிழ்நாடு அதிகார உரிமை மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டத்துடன் (TNERP) மேலும் விரிவுபடுத்தப்படும். ஆறாண்டுகளில் ரூபாய் 650 கோடி திட்ட மதிப்பீட்டில் இது செயல்படுத்தப்படும்.

### ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாடு

50. ஊரகப் பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் காணச் செய்வதோடு மட்டுமல்லாது தேவையான அளவு ஊரக வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்த ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமொன்றை அரசு தொடங்கியுள்ளது. ஊரகப்பகுதி வாழ்மக்களுக்கு, ஊரகக் குடியிருப்பு, முழுமையான ஊரகத் தொடர்பு, குடிநீர் பாதுகாப்பு, முழுமையான துப்புரவு மற்றும் தடையில்லா மின்வழங்கல் ஆகியவற்றைப் பெறச்செய்வதற்கு இத்திட்டம் முன்னெப்போதும் இருந்திராத முக்கியத்துவத்தை அளிக்கும். திருத்த மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபாய் 1898.76 கோடி என்றிருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சிக்கான மொத்த நிதியொதுக்கீடு ரூபாய் 1952.61 கோடிக்கு உயர்த்தப்படுகிறது.

### ஏழை-எளியோருக்கான வீட்டுவசதி

51. ஏழை–எளியோருக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு, தொடர்ந்து உரிய கவனம் எடுத்துக் கொள்ளும். 2001 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து ரூபாய் 379.11 கோடி செலவில் 1.04 இலட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 52.05 கோடி செலவில் மேலும் 50,678 கச்சா வீடுகள் நிலை உயர்த்தப்பட்டன. 2004–2005 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஊரகக் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை நிலை உயர்த்துவதற்கான பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 79.66 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் மொத்தம் 36,426 புதிய வீடுகள் கட்டப்படும் மேலும் 18,691 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படும். ஊரக வீட்டுவசதியில் விரைந்த முன்னேற்றம் காண வர்த்தக வங்கிகளின் நிதிப்பங்கேற்பு கொண்ட ஊரக வீட்டுவசதிக்கான புதியதொரு திட்டத்தை நாங்கள் வடிவமைப்போம்.

### ஊரகச் சாலைகளின் மேம்பாடு

52. ஊரகச் சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு இந்த அரசு முன்னெப்போதும் இருந்திராத முக்கியத்துவம் அளித்து வருகின்றது. மாநிலத்திலுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றினை இந்த அரசு தொடங்கியுள்ளது. இதில் பின்வரும் முக்கிய கூறுகள் அடங்கியுள்ளன:

- ❑ நெடுஞ்சாலைத் துறை மொத்தம் 41,125 கி.மீ நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளைப் பராமரிக்கிறது. இதில் 4273 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2003–2004 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டன. 6492 கி.மீ. நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளை,

குறிப்பாகப் பேருந்துகள் ஓடும் சாலைகளைச் சீரமைப்பதற்காக மொத்தம் ரூபாய் 336.05 கோடி செலவிலான சிறப்புத் திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை ஏப்ரல் 2004 க்கு முன்னரே மாண்புமிகு உறுப்பினர்கள் கண்கூடாகக் காணலாம்.


❑ ரூபாய் 15 கோடி செலவில் இதர மாவட்டச் சாலைகளில் 150 சிறுபாலங்களைக் கட்டும்பணி துவக்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

❑ இதுவரையிலும் எந்த அமைப்பினாலும் பராமரிக்கப்படாத 5,850 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைத் தரமுயர்த்துவதன் மூலமும், சீரமைப்பதன் மூலமும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மற்றொரு பெருந் திட்டம் ரூபாய் 300 கோடி செலவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையினால் முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆனால் அதற்குப்பின் பராமரிப்பின்றி இருக்கும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும், பேருந்துகள் ஓடும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும், முன்னர் தார் போடப்பட்டு தற்போது சிதிலமடைந்துள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

❑ பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 164 கோடி செலவில் 1,216.57 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவ்வாறாக ஊரகப்பகுதிகளில் அனைத்துப் பருவநிலைகளுக்கும் ஏற்ற தரமான சாலைகளை அளிக்கும் ஒட்டுமொத்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு

53. இந்த அரசு 2001–2004 காலகட்டத்தில் 13,365 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளித்துள்ளது. மொத்தம் 14,449 கைப்பம்புகள் சிறுவிசைப் பம்புகளாக மாற்றப் பட்டுள்ளன. இக்கால அளவில் ஊரகப் பகுதிகளிலுள்ள 14,550 அரசுப் பள்ளிகளுக்கும், 1226 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கப் பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதற்கான துறைசீர்திருத்தத்




திட்டம், 6 மாவட்டங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 223.16 கோடி செலவில், சுமார் 9,900 குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 8,877 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன.

54. 2004–2005 ஆம் ஆண்டில், ரூபாய் 600 கோடி மொத்த மதிப்பீட்டுச் செலவில் 6,500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்கான திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளும். ரூபாய் 327.32 கோடி மதிப்பீட்டில் 28 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில், முழுமையான துப்புரவுத் திட்டத்தை இவ்வரசு செயல்படுத்தும். மொத்தம் ரூபாய் 3,500 கோடி செலவில், ஒட்டுமொத்த ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டமொன்றை ஆறு ஆண்டு காலத்தில் செயல்படுத்த உலகவங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இத்திட்டத்தை 2004–2005 ஆம் ஆண்டில் செயல்படுத்தக் கருதியுள்ளோம்.

## ஊரக வேலைவாய்ப்பு

55. 1992 இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிய சுய உதவிக் குழு இயக்கம், ஊரகப்பகுதிகளுக்கு அதிகார உரிமையும் சுய வேலைவாய்ப்புகளும் அளிக்கின்ற மாபெரும் திட்டமாக உருவெடுத்துள்ளது. ரூபாய் 393.64 கோடி மதிப்பீட்டுச் சேமிப்புடன் சுமார் 25 இலட்சம் பயனீட்டாளர்களைக் கொண்ட மொத்தம் 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதி ரூபாய் 564 கோடியை விஞ்சியுள்ளது. சம்பூர்ண கிராமத் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத்தின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 'நபார்டு' வங்கியுதவியுடனான திட்டங்கள் ஆகியவற்றின்கீழ்

கடன் வசதிகளை அளிக்கும் திட்டங்களுக்கு 2004–2005 ஆம் ஆண்டில் முக்கிய கவனம் செலுத்துவோம்.

56. மத்திய அரசின் நிதியுதவியுடன் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் ஊதியத்திற்கு வேலை, உணவுப் பாதுகாப்பு, நிலையான சொத்துக்களை ஏற்படுத்துதல் ஆகிய பயன்களை இந்த அரசு அளித்துவருகிறது. 2003–2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 10.75 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக 7.08 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஊதியம் மற்றும் இடு பொருட்கள் ஆகியவைகளுக்கு இந்த அரசு ரூபாய் 392.13 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. நீர்நிலைகளைப் பராமரிப்பதில் கவனம் செலுத்தும் வகையில், இத்திட்டம் 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் விரிவாக்கப்படும்.

57. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இந்த அரசு மேற்கொண்ட புரட்சிகரமான மற்றொரு முயற்சியாகும். இத்திட்டம் ஊரக பண்ணைசாராத் துறைக்கு புதியதொரு உத்வேகத்தை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 369 வளர்ச்சி வட்டாரங்களை உள்ளடக்கிய மொத்தம் 695 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதி வழங்கப் பட்டுள்ளது. ஏறக்குறைய 73 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 2004–2005இல் ரூபாய் 20 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

### ஊரக மின் வசதி

58. நடப்பாண்டில் ரூபாய் 150 கோடி ஒதுக்கீட்டுடன் ஊரக மின் வழங்கலின் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களை தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்த ஒதுக்கீடு 2004–2005 இல் ரூபாய் 192.58 கோடியாக உயர்த்தப்படும். ஊரகப் பகுதிகளில் மின் வழங்கல் தரத்தை மேம்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியம், 12 புதிய துணை மின் நிலையங்களை ஏற்படுத்துவதுடன், 22 மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்தி 2,172 புதிய மின்மாற்றிகளையும் நிறுவும்.

### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

59. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 82 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இத்திட்டம் ரூபாய் 192.70 கோடி ஆண்டு ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டுவருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் பணிகள் முடிவடையும் தருவாயில் 2004–2005 ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கம் மற்றும் பயன் பாட்டிற்கான பின்வரும் திருத்திய முறை பின்பற்றப்படும்.

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| ▪ குடிநீர் வழங்கல் பணிகள் | 15.00 |
| ▪ நமது கிராமம் திட்டம் | 15.00 |
| ▪ பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மாணவர் இல்லங்கள் | 5.00 |
| ▪ ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் | 5.00 |
| ▪ சிமெண்ட் சாலைகள் உட்பட கிராம ஊராட்சி சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் | 10.00 |
| ▪ குறிப்பான பணிகளுக்கு இல்லாத ஏனைய ஒதுக்கீடு | 32.00 |
| ▪ **மொத்தம்** | 82.00 |

திருத்திய ஒதுக்கீட்டு முறை குறித்த விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

### வளர்ச்சித் துடிப்பு கொண்ட இரண்டாம் நிலைத் துறையை நோக்கி

60. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிற்கான 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையினை அறிவித்துள்ளார்கள். இந்தக் கொள்கை, உற்பத்தித் துறையினை முன்னிறுத்தி, மாநிலத்தின் முதலீட்டுச் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்தை வகுத்துள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய சீரமைப்புப் பணிகளாவன:

- ❑ தரமான கட்டமைப்புவசதிகளை ஏற்படுத்துதல்.
- ❑ தரமான எரிசக்தி வழங்குதல்.
- ❑ நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.


- ❑ மாநில வரி விதிப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- ❑ தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள்.
- ❑ தொழில்நுட்ப ரீதியில் நவீனமயமாக்குதல் மற்றும் நிலை உயர்த்துதல்.

## கட்டமைப்பு மேம்பாடு

**61.** கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கு மூலதன முதலீட்டினை அதிகரிக்கும் வகையில் பொது நிதியைச் சீரமைக்க வேண்டியுள்ளது. பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து பங்கேற்பதையும் ஊக்குவிக்க வேண்டும். வருவாய்க் கணக்கில் வரவு–செலவுத் திட்டத்தில் ஏற்படும் அதிக அளவு பற்றாக்குறையின் காரணமாக சாலைகள், நகர்ப்புறக் கட்டமைப்பு, குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், வடிகால் வசதி போன்ற பணிகளுக்குப் போதுமான மூலதனச் செலவுகளை மேற்கொள்ள இயலவில்லை. இச்சூழ்நிலையை நிதிச் சீர்திருத்தங்கள் மூலம் சரிசெய்திட உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு பெருமளவில் முதலீடு செய்வது உறுதி செய்யப்படும். கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்புக் கொள்கை ஒன்றினை உருவாக்கிட, பன்னாட்டு வல்லுநர்களின் கருத்துகள் உள்ளிட்ட விரிவான கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## நெடுஞ்சாலைகள் மேம்பாடு

**62.** நெடுஞ்சாலைகள் மேம்பாடு தற்போது திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ் சாலைகளை மேம்படுத்தி வருகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்த சிறப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகர் உள்ளிட்ட நான்கு பெருநகரங்களை இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் மிக விரைவான முன்னேற்றம் கண்டு வருகிறது. தமிழ்நாட்டில் 341 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலான இந்தியாவின் வடக்கு – தெற்கு இணைப்பில் பணிகளைத் தொடங்கி வைத்தனர். இத்திட்டத்தின் கீழ் 851 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதுதவிர, இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 507 கிலோ மீட்டர் தூர தேசிய நெடுஞ்சாலைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.



**63.** தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் ரூபாய் 2,160 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஆற்காட்டிற்கும் திருவாரூருக்குமிடையே 393 கிலோ மீட்டர் நீளத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்குமிடையே 330 கிலோ மீட்டர் நீளத்திற்கும், மாநில நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு இத்திட்டம் உதவும். சுமார் 2,000 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும், மாவட்டப் பெருஞ் சாலைகளும் தரமுயர்த்தப்படும். தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்திற்காக 2004–2005 ஆம் ஆண்டில், ரூபாய் 500 கோடி ஒதுக்கப்படுகிறது.

**64.** தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை உரியவாறு பராமரிப்பதும் சம முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1990 களின் பிற்பகுதியில் இது புறக்கணிக்கப்பட்டது. திருத்த மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான நிதியொதுக்கம் 2003–2004 ஆம் ஆண்டிற்கு வரவு–செலவு திட்ட ஒதுக்கீடான ரூபாய் 248.56 கோடியிலிருந்து ரூபாய் 314 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதைப்போலவே, 2004–2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான ஒதுக்கீடு ரூபாய் 413 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. சாலைகளை உரியவாறு பராமரிப்பதை உறுதிசெய்ய, அரசு மேற்கொண்டு வருகின்ற இந்தத் திட்டவட்டமான நடவடிக்கைகளை அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர்.

**65.** தமிழ்நாட்டில் மொத்தம் 14,576 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும் மாவட்டப் பெரும் சாலைகளும் உள்ளன. இதில் கிட்டத்தட்ட 723 கிலோ

மீட்டர் நீளமுள்ள சாலைகள் தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்றன. எஞ்சியுள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெரும் சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கான புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கி / உலக வங்கியின் நிதி உதவி பெற அனுப்பிவைக்கப்படும். பொதுத்துறையும் தனியாரும் பங்கேற்கும் அமைப்பில், மாநில நெடுஞ்சாலைகளிலும், மாவட்டப் பெரும் சாலைகளிலுமுள்ள பெரும் போக்குவரத்து நெரிசலைக் கொண்ட சாலைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றினை மேற்கொள்வோம். இப்புதிய திட்டங்கள் உருவாக்கப்படும் வரையில், மொத்தம் ரூபாய் 221.32 கோடி செலவில் 2,149 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெரும் சாலைகள், சர்க்கரை ஆலைச் சாலைகள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் மற்றும் நிலை உயர்த்து தலுக்கான சிறப்புத் திட்டம் ஒன்றினை இந்த அரசு துவக்கியுள்ளது.

## குடிநீர் வழங்கலும் துப்புரவும்

66. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் பின்வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தொடங்கியுள்ளது:

- ரூபாய் 69.20 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 674 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 133.05 கோடி செலவில் நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 642 ஊரகக் குடியிருப்புகள் பயன் பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 74 கோடி செலவில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உசிலம்பட்டி நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 406 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 85.04 கோடி செலவில் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் திண்டுக்கல் நகராட்சி, 7 பேரூராட்சிகள் மற்றும் 816 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 78.70 கோடி செலவில் திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் சங்கரன்கோவில், சிவகாசி நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 401 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.


- ரூபாய் 98.85 கோடி செலவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 890 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 126.85 கோடி செலவில் நாமக்கல் மாவட்டத்தில் 6 பேரூராட்சிகள் மற்றும் 1,399 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

67. 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 200 கோடி முதலீட்டில் 8 நகராட்சிகள் மற்றும் 42 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்த 50 குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வோம். இச்செயல்பாடுகள் ஏறக்குறைய 14 இலட்சம் மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்குப் பெரிதும் உதவும். அவினாசி–அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ள தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. 3 மாநகராட்சிகள் மற்றும் 4 நகராட்சிகளில் ரூபாய் 575.30 கோடி செலவில் ஒட்டு மொத்த கழிவுநீரகற்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூபாய் 844 கோடி செலவில் எஞ்சிய அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் கழிவுநீரகற்று வசதியைப் பெறும் வண்ணம் பெருந்திட்டமொன்றை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

## மின் துறை

68. மின் துறையில் புதிய மின் சக்தித் திறனை உருவாக்கி மின் வழங்கல் திறனை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செலுத்தியுள்ள



தனிக்கவனம் மின்தடையின்றித் தரமான மின் சக்தி கிடைப்பதை உறுதி செய்துள்ளது. பயன்பாட்டு அடிப்படையிலான மின் கட்டண முறைக்கு மாறியதன் மூலம், தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கும் மின்சக்தியின் தரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்துள்ளது. இதன் பயனாக வழங்கப்படும் மின்சாரத்தின் அலை அதிர்வு எண் 48 ஹெர்ட்ஸ் என்பதிலிருந்து விதிக்கப்பட்ட 50 ஹெர்ட்ஸ் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

69. மாநிலத்தின் மின்சார உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதை உறுதி செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல புதிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். வட சென்னையில் 1,000 மெகாவாட் மின்உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவ தேசிய அனல் மின் கழகத்திற்கும், தமிழ்நாடு மின்வாரியத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பம் இடப்பட்டுள்ளது. அதே போல தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் அனல் மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதில் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. கூடங்குளத்தில் 2,000 மெகாவாட் திறனுடைய அணுமின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணி மிக வேகமாக நடந்தேறி வருகிறது. கல்பாக்கத்தில் 500 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட அதிக அணு பெருக்கி கலன் (proto type fast breeder reactor) ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. மின் வழங்கலில் மேம்பட்ட தரத்தினையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதற்காக மின்னனுப்புகை மற்றும் பகிர்மானத் திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 1,305.46 கோடி அளவிற்கு முதலீடு செய்யும்.

70. மத்திய அரசு, 2003 ஆம் ஆண்டு மின்சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. எதிர்காலத்திற்கான செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். இதில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த கலந்தாலோசனைகளையும், விவாதங்களையும் மேற்கொள்வோம். மின் உற்பத்தியில் தனியார் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கான கொள்கை வடிவம் ஒன்று உருவாக்கப்படும்.

### துறைமுகங்கள்

71. உருவாக்கி, சொந்தமாக்கிக் கொண்டு இயக்க வருவாய்ப் பங்கு அளித்துப் பின்னர் அரசுக்கு உரிமை மாற்றும் (Build Own Operate Share and Transfer) அடிப்படையில், ரூபாய் 250 கோடி திட்ட மதிப்பீட்டில், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றினை மேற்கொள்ள இந்த அரசு திட்டமிட்டுள்ளது. எண்ணெய்ப் போக்குவரத்திற்கு உதவிடும் வகையில், ரூபாய் 56 கோடி செலவில் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சரக்குகளைக் கையாளத் தளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 5 இலட்சம் மெட்ரிக்டன் எண்ணெய் வர்த்தகம் மேற்கொள்ள முடிகிறது. குளச்சல் துறைமுகத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அதன் திட்டக் கோட்பாடுகளை விரிவாக ஆராய்ந்து வருகிறோம். 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேதுசமுத்திரம் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை “சாகர்மாலா” (Sagar Mala) திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்துவதற்கு ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

### விதிகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி எளிமைப்படுத்துதல்

72. ரூபாய் 25 கோடிக்கு மேலான முதலீடு கொண்ட தொழில்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கான எளிய நடைமுறை ஒன்றினை அரசு அறிமுகப் படுத்தியுள்ளது. இந்த நடைமுறையின் கீழ், 10 வெவ்வேறு படிவங்களை ஒருங்கிணைத்து பொதுவான விண்ணப்ப படிவம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. புதிய முதலீடுகளுக்கான விண்ணப்பங்கள் ஒற்றைச் சாளர முறையில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் (GUIDANCE BUREAU) மூலம் பரிசீலிக்கப்படுகின்றன. முதலீட்டாளர் தொழில் துவங்க அனுமதியைப் பெறுவதற்கு, அலுவலகங்களை நாடிச் செல்லவேண்டியதில்லை. பல்வேறு துறைகள் ஒரே நேரத்தில் இணையாக விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதால் (Parallel Processing), பரிசீலனை நேரம் குறைக்கப்படுகிறது. இதுபோன்ற ஒற்றைச்சாளர முறை ஒரு முன்னோடித் திட்டமாக இரண்டு மாவட்டங்களில் சிறுதொழில் முதலீட்டாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது படிப்படியாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பின்னர் விரிவுபடுத்தப்படும்.

73. தமிழ்நாட்டில் தற்போது தொழில் முனைவர்கள் மொத்தம் 53 பல்வகைப் பதிவேடுகள் மற்றும் படிவங்களைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இது, பெருமளவில் மேலாண்மை நேரம் மற்றும் உழைப்பினை வீணாக்கும் பெருந்தொல்லையாக உள்ளது. இந்தப் பதிவேடுகளையும் படிவங்களை ஒருங்கிணைத்து சீராக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றின் எண்ணிக்கை அத்தியாவசியத் தேவையின் அடிப்படையில் வெகுவாகக் குறைக்கப்படும். கையாளுவதற்கு எளிதான முறையில் இவை எளிமையாக்கப்படும்.

## வரிச் சீரமைப்புகள்

74. பிரபல பொருளாதார வல்லுநர் டாக்டர் ராஜா J. செல்லையா அவர்களின் தலைமையின்கீழ் வரிச் சீரமைப்புமற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையத்தை இவ்வரசு அமைத்தது. 2003–2004 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் தீர்வை மற்றும் மின்நுகர்வுக்கான புதிய சட்டம் இயற்றப்பட்டது. எந்த வகையான மின்நுகர்வோருக்கும் வரி விலக்களிக்கக்கூடாது என ஆணையம் பரிந்துரை செய்த போதிலும், இந்த அரசு சிறிய மின்நுகர்வோரின் நலனைக் காக்கும் பொருட்டு விவசாயப் பம்பு செட்டுகளுக்கும், குடிசை மின் இணைப்புகள் மற்றும் வீட்டு மின் இணைப்புகளுக்கும் விலக்களித்துள்ளது.

75. ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் சொத்துரிமை மாற்றத்திற்கான முத்திரைத்தாள் தீர்வையையும், உடைமையுரிமை மாற்றத் தீர்வையையும் குறைக்கும் துணிவான முடிவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ளார்கள். இவ்வாறாக, முத்திரைத்தாள் தீர்வை மற்றும் உரிமை மாற்றத் தீர்வை ஊரகப் பகுதிகளில் 12 சதவிகிதத்திலிருந்து, 8 சதவிகிதமாகவும், நகர்ப் பகுதிகளில் 13 சதவிகிதத்திலிருந்து, 8 சதவிகித மாகவும் 21.11.2003 முதல் குறைக்கப்பட்டன. பத்திரப் பதிவு நடைமுறையில் ஒளிவு மறைவற்ற தன்மையினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கட்டண வீதங்கள் குறைக்கப்பட்டு எளிமையாக்கப் பட்டுள்ளன. கட்டண வீதங்கள் கணிசமான அளவு குறைக்கப்பட்ட போதிலும், இந்த கட்டணக்குறைப்பு செயல்படுத்தப்பட்டதிலிருந்து அரசின் வருவாய் அதிகரித்துள்ளது.

76. விற்பனை வரிக் கட்டமைப்பில் சில திருத்தங்களும் சீரமைப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் அறிவோம். வரிச்சீர்திருத்த மற்றும் வருவாய் பெருக்கக் குழு மதிப்புக் கூட்டு வரியை உள்ளிட்ட சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. இதற்கான தொடக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தேசிய அளவில் ஒருமித்த கருத்து உருவாகும் அதே நேரத்தில், தயார் நிலைக்குத் தேவையான தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம். வருமாண்டுகளில் இத்திட்டத்தின் செயலாக்கம் பற்றிய தேசிய அளவிலான விவாதங்களின் அடிப்படையில் இதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும். தமிழ்நாட்டில் வரி விதிப்பினை எளிமையாக்குவதும், ஒளிவு மறைவற்றதாக ஆக்குவதுமே நமது நோக்கமாகும்.

## தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள்

77. இரண்டாவது தேசியத் தொழிலாளர் ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்குப் பொருத்தமான தொழிலாளர் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் விதிகளை ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தக்க ஆலோசனைக்குப் பின், தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள் குறித்த செயல் திட்டம் வகுக்கப்படும். தொழிலாளர்களின் நியாயமான நலனைப் பாதுகாக்கும் அதே சமயத்தில் மாநிலத்தில் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

## தொழில்நுட்பத்தை நவீனப்படுத்துதலும் தரம் உயர்த்துதலும்

78. தமிழ்நாடு உற்பத்தியில் இந்தியாவின் முக்கிய நடவடிக்கை மையமாக உருவெடுத்துள்ளது. உற்பத்தித் துறையில் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகளின் அளவு தமிழ்நாட்டில்தான் மிக அதிகமாகும். இத்துறையில் மாநிலத்தின் தன்னிகரற்ற நிலையை இது தெளிவாக்குகிறது. இத்தகைய ஒப்பீட்டு ஆதாயத்தை வலுப்படுத்த வேண்டியதன் தேவையை இது நன்கு உணர்த்துகிறது. உலகச் சந்தையில் போட்டியிடும் அளவிற்குத் தனியார் உற்பத்திப் பிரிவுகள் திறமையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். இவற்றை அடைய தொழில்நுட்பத்தின் தரத்தை உயர்த்துதலும், நவீனப்படுத்துதலும் இன்றியமையாத வையாகும். 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையில் கோடிட்டுக் காட்டியுள்ளவாறு, தொழில் பேரவைகளுடன் கலந்தாலோசித்து தொழில் நுட்பத்தைத் தரம் உயர்த்தி நவீனமயமாக்குவதற்குத்

தக்க உதவிகளைப் பரிந்துரைக்க புதிய பணிக் குழுக்கள் அமைக்கப்பப்படும்.

### சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை மேம்பாடு

**79.** தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அரசு கொள்முதலில், முன்னுரிமை அளிப்பதற்கான கொள்கை, பல தொழில் பிரிவுகள் புத்துயிர் பெற உதவியுள்ளது. சிறு தொழில் பிரிவுகளுக்கென புதிய கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு விரைவில் அறிவிக்கப்படும். 2004-2005 ஆம் ஆண்டில் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry) ஒத்துழைப்புடன், சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் ஒன்று தொடங்கப்படும். பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பு முறையில் இந்த மையத்தை ஏற்படுத்துவதற்காக 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அளவில் தனியார் தொழில் முனைவோர் முதலீட்டிற்கு ஊக்குவிப்பதுடன், மக்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.


**80.** தொழிற்சாலைகள் பெருவாரியாக அமைந்துள்ள பகுதிகளுக்குப் பயனளிக்கும் வகையில், தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர். இத்திட்டம் இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளையும் சந்தைத் தொடர்பு வசதியையும் அளிக்கும். தமிழ்நாட்டில் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொகுப்பு, மோட்டார் பம்பு மற்றும் வார்ப்படத் தொழில் தொகுப்பு, தோல் தொழில் தொகுப்பு, மோட்டார் வாகனத் தொழில் தொகுப்பு, மாம்பழக் கூழ் தொகுப்பு, கயிறு தயாரிப்பு மற்றும் உணவு தானியத் தொகுப்புகள் ஆகியவை இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும். 'ஐஎஸ்ஓ' (ISO) சான்றிதழைப் பெறுவதற்கும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கும் சிறு தொழில் பிரிவுகளுக்குத் தக்க உதவியளிக்கும் திட்டம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. சிறு தொழில்களுக்கான தொழில் நுட்பத்தைத் தரம் உயர்த்துதல் மற்றும் நவீனப்படுத்த உதவும் வகையிலான திட்டத்தை ஏற்கெனவே தொடங்கியுள்ளோம். இத்திட்டம் 2004-2005 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

### சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்

**81.** சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அனைத்து வகையிலும் அதன் சிறப்பினை மீண்டும் நிலை நாட்டுவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நோக்கமாகும். மெரினா கடற்கரையினை அழகுபடுத்தியது பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. சென்னையில் தரமான கட்டமைப்பு வசதிகளையும், சுகாதாரமான வாழ்க்கைச் சூழலையும் ஏற்படுத்துவதே இந்த அரசின் உயர் முன்னுரிமையாகும். தற்போது நடைபெற்றுவரும் கழிவுநீரகற்றுத் திட்டங்கள் முடிவடைந்த பின்னர், எஞ்சியுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, படிப்படியாக தரமான சாலைகளாக மாற்றப்படும். சென்னை மாநகருக்கான ஒட்டுமொத்தப் போக்குவரத்து மேலாண்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அதேவேளையில், போக்குவரத்திற்கான கால அளவைக் குறைக்கும் வகையில் சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அம்சமாகும். இத்திட்டம் 10 ஆண்டு கால அளவில் ரூபாய் 18,000 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் அதற்காக இலக்கிடப்பட்ட ஒதுக்கீடான ரூபாய் 1,780.95 கோடியை விடக் கூடுதலாக இருக்கும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மின்வழங்கல் மற்றும் பகிர்மானம், சாலைப் போக்குவரத்து, வடிகால் வசதிகள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், வீட்டு வசதி, குடிசைவாழ் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற துறைகளில் 2004-2005 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை உயரளவாக ரூபாய் 2,010 கோடி என இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

### நெசவாளர்கள் நலன்

**82.** நெசவாளர்களின் நலன் அரசின் உயர் கவனத்தைப் பெற்றுள்ளது. கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்வதை உறுதி செய்யும் வகையில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம், திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே, முதியோர் ஒய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்டு வரும் இலவச



சேலைகளும், இலவச வேட்டிகளும் கைத்தறி நெசவாளர்களிடமிருந்தே வாங்கப்பட்டு வருகின்றன. இதனால் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. உயர்தரம் வாய்ந்த பாலிகாட் சேலைகள், வேட்டிகளை 1.11 கோடி பெண்கள் மற்றும் 1.11 கோடி ஆண்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் பெருவாரியான வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பை அளிப்பதோடல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள 2.22 கோடி மக்களுக்கு ஆடைப் பாதுகாப்பு வசதியையும் அளிக்கிறது. இத்திட்டம், 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 173 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது.

83. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலைப் பகுதியில் 1,010 நெசவாளர்கள் பயனடையும்வகையில், ரூபாய் 6.87 கோடி செலவில், தறிக்கூடங்களுடன் கூடிய வீட்டுவசதித் திட்டம் ஒன்று தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்து, இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். இது இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவிலான வீட்டு வசதித் திட்டமாகும். நெசவாளர்களுக்குரிய இந்த தறிக்கூடத்துடன் கூடிய வீடுகளைக் கட்டும் திட்டத்திற்கு அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

84. இந்த அரசு, மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 73 கோடி செலவில் 'கோ–ஆப்டெக்ஸ்' நிறுவனத்தை திருத்தியமைக்கக் கருதியுள்ளது. பல்லடம், திருச்செங்கோடு, ஈரோடு மற்றும் ஆண்டிபட்டி ஆகிய இடங்களில் நாடா இல்லாத் தறிப் பூங்காக்கள் (Shuttleless Weaving Parks) நான்கு நிறுவப்பட்டு வருகின்றன. 2004–2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், கைத்தறி–துணித்தொழில் குறித்த திட்ட ஒதுக்கீடு, ரூபாய் 304.51 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

85. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உருவான "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002", தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு புதிய சாதனைகளைப் படைக்க உதவியுள்ளது. தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் பணிகள் துறையின் (ITES) ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 2000–2001 இல் இருந்த 11 சதவிகிதத்திலிருந்து, 2002–2003 இல் 17 சதவிகிதமாக வியத்தகு வளர்ச்சியடைந்துள்ளது. இந்தச் சாதனையை மேலும் வலுப்படுத்தத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

86. மாமல்லபுரம் செல்லும் சாலையில் சோழிங்கநல்லூரில் அறிவுத்திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) 2004–2005 இல் வடிவமைக்கப்படும். மொத்தம் ரூபாய் 127.41 கோடி செலவில், மத்திய கைலாஷ் சந்திப்பையும் மாமல்லபுரத்தையும் இணைக்கும்வகையில், தகவல் தொழில்நுட்ப விரைவுப்பாதைக்கானத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி யுள்ளார்கள். இந்த விரைவுப்பாதையில் அமையப்பெறும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இணைப்பதற்கு உலகத்தரம் வாய்ந்த சாலை வசதியினை இத்திட்டம் ஏற்படுத்தும். இப்குதியிலுள்ள பெரும்பரப்பு திட்டமிட்ட வளர்ச்சியின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்ப வளைகுடாப் பகுதி என அழைக்கப்படும். சென்னையைத் தவிர கோயம்புத்தூர் மாநகரமும், தகவல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணி ஆகியவற்றிற்கான முதலீட்டைப் பெறும்வகையில் மேம்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளில் தமிழ்நாட்டின் ஒப்பீட்டு அனுகூலங்களை

நிலைப்படுத்தும் ஒருபெரும் முயற்சியாக தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளின் பாடத்திட்டத் தொகுப்பு ஒன்று மேல்நிலைப் பள்ளி கணினி அறிவியல் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது. இதனால் இத்துறையில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறுவதற்கு நமது இளைஞர்கள் தயார் செய்யப்படுவர்.

**சுற்றுலா வளர்ச்சி**

87. மாண்புமிகு முதலமைச்சரின் தொழில் ரீதியான மற்றும் தொலைநோக்கு சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால் தமிழ்நாடு கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலம் என்ற பெருமையினைப் பெற்றுள்ளது. இது, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியதோடு உள்ளூர் சேவைப் பணித் தொழிலுக்கு ஒரு பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது. 2000–2001 ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென ஒதுக்கீடு ரூபாய் 5 கோடி என்றிருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் இது ரூபாய் 30.35 கோடியென பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசு ஆடம்பர வரி வீதங்களைக் குறைத்துள்ளதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் தற்போது உணவகத் தொழில் விரைந்து முன்னேறி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆதாயம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.



**நல்லாளுமைக்கான மின் ஆளுமை**


88. நல்ல ஆளுமைக்குத் திறமையான, ஒளிவு மறைவற்ற, மக்கள் பங்கேற்கும் நிருவாக அமைப்பு தேவை. நிருவாகத் திறமையையும், பணி வழங்கலையும் பெரிய அளவில் மேம்படுத்த இந்த அரசு மின் ஆளுமையை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தின் தலைமைச் செயலகம் ஏற்கனவே தொலைத்தூரத் தொடர்பு (Video-Conferencing) மூலம் மாவட்டத் தலைமையிடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களையும், சிறைச்சாலைகளையும் தொலை தூரத் தொடர்பு மூலம் இணைத்துள்ளோம்.

89. மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் சேவைப் பணிகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில், பெருமளவில் மக்கள் தொடர்புடைய பத்து துறைகள் மற்றும் நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்படும். வணிகவரி, பத்திரப்பதிவு, கருவூலக் கணக்கு, போக்குவரத்து மற்றும் நில அளவை மற்றும் தீர்வை ஆகிய துறைகளில் மின் ஆளுமைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 23 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. அலுவலகங்களுக்கிடையே எளிதில் அலுவலகத் தகவல் பரிமாற்றத்திற்கும், புள்ளிவிவரங்களை எளிதில் பகிர்ந்துகொள்வதற்கும் உதவும் வகையில், 2004–2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network) ஒன்றை ஏற்படுத்த ரூபாய் 8 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது.

**ஒட்டுமொத்த சமூகப்பாதுகாப்புறுதி வளையம்**

90. 1990 களின் முற்பகுதியில், பொருளாதார நிலைப்பாட்டையும், அமைப்பு ரீதியிலான மாற்றங்களையும் மத்திய அரசு துவக்கியபொழுது, நலிவுற்றோர், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் வறியோர் ஆகியோர் நலனை, இச்சீர்திருத்த நடைமுறைகளின் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள்தான் ஒருங்கிணைந்த சமூகப்பாதுகாப்புறுதிவளையம் ஏற்படுத்தும் கொள்கை ஒன்றை முன்மொழிந்தார்கள்.

91. தமிழ்நாட்டில் நிதி நிலைச் சீர்திருத்த நடவடிக்கைகள் சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேறு எந்தவொரு மாநிலத்திலும் இது சாத்தியமாகவில்லை. இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். அரசு



எதிர்கொண்டுள்ள நிதி இடர்பாட்டின் தன்மையையும் கடுமையையும் பொருட்படுத்தாது ஏழை எளியோருக்கான ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் அமைப்பதில் எந்தவிதக் குறைபாடும் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தி செயலாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே இப்பெருமை சாரும். இதன் மூலம் சமூகப்பாதுகாப்பு வளையம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2004–2005 வரவு–செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு மொத்த ஒதுக்கீடு ரூபாய் 5,329.28 கோடியாகும்.

## மனிதவள மேம்பாடு

## அனைவருக்கும் கல்வி

92. ஒரு கிலோ மீட்டர் வளையத்திற்குள் உள்ள குடியிருப்புப் பகுதிகள் அனைத்திற்கும் பயன்தரும் வகையில் ஒரு தொடக்கப்பள்ளி ஏற்படுத்தப்பட்டுள்ள தனிச் சிறப்பினை 2003–2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பெற்றுள்ளது. இந்த அரசு 2004–2005 ஆம் ஆண்டில் 364 தொடக்கப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும். இதனால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களும் எளிதாகவும் வசதியாகவும் அணுகக்கூடிய நடுநிலைப் பள்ளிகளைப் பெறுவது உறுதி செய்யப்படும். மேலும், 2004–2005 ஆம் ஆண்டில் 30 நடுநிலை மற்றும் 30 உயர்நிலைப் பள்ளிகளை முறையே உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவோம்.


93. “அனைவருக்கும் கல்வித்” திட்டத்தின் கீழ், பள்ளிகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் ஆண்டுகளில் இந்த அரசு ரூபாய் 506.13 கோடி செலவிட்டுள்ளது. 600 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி பயிற்றுவிக்கும் ஆய்வகக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கணினிக் கல்வி விருப்பப் பாடமாக கற்பிக்கப்படுவது 2004–2005 ஆம் ஆண்டில் மேலும் 400 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரிவு படுத்தப்படும். இதன் மூலம், 1,597 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். அடுத்த நிதியாண்டில் ரூபாய் 5.30 கோடி செலவில் 500 உயர்நிலைப்பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்படும். பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3,937.29 கோடியாக இருந்தது. இது 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 4,202.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

94. தொழில்நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலகவங்கியின் நிதியுதவி பெறுவதற்கான அனுமதியை தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதை அறிவதில் இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். இத்திட்டம் ஐந்து வருட கால அளவில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்படும். அடிப்படை அறிவியல் துறைகள் சிறந்து விளங்க இந்திய அறிவியல் நிறுவனத்தை (Indian Institute of Science) ஒத்த தேசிய அறிவியல் நிறுவனம் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது சென்னைப் பல்கலைக்கழகமும் அண்ணா பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு முயற்சியாகும். உயர்கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 614.70 கோடி என்றிருக்க, அது 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 649.81 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு மேம்பாடு

95. 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுக்களுக்கான ஒதுக்கீடு ரூபாய் 27.27 கோடியாக இருந்தது; அது 2004–2005 வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 48.14 கோடியாக பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அளவில் விளையாட்டுக்களுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், விளையாட்டு வீரர்களின் உடல்திறனைக் கண்டறிவதற்கும், விளையாட்டில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கான பயிற்சிகளுக்கும்

தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் படுவதற்கும் அடுத்த நிதியாண்டில் முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டிற்கான தனித்தொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும்.



## தமிழ் வளர்ச்சி

96. தமிழ்மொழி மேம்பாடு இந்த அரசின் மிக உயர்ந்த கவனத்தைப் பெற்றுள்ளது. இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அனைத்துப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான அறிவியல் தமிழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 5.42 கோடி செலவில் அறிவியல் தமிழ்ப் பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளோம். தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2004-2005 ஆம் ஆண்டில், உலகளவில் தமிழ் தேடுபொறி(Search Engine), வணிகத் தமிழுக்கான இணைய உள்ளடக்கம் (Web content), தமிழ் இணைய வகுப்பறைகள் ஆகியவற்றை வடிவமைப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

## மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலன்

97. மக்களுக்கு எளிதில் பெறத்தக்கதும் தரமானதுமான சுகாதார வசதிகளைக் கிடைக்கச் செய்வதில் தமிழ்நாடு வியத்தகு சாதனை புரிந்துள்ளது. இதனை முக்கிய நல்வாழ்வுக்கான குறியீடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திலிருந்து அறியலாம். 2000 ஆம் ஆண்டில், குழந்தை இறப்பு வீதம் (IMR) ஆயிரத்திற்கு 51 என்ற நிலையிலிருந்து, 2002 ஆம் ஆண்டில் ஆயிரத்திற்கு 44 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இதேபோன்று இந்தக் கால அளவில் பிறப்பு வீதம் ஆயிரம் மக்கள்தொகைக்கு (CBR) 19.3 என்ற அளவிலிருந்து, 18.5 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது.

98. இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து ரூபாய் 86.25 கோடி மொத்தச் செலவில், 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதோடு, 93 ஆரம்ப சுகாதார மையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. எம்.ஆர்.ஐ. (MRI), சிட்டி.ஸ்கேன் (C.T. Scan) ஈ.சி. ஜி. (ECG), ஈ.ஈ.ஜி (EEG), அல்ட்ரா சவுண்ட் மற்றும் எக்ஸ்ரே, போன்ற வசதிகள் கொண்ட ஏழு வட்டார நோய் அறி மையங்கள் ரூபாய் 21 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சாலை விபத்துக்களில் உயிரிழப்பைக் குறைப்பதற்குத் தனிமுக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் 73 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

99. ரூபாய் 9.34 கோடி செலவில் பொதுமக்களுக்கு அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே தரமான மருத்துவ சேவையை அளிக்கும் வகையில் மொத்தம் 571 சிறப்பு சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 11.38 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். 56.65 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் 2003-2004 ஆம் ஆண்டில் பள்ளி மருத்துவ முகாம் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.

100. மகப்பேறு காலத்தில் தாய்மார்கள் ஆயிரம் மகப்பேறுக்கு இறப்பு வீதம் 1.3 என்ற வீதத்தில் இருப்பதைக் குறைப்பதற்கான உறுதியான நோக்குடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது இரண்டு மருத்துவமனைகளில் 24 மணிநேர மகப்பேறு அறுவை சிகிச்சையை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அவசரகால



மகப்பேறு கவனிப்பு வசதியைச் செய்து கொடுக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. குழந்தை இறப்பு வீதத்தை மேலும் குறைப்பதற்காக “24 மணி நேர ஒட்டுமொத்த அவசரகால பிறந்த குழந்தை கவனிப்பு வசதியையும்” இந்த மருத்துவமனைகள் அளிக்கும்.


101. உலக வங்கியின் நிதி உதவியுடன் சுகாதார அமைப்புகள் மேம்பாடுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பெரும் முன்னேற்றத்தை கண்டுள்ளோம். 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 500 கோடி செலவிலான இந்த நல்ல திட்டம் தொடங்கப்படும். ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் அயல்நாட்டு நிதியுதவி பெறும் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Reproductive Child Health Project) 5 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டவுடன், ஆரம்ப சுகாதார கட்டமைப்பு வசதி பெருமளவில் வலுப்படுத்தப்படும்.

102. பிரதம மந்திரி ஸ்வாஸ்த்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் புது தில்லியில் அமைந்திருக்கும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்துக்கு இணையாகத் தமிழ்நாட்டில் ஒரு மருத்துவக் கல்லூரி நிலை உயர்த்தப்படும் என்கிற மத்திய அரசின் அறிவிப்பை வரவேற்கிறோம். நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்கு ரூபாய் 1,304.31 கோடியாய் இருந்த ஒதுக்கீடு, வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 1,387.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### பெண்ணுரிமை

103. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்வது இம்மாநிலத்திலுள்ள இலட்சோப இலட்சம் பெண்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரொளிமிக்க முன்மாதிரியாகத் திகழ்வதனால் தமிழ்நாட்டில் பெண்ணுரிமை நிலை நாட்டப்பட்டுள்ளது. இப்புது உத்வேகம் மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரவியுள்ளது. முன்னர் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பெண்கள், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தற்போது பீடுநடை போடுகின்றனர்.

104. அரசின் அனைத்துச் சட்டம் மற்றும் சட்டம்சாராக் குழுக்களிலும் பெண்களுக்கு 33 சதவிகிதம் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய தக்க நடவடிக்கை எடுத்துள்ள நாட்டிலுள்ள ஒரு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத் தலைவர், தமிழ்நாடு அரசுத்




தலைமைச் செயலாளர் போன்ற தலைமைப் பதவிகளைப் பெண்கள் நிருவகித்து வருகின்றனர். அனைத்து மகளிர் அதிரடிப்படை நிறுவப்பட்டது மற்றும் முதல் மகளிர் காவல்படை உருவாக்கப்பட்டது ஆகிய நடவடிக்கைகள் மகளிர் ஆண்களுக்கு நிகராகப் பங்கேற்று ஆண்களைவிடச் சிறந்த முறையிலும் செயல்படுவர் என்பதை நிரூபித்துள்ளது.

105. 1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் விரைவாக வளர்ந்து பெண்ணுரிமைக் கான ஒரு மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மகளிர் திட்டத்திற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கியுள்ளோம். பயிற்சித் திட்டங்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் புதிய குழுக்கள் அமைத்தல் ஆகியவைகளுக்கும் இது உதவும். 2004–2005 ஆம் ஆண்டில் கூடுதலாக 5 இலட்சம் மகளிரைச் சேர்த்து மேலும் 25,000 சுய உதவிக் குழுக்களை அமைக்க இயலும் என்று நம்புகிறோம்.



### சத்துணவு

106. இந்த அரசின் முனைப்பான செயலாக்கத்தினால் துணை ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகளின் சேர்க்கை மற்றும்

உணவின் தரம் வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 77 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தவாறு, மதிய உணவுப் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகைகளை வழங்க இந்த அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 685.41 கோடியாகும்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

107. தரமான கல்வி, கடன்வசதி, சுயவேலை வாய்ப்பிற்கான பயிற்சி, வீட்டுவசதி போன்றவற்றை எளிதில் கிடைக்கச் செய்வதன்மூலம், ஆதிதிராவிடர்–பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல் எனும் இந்த அரசின் அணுகுமுறை நல்ல வரவேற்பினைப் பெற்றுத்தந்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மேம்பாடடைவதற்கான வளர்ச்சித் திட்டச்செயலாக்கம் பரவலாக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்புச் செயல் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 1.43 இலட்சம் மக்களுக்கு ரூபாய் 65.99 கோடி அளவிற்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் இச்சமுதாயங்களைச் சேர்ந்த 7,000 நிலமற்ற பெண்கள் பயனடையும் வகையில் நிலமற்றோருக்கு நிலம் வழங்குவதற்கான புதிய திட்டமொன்று தற்போது தொடங்கப்பட்டுள்ளது.



108. 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவர் இல்லங்கள் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பதினோராம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்கு வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 429.09 கோடியாக இருந்தது. இது 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 448.91 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

### பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

109. இந்த வகுப்பைச் சேர்ந்த மக்களின் நலனுக்கான ஒதுக்கீடு 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 159.79 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமுதாயத்தினரின் சமுகப்பொருளாதார முன்னேற்றம் மற்றும் கல்வி அறிவு பெறும் உரிமையைப் பெறுவதற்கான உதவிகளை இந்த அரசு தொடர்ந்து அளிக்கும்.

110. 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டப்படும். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசத் தொழிற்கல்வி பெறுவதற்கு ரூபாய் 4.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இச்சமுதாயப் பெண்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கும் திட்டம் தொடரப்படும். வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் இச் சமுதாயத்தினருக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் ஏனைய கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக ரூபாய் 2.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### நிதி நிலைமைக் கணிப்புகள்

111. 2003–2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் இம்மாமன்றத்தின் முன்வைக்கப் பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 3,933.47 கோடியாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறையைத் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3,699.51 கோடியாக நம்மால் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1,295.15 கோடியாக இருந்த மொத்தப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 245.52 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 22,665.90 கோடியாக இருக்கையில்,

திருத்த மதிப்பீட்டில் இது ரூபாய் 22,850.53 கோடியாக இருக்கிறது. மேலும், 2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் இனச் செலவு ரூபாய் 26,599.37 கோடி என்று இருக்கையில், திருத்த மதிப்பீட்டில் மொத்த வருவாய் இனச் செலவு ரூபாய் 26,550.04 கோடியாக உள்ளது.

112. நடப்பாண்டில் திருத்த மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளதைவிடக் குறைவாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இருந்த குழப்பமான நிதி நிலைமையை, இன்று சீர்செய்துள்ளோம் என்பதில் நாம் பெருமை அடையலாம். அரசின் வழிவகை நிதிநிலை சீரடைந்துள்ளதோடு, தற்போது செலவுப் பட்டிகளுக்கு உடனடியாகத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் நிதிநிலைச் சமன்பாட்டை மீளப்பெற்றதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இவ்வரசு சிறப்பான முயற்சி எடுத்துள்ளதை அவை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர்.

113. 2004–2005 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவுகள் ரூபாய் 24,792.30 கோடியாக இருக்க, மொத்த வருவாய்ச் செலவு ரூபாய் 28,128.73 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூபாய் 3336.43 கோடியாக இருக்கும். மொத்த வருவாய் வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறையின் பங்கு 13.5 சதவீதமாக இருக்கும். 2004–2005 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 590.47 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிப்பற்றாக்குறை ரூபாய் 6921.77 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் இனங்களில் விதிகளுக்குட்பட்டு உரிய வசூல் நடவடிக்கைகள் மூலமாக வருவாயைப் பெருக்கியும் ஆதாயமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தியும் நிதிநிலையைச் சீராக்கும் கொள்கை 2004–2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

## நிலவரி

114. தொடர்ந்து மூன்றாண்டுகளாக பாதகமான பருவநிலை நிலவி, 2002–2003 ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. 2003 ஆம் ஆண்டில் பருவமழை அதற்கு முந்தைய ஆண்டைவிட மேலாக இருந்தபோதிலும், வடகிழக்குப் பருவமழை மீண்டும் பொய்த்தது. நிலத்தடி நீரின் அளவும் குறைவாகவே உள்ளது. 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் அன்று 2003 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஜூன் வரையிலான பசலி 1413–இல் விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி அனைத்து மாவட்டங்களிலும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். மேலும், உள்ளூர் தலவரி, உள்ளூர் தலமேல்வரி ஆகியவையும் தள்ளுபடி செய்யப்படும். அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிப்பதற்காக இவை அறிவிக்கப் பட்டுள்ளன. விவசாயிகளுக்கு அளிக்கப்படும் இந்த உதவி காரணமாக, சுமார் ரூபாய் 60 கோடி அளவில் அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

## வேளாண்மை வருவாய் மீது வரிகள்

115. விலைச்சரிவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக தோட்டத் தொழில்களில் தொடர்ந்து இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, 1997–98 ஆம் ஆண்டில் மாநில அரசிற்கு ரூபாய் 39.4 கோடி அளவிற்கு வருவாய் ஈட்டித் தந்த வேளாண் வருமான வரி 2002–2003 ஆம் ஆண்டில் ரூபாய் 1.6 கோடி என்ற அளவிற்கு மிகவும் குறைந்துவிட்டது. 2003–2004 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபாய் 1.35 கோடியாக இருக்க இதே வரியை வசூலிப்பதற்கு ஆகும் செலவு ரூபாய் 1.6 கோடியாகும். இவ்வாறாக, வசூலுக்கு ஆகும் செலவு வருவாயை விஞ்சிவிட்டது.

116. தோட்டத் தொழில் துறைக்குப் புத்துயிர் அளிக்கவும் தேயிலை பயிரிடுவோருக்கு நல்ல விலையை உறுதி செய்யவும், இவ்வரி வசூலுக்கு ஆகும் நிர்வாகச் செலவு கிடைக்கும் வருவாயை விட கூடுதலாக இருப்பதாலும், 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து வேளாண் வருவாய் வரியை ரத்து செய்யலாம் என இவ்வரசு முடிவு செய்துள்ளது.

## வணிகவரிகள்

117. விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் ஒரு மாதத்திற்கு 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 சதவிகிதம் வட்டி விதிக்கப்படுகிறது. வட்டிவிகிதங்கள் மிக உயர்வாக

இருந்த காலத்தில் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது, வட்டி விகிதங்கள் குறைந்துள்ளதால் புதிய முறையில் வட்டி விகிதத்தை குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதல் 90 நாள்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு மாதத்திற்கு 1.5 சதவிகிதமும், அதன்பிறகு மாதத்திற்கு 2 சதவிகிதமும் விதிக்கப்படும். வரியினை குறித்த காலத்தில் செலுத்த இந்தப்புதிய முறை உதவும். 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்படும்.

118. உலராத பேரீச்சம்பழத்தின் மீது தற்போது 12 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. பொதுவாக உணவுப் பொருள்கள் 4 சதவிகித வரிவிகித அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. பால்பவுடர், இனிப்பு, மிட்டாய் வகைகள், ஊறுகாய், சாக்லெட்கள் போன்றவை 4 சதவிகித வரிவிகித அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பிற பொருட்களாகும். உலராத பேரிச்சம் பழம் உணவுப் பொருளாக உள்ளதால், இதன் மீது விதிக்கப்படும் வரியினை 4 சதவிகிதமாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

119. கணினி உபரி பொருள்கள் மற்றும் உதிரி பாகங்கள் மீது விற்பனை வரி 4 சதவிகிதமாகும். மத்திய விற்பனை வரியும் 4 சதவிகிதமாகும். தமிழ்நாட்டை கணினி வன்பொருள் மையமாக நிலைநிறுத்தும் நமது திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக குறைக்கப்படும்.

120. மத்திய விற்பனை வரிச்சட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் இடைமாநில விற்பனைக்கு "சி" படிவம் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சிக்கல் உருவாகியுள்ளது. இதனால், பதிவு பெறாத வணிகர்களுக்கு இடைமாநில விற்பனையின் மீது 10 சதவிகிதம் மத்திய விற்பனை வரி கட்டாயமாக வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. வடமாநிலங்களில் உள்ள சிறு வணிகர்களுக்கு விற்பனை செய்யும் தமிழ்நாட்டிலுள்ள பின்னலாடைத் தொழில் துறைக்கு இதனால் பிரச்சினை எழுந்துள்ளது. இப்பிரச்சினைக்கு தீர்வுகாண மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். இது சட்டமாக்கப்பட்டு விட்டதனால், பின்னலாடை இடைமாநில விற்பனைக்கு முதலில் 10 சதவிகித வரிவிதிக்கப்பட்டு பின்னர் அதில் 9 சதவிகிதத் தொகை ஒரு குறிப்பிடத்தக்க மானியமாக திருப்பியளிக்கப்படும். இதனால் இறுதி வரிவிகிதம் 1 சதவிகிதமாக மட்டும் இருக்கும். இந்தச் சலுகை ஓராண்டில் பின்னலாடையை வெளிமாநிலத்திலுள்ள கிளைகளுக்கு அனுப்பும்பொழுதோ அல்லது வெளிமாநில முகவர் மூலம் விற்பனை செய்தாலோ அவர்களுக்கு இது பொருந்தாது.

121. உயிர்காக்கும் மருந்துகளுக்கு ஏற்கெனவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சிறுநீரகச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் (CAPD) என்ற திரவமும் உயிர்காக்கும் இன்றியமையாத மருந்தாக இருப்பதால் இதற்கும் வரிவிலக்கு அளிக்க உத்தேசிக்கப்படுகிறது. மேலும் எய்ட்ஸ்சால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் சிகிச்சைக்கு பின்வரும் பத்து மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. ZIDOVUDINE
2. LAMIVUDINE
3. STAVUDINE
4. DIDANOSINE
5. NEVIRAPINE
6. EFAVIRENZ
7. NELFINAVIR
8. INDINAVIR
9. SEQUINAVIR
10. RETONAVIR

இந்த மருந்துகளை உயிர்காக்கும் மருந்துகளின் பட்டியலில் சேர்த்து விற்பனை வரி விலக்களிக்கப்படும்.

122. மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) தமிழ்நாட்டிலுள்ள எரிவாயுக் கிணறுகளிலிருந்து இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்து பின்னர் கேஸ் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் (GAIL) என்ற மற்றொரு மத்திய அரசு நிறுவனத்திற்கு விற்பனை செய்துவருகிறது. தற்போது நடைமுறையில் உள்ள வரி விதிப்பு விகிதத்தின் கீழ் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC), GAIL நிறுவனத்திற்கு

செய்யும் முதல் விற்பனையின் மீது 8 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. பின்னர், தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட பிற உபயோகிப்பாளர்களுக்கு GAIL நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் இரண்டாம் நிலை விற்பனைக்கு 1 சதவிகித விற்பனை வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனைத்து கொள்முதல்களுக்கும் 4 சதவிகிதம் வரி செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கும் இயற்கை எரிவாயுவிற்கு ஏற்கெனவே முதல் நிலையில் 8 சதவிகித வரி விதிக்கப்பட்டுவிட்டதால் இது சாத்தியமாகாது. எனவே தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு GAIL நிறுவனம் விற்பனை செய்வதற்காக மட்டும் (ONGC) நிறுவனத்திடமிருந்து வாங்கும் இயற்கை எரிவாயுவின் மீதான முதல் நிலை விற்பனை வரி 4 சதவிகிதமாக குறைத்து விதிக்கப்படும். மேலும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு GAIL நிறுவனம் செய்யும் இரண்டாம் நிலை விற்பனைக்கு மறுவிற்பனை வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

123. மாசுக்கட்டுப்பாட்டு சாதனங்களை நிறுவுவதற்கு ஊக்குமளிக்கும் வகையில் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் மீதான வரியினை திருத்தியமைத்து பொதுவான 4 சதவிகித வரிவிகிதமாக குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாசுக்கட்டுப்பாடு வாரியத்தி லிருந்து இவ்வகை சாதனங்களுக்கான பட்டியல் பெறப்படும்.

124. கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைவினைப் பொருட்கள் மீதான விற்பனை வரிவிகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

125. இசைக் கலைஞர்களின் நலன் கருதி இந்திய இசைக் கருவிகளுக்கு தற்பொழுது விதிக்கப்பட்டு வரும் 4 சதவிகித வரியிலிருந்து முழுவதுமாக வரிவிலக்கு அளிக்க உத்தேசித்துள்ளேன்

126. தற்போது கோழித் தீவனத்திற்கு முழுவதுமாக வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. சுண்ணாம்புக்கல் கோழித் தீவனத் தயாரிப்பில் சிறிதளவு சேர்க்கப் படுகிறது. சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதமாக உள்ளது. கோழித் தீவனம் தயாரிக்க கொள்முதல் செய்யப்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரியை 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

127. கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீது ஒரு சதவிகிதம் மறுவிற்பனை வரி விதிக்கப்படுகிறது. கூட்டுறவு அங்காடிகளில் பொருட்களை வாங்கும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் கூட்டுறவு சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நுகர்வோர் பொருட்கள் கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் பிரிவு 17 ன் கீழ் விதிக்கப்படும் மறு விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

128. சட்டத்திருத்தம் தேவைப்படும் மாற்றங்களைத் தவிர்த்து நான் அறிவித்த ஏனைய வரி விதிப்பு மாற்றங்கள் அனைத்தும் இதற்கான அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

## முத்திரைத்தாள் வரி

129. டாக்டர் ராஜா J. செல்லையா தலைமையிலான வரிசீரமைப்பு மற்றும் வருவாய்ப் பெருக்க ஆணையம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் சொத்து மாற்ற கிரைய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் மிகு வரி சதவிகிதங்களை அரசு ஏற்கெனவே குறைத்துள்ளது. இது அனைவராலும் வரவேற்கப் பட்டுள்ளது. மேலும் சொத்து மாற்றங்களை எளிமை யாக்கவும் சட்ட வரையறைகளின்படி முத்திரைத் தீர்வைகளை செலுத்தவும் இன்னும் பிற ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வை சதவிகிதங்களை எளிமையாக்கிடவும் குறைத்திடவும் இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை விரிவாக பரிசீலித்துள்ளோம். பின்வரும் நடைமுறைகளை அறிமுகப்படுத்த உள்ளோம்.

130. தற்போது, குடும்ப உறுப்பினர்களிடையே மேற்கொள்ளப்படும் சொத்து மாற்றங்கள் ஏற்பாடு (Settlement), விடுதலை (Release), பாகப் பிரிவினை (Partition) மற்றும் கூட்டாண்மை கலைப்பு (Dissolution of partnerships) ஆகிய ஆவணங்கள் வழி நடைபெறுகின்றன. குடும்ப உறுப்பினர் களிடையேயான ஏற்பாடு மற்றும் விடுதலை முறையிலான சொத்துமாற்ற ஆவணங்களுக்கு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட மதிப்பின் மீது 4 சதவிகிதம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகின்றது. பாகப்பிரிவினை பற்றிய ஆவணங்களுக்கு சொத்து

மதிப்பின் மீது 2 சதவிகிதம் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகின்றது. கூட்டாண்மை கலைப்புக்கு பின் ஏற்படும் பாகப்பிரிவினை பற்றிய ஆவணங்களுக்கு பிரிக்கப்பட்ட பங்குகளின் சந்தை மதிப்பிற்கு 3 சதவிகிதம் முத்திரைத் தீர்வை வசூலிக்கப் படுகின்றது. மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு ஆவணத்திற்கும் 1 சதவிகிதம் பதிவு கட்டணமாக உச்சவரம்பின்றி வசூலிக்கப் படுகின்றது. டாக்டர் ராஜா J. செல்லையா தலைமையிலான வரி சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்க ஆணையம் இந்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை 1 சதவிகிதமாக குறைத்திடவும் அதிகபட்சமாக ரூபாய் 2 இலட்சம் நிர்ணயித்திடவும் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள அனைத்து வகையான ஆவணங்களுக்கும் முத்திரைத் தீர்வை சொத்தின் சந்தை மதிப்பின் மீது 1 சதவிகிதமாகவும், உயர்ந்தபட்ச முத்திரைத் தீர்வை ரூபாய் 10,000 என குறைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் அறிவிக்கின்றேன். பதிவுக் கட்டணம் 1 சதவிகிதம் எனவும் அதிகபட்ச கட்டணம் ரூபாய் 2,000 எனவும் நிர்ணயிக்கப்படும். பாகப்பிரிவினை ஆவணங்களைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு பங்கிற்கும் முத்திரைத் தீர்வையும் பதிவுக் கட்டணமும் விதிக்கப்படும். விவசாய நிலம் சம்பந்தமான பாகப் பிரிவினையைப் பொறுத்தமட்டில் தற்போதுள்ள சலுகைப் பதிவுக் கட்டணங்கள் தொடரப்படும்.

**131.** கடன் அளிப்பதற்கும் கடன் பெறுவதற்கும் அடமான ஆவணங்கள் பரவலாக பயன்படுத்தப் படுகின்றன. பெரும்பாலான நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் தாங்கள் அளிக்கும் கடனுக்குப் பாதுகாப்பாக இந்த அடமானத்தைப் பெறுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளை முற்றிலும் எளிமையாக்கிட முடிவு செய்துள்ளோம். வர்த்தக வங்கிகளும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவு கட்டணம் வசூலிப்பதை எளிமையாக்கிடக் கோரியுள்ளன. எனவே சொத்து ஒப்படைக்கப்படாத சாதாரண அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை 4 சதவிகிதத்தில் இருந்து 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும் எனவும் இதற்கான உச்ச வரம்பு ரூபாய் 20,000 எனவும் நிர்ணயித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் 1 சதவிகிதமாகவும் இதற்கான உச்சவரம்பு ரூபாய் 5,000 எனவும் விதிக்கப்படும்.

**132.** சொத்து ஒப்படைப்புடன் கூடிய அடமான ஆவணங்களுக்கு தற்போதைய முத்திரைத் தீர்வை கடன் தொகையின் மீது 6 சதவிகிதம் என்பது கடன் தொகையின் மீது 3 சதவிகிதம் என குறைக்கப்படும். மிகுவரி (Transfer Duty) கடன் தொகையின் மீது 2 சதவிகிதம் என்பது 1 சதவிகிதமாக குறைக்கப் படும். இவ்வாறாக மொத்த கட்டணமும் கடன் தொகையில் 4 சதவிகிதமாக அமையும். பதிவுக் கட்டணம் முன்போலவே 1 சதவிகிதமாகவும் அதற்கான உச்சவரம்பு ரூபாய் 2 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப் படும்.

**133.** உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு நிதி நிறுவனங்களால் கையாளப்படும் பிரிதொரு முக்கிய ஆவணமாகும். இத்தகு நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்திடுவதை ஊக்குவிக்க, குறிப்பு, குறிப்பாணை மற்றும் பிற ஆவணங்களையும் உரிமை ஒப்படைப்பு ஆவணங்களாகக் கருத முடிவெடுக்கப் பட்டுள்ளது. தற்போது இந்த ஆவணங்களுக்கு கடன் தொகையின் மீது 0.5 சதவிகிதம் முத்திரைத் தீர்வையும் 1 சதவிகிதம் பதிவுக் கட்டணமும் விதிக்கப்படுகின்றது. இது தொடர்ந்து விதிக்கப்படும். தற்போதுள்ள முத்திரை தீர்வைக்கு உச்சவரம்பு ரூபாய் 5,000 எனவும் பதிவுக் கட்டணத்திற்கு ரூபாய் 1,000 எனவும் நிர்ணயிக்கப் படும். இந்தப் புதிய ஏற்பாடு இந்த வகையான ஆவணங்களை எளிதில் பதிவு செய்திட வழிவகுக்கும்.

**134.** பரவலாக பயன்படுத்தப்படும் மற்றொரு ஆவணம் குத்தகை முறையாக முத்திரையிடப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், சொத்து மாற்றங்களில் ஒரு தெளிவினையும் ஒளிவு மறைவற்ற தன்மையையும் உறுதி செய்யும். தற்போதைய முத்திரைத் தீர்வை விகிதம் மிகவும் சிக்கலானதாகவும் பல அடுக்குகளை கொண்டதாகவும் உள்ளது. இந்த ஆவணங்களுக்குகான முத்திரைத் தீர்வையை பின்வருமாறு சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த விகிதம் முழு வாடகை (Total Rent) மற்றும் முன்பணம் (Advance) அல்லது அபராதம் (Fine) அல்லது தவணைக் கட்டணம் (Premium) ஆகியவைகளின் மீது வசூலிக்கப்படும்.

| குத்தகை காலம் | உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதம் |
|---|---|
| **30 ஆண்டுகள் வரை** | **1%** |
| **31 ஆண்டுகள் முதல் 99 ஆண்டுகள் வரை** | **4%** |
| **100 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல்** | **8%** |

முழு வாடகை, முன்பணம் அபராதம் மற்றும் தவணைக் கட்டணம் ஆகியவற்றின் மீதான பதிவுக் கட்டணம் 1 சதவிகிதம் ஆகும். இதற்கான உச்சவரம்பு ரூபாய் 5,000 என்ற நிபந்தனைக்குட்பட்டு விதிக்கப்படும்.

135. கைமாற்றுத் தொகையுடன் கூடிய அதிகார ஆவணம் (Power of Attorney for Consideration) மற்றொரு முக்கிய ஆவணமாகும். தற்போதைய முத்திரைத் தீர்வை 6 சதவிகிதம் என உயரளவில் உள்ளதால் இந்த அதிகார ஆவணங்கள் பொதுவாக பதிவு செய்யப்படுவதில்லை. ஆகையால் இது தவறாகப் பயன்படுத்தப்பட்டு, சொத்து வாங்கும் ஏதுமறியாத பொதுமக்கள் ஏமாற்றப்பட வாய்ப்புள்ளது. சொத்து வாங்குபவர்கள் பதிவு பெற்ற அதிகார ஆவணங்களை ஏற்பது என வற்புறுத்தினால் மட்டுமே இதனைச் சரிசெய்ய இயலும். வரிச் சீரமைப்பு மற்றும் வருவாய் பெருக்க ஆணையம் பரிந்துரைத்தபடி இதற்கான முத்திரைத் தீர்வையை 6 சதவிகிதத்தில் இருந்து 4 சதவிகிதமாகக் குறைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் தொடர்ந்து 1 சதவிகிதமாகவே இருக்கும்.

136. ஒன்பது வருவாய் மாவட்டங்களில் பட்டா பாஸ் புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆவணங்களைப் பதிவு செய்திட பட்டா பாஸ் புத்தகம் கட்டாயமாக தாக்கல் செய்யப்பட வேண்டியது ஒரு நிபந்தனையாகும். இதனால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. வட்ட அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் நாளது வரை சரிசெய்யப்பட்ட தேவையான சிட்டா நகல்களை அளிப்பது ஏதுவாகும். எனவே பதிவின்போது பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்திட வற்புறுத்தத் தேவையில்லை. ஆகவே இந்த நிபந்தனை தளர்த்தப்படும். இதனால் விவசாயிகள் பலன் பெற்று தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்து திரும்பப் பெற்றிட வழிவகுக்கும்.

137. பல்வேறு சட்டங்களின் கீழ் உள்ள தொடர்புடைய பிரிவுகளுக்கு சட்டத்திருத்தம் தேவைப்படும் இனங்கள் தவிர பிற இனங்கள் மீதான கட்டண விகித மாற்றங்கள் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1908 ஆம் ஆண்டு பத்திரப்பதிவுச் சட்டம் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உரிய அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

## ஒட்டுமொத்த நிதி நிலவரம்

138. மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் வரிகள் மீதான பல கருத்துருக்களை கோடிட்டுக் காட்டியுள்ளேன். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இந்த அரசு பல வரிச்சலுகைகளை அளிக்க உத்தேசித்துள்ளது. நிதி நிலைமையை வலுப்படுத்த வேண்டியிருக்கும் வேளையில் மக்களுக்கு பயன்தரும் வகையிலும் முதலீட்டுச் சூழலை மேம்படுத்து வதற்காகவும் இந்தச் சலுகைகளை நீட்டிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. நான் தற்போது அறிவித்த சலுகைகளை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் பெருவாரியாக வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

139. நிலவரித் தள்ளுபடி, வேளாண்மை மீதான வரிகளை விலக்கியது மற்றும் மக்களுக்கு பயனளிக்கும் ஏனைய சலுகைகளினால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு ரூபாய் 140 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. வரிநிலுவைகளை வசூலிப்பதில் முன்னேற்றம், மேலும் ஆதாயமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இது சரிக்கட்டப்படும். இதன் காரணமாக 2004–2005 ஆம் ஆண்டு இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 590.47 கோடியாகவே இருக்கும். இப்பற்றாக்குறையை தகுந்த நிதி மேலாண்மையின் மூலமும் மத்திய அரசிடமிருந்து உயரிய அளவில் நிதிகளைப் பெறுவதின் மூலம் ஈடு செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

140. வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நடுத்தரக்கால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இதனை வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படித்ததாக எடுத்துக் கொள்ளலாம். இந்த அரசு எடுத்த முயற்சிகள் நிதிச்சமன்பாட்டை எய்துவதில் ஏற்கெனவே எய்திய முன்னேற்றங்களைத் தொகுப்பதாக இருக்கும். நிதிச் சரிக்கட்டல் குறித்த நடவடிக்கை மிகவும் சிக்கலானதாக உள்ளது. ஏற்கெனவே நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், நடுத்தரக்கால நிதித் திட்டத்தில், குறிப்பிட்டுள்ள இலக்கு மேலும் முன்னேற்றம் அடைவதற்குரிய கட்டமைப்பை அளிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து மகிழ்வர்.

141. 2003–2004 ஆம் ஆண்டில் நாம் கண்ட விரைவான முன்னேற்றத்தின் அடிப்படையில் வரும் நிதி ஆண்டில் (2004–2005) இந்த அரசு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து நான் இங்கு கோடிட்டு காட்டியுள்ளேன். பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தை நமக்கு முன் தொடங்கிய மாநிலங்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கணிசமான நிதியுதவியை ஏற்கெனவே பெற்றிருந்தன. தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களுடைய அயராத கடும் உழைப்பினால் மட்டுமே மிகக்குறுகிய காலத்தில் எவ்வித உதவியுமின்றி வளர்ச்சி மற்றும் வளமை நோக்கிய பாதையில் நாம் வெகுவேகமாக முன்னேறியுள்ளோம். தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களது நிலைமாறாத கடும் உழைப்பு இல்லையெனில் 1996–2001 கால அளவில் நிதிநிலைச் சீரழிவு படுகுழியில் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை மீட்பதற்கு இயலாமல் போயிருக்கும். உண்மையான தலைவர் பாதகமான ஒரு சூழ்நிலையில்தான் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார். தமிழ்நாட்டு மக்கள் நலமும் வளமும் பெறவேண்டும் என்பதற்கான முயற்சிகளிலிருந்து சற்றும் வழுவாது ஒவ்வொரு தடையையும் தாண்டி நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் முன்னின்று நம்மை வழி நடத்தி வருகிறார்கள்.

142. தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக கடுமையான உழைப்பு மற்றும் முழு உறுதிப்பாட்டிற்கு தக்க வெகுமதி மிகவிரைவிலேயே கிடைக்க உள்ளது. தங்களது இன்ப துன்பங்களில் பங்கேற்று இடர்ப்பாடுகளின் போது துணை நிற்கும் உண்மையான தலைவரை நமது நீதிபதிகளாகிய பொது மக்கள் தவறின்றி இனங்கண்டு கொள்வார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு பீடுநடை போடுகிறது என்று உலகளவில் தற்போது பாராட்டப்பட்டு வருகிறது. இதன் காரணமாகத்தான் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஒளிபொருந்திய, எழுச்சி மிக்க, தலைமையினால்தான் குறுகிய காலத்தில் இவை அனைத்தையும் சாதிக்க முடிந்தது.

143. மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும் வகையில் 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது ஆக்கபூர்வமான கருத்துக்களை நான் வரவேற்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் உதவிய வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச்செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

144. இத்துடன் 2004–2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**வணக்கம்.**

* * *



சென்னையில், இன்போசிஸ் நிறுவனம் 129 ஏக்கர் பரப்பளவில் ரூ.1,250 கோடி முதலீட்டில் அமைக்கவுள்ள உலகின் மிகப்பெரிய மென்பொருள் மேம்பாட்டு மையத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 25.2.2004 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் அடிக்கல் நாட்டினார்கள்.



தமிழகம் ஒரு வேளாண்மை சார்ந்த மாநிலம். இதன் மக்கள்தொகையில் 70 சதவிகிதம் பேருக்கு வேளாண்மை தான் உயிர் நாடி. நிலத்தின் தேவை நாளுக்கு நாள் அதிகரிப்பதாலும் நிலத்தின் உரிமையாளர்களின் பயிரிடும் வழக்கம் ஒரே மாதிரியாக இருப்பதாலும், சராசரி மனிதனுக்கு உரிமையான நிலத்தின் அளவு நாளுக்குநாள் குறுகிக் கொண்டே போவதாலும்,விவசாயத்தை இலாபகரமான தொழிலாக செய்ய முடிவதில்லை. நமது நாட்டில் தற்போது உள்ள சூழ்நிலையில் தானிய கையிருப்பு, இயற்கை வளங்களை செம்மையான முறையில் பயன்படுத்துவது ஆகிய இரண்டு காரியங்களும் கவலைதரக்கூடிய விதத்தில் உள்ளன. இதன் காரணமாக, விவசாயத்தில் நாம் இடும் ஒவ்வொரு இடு பொருளுக்குத் தகுந்தவாறு உயரிய அளவில் நமக்கு விளைச்சல் அதிகரித்து அதிக வருமானத்தைஈட்டித் தரும் வகையில் தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. நமது தொலைதூரத் தேவைகளுக்கு மட்டுமன்றி உடனடித் தேவைகளுக்கும் இயற்கை வளங்கள் மீது உரிய மேலாண்மையை நாம் கடைபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் விரிவான தரிசு நிலத்திட்டம், வேளாண்மையில் தொடர்ச்சியான முன்னேற்றம் அடைவதற்கு அடிகோலும் முக்கியத் திட்டமாகும். நடைமுறையில் பாசனவசதி போதுமானதாக இல்லாமல் முற்றிலும் வான்மழையை நம்பியிருக்கிற நிலங்கள் மானாவாரி நிலங்கள் எனப்படுகின்றன. மழை பொய்த்துப்போகும் காலங்களில் இந்த நிலங்களின் விளைச்சல் வெகுவாக பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாது மழை குறைவாகக் கிடைக்கும்

# விரிவான தரிசு நிலத் திட்டம்

நிலங்களில் உற்பத்தி பாதிக்கப்படும் நிலங்கள் பொதுவாக தரிசு நிலங்கள் எனப்படுகின்றன. 5 ஆண்டுகளுக்கு மிகாமலும் ஓராண்டுக்குக் குறையாமலும் பயிர் செய்யப்படாத நிலங்கள் இதர தரிசு வகைப்படும்.

தமிழ்நாட்டில் இவ்வகை நிலங்கள் 12.28 இலட்சம் எக்டேர் பரப்பில் உள்ளன. அதாவது மொத்தப் பரப்பில் இவை 9.50 சதவிகிதமாகும். சென்ற ஆண்டில் பருவ மழை பொய்த்ததனால் தரிசு நிலங்களின் பரப்பு அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் சுமார் 7.80 சதவிகிதம் அதிகமாகும்.



பொதுவாக 800 மி.மீ மழையளவுக்கு மேல் மழைபெறும் இடங்கள் மானாவாரி நிலங்கள் எனவும், 800 மி.மீக்குக் குறைவாக மழைபெறும் இடங்கள் தரிசு நிலங்கள் எனவும் வகைப் படுத்தப்படுகிறது. தரிசு நிலங்களும் மானாவாரி நிலங்களும் தமிழகத்தின் மொத்த சாகுபடிப் பரப்பில் 60 முதல் 70 சதவிகிதம் உள்ளன. இத்தகைய நிலங்கள் மூலம் தமிழக உணவுத் தேவையில் சுமார் 45 சதவிகிதம் ஈடுகட்டப் படுகிறது. சோளம், கம்பு, சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவை

முக்கிய மானாவாரி பயிர்களாகும். தமிழகத்தின் மொத்தப்பரப்பான 130 இலட்சம் எக்டேர் பரப்பில் சுமார் 25.60 இலட்சம் பரப்பு (19.70%) நடப்புத் தரிசு, இதர தரிசு மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு வகையைச் சார்ந்ததாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறையின் திட்டங்களை ஆய்வு செய்தபோது 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை 5 ஆண்டுகளில் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முறையில் மேம்படுத்துவதற்காக 2001–02 ஆம் ஆண்டு ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். வேளாண்மை, மரம் வளர்ப்பு, பழத்தோட்டம் அமைத்தல், மேய்ச்சல் நிலங்களை உருவாக்குதல் போன்ற பன்முக வளர்ச்சிப் பணிகளை இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்த வழிவகுக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பழப் பண்ணைகள் உருவாவதோடு நீர் மேலாண்மைத் திட்டங்கள் மற்றும் உவர் மற்றும் அமிலத் தன்மையுடைய நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் செயல்படுத்தப்படவுள்ளன.



பொதுவாக, தரிசு நிலங்கள் பயிரிடப்படாமல் இருப்பதற்குக் காரணம் மண்ணில் குறைவான ஈரப்பசை உள்ளதும் மண்ணிலுள்ள சத்துக்கள் நலிவதுமே ஆகும். தமிழகத்தில் பொதுவாக அனைத்து வட்டாரங்களிலும் நிலத்தின் மேற்பரப்பிலுள்ள நீர் மட்டுமல்லாது நிலத்தடி நீரும் அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம் இவ்வகைத் தரிசு நிலங்கள் அமைந்துள்ள நீர்வடிப் பகுதிகள் மீது கவனம் செலுத்தாததேயாகும். பொதுவாக இவ்வகை நீர்வடிப் பகுதிகளை மேம்படுத்தும்போது நில உரிமையாளர்களின் நலன்கள் மட்டுமல்லாது நிலமற்ற ஏழை தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதுவே நமது நோக்கமாகும். மொத்த சமுதாயமும் பயனடையும் வகையில் இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. எனவே நீர்வடிப்பகுதி திட்டமானது ஒரு பன்முக சமுதாயத் திட்டமாகும். விரிவான தரிசு நிலத் திட்டத்தின் மூலம் உயர்நிலை தரிசு நிலங்களில் (ஓரளவு அதிக அளவில் மழை கிடைக்கும் தரிசுப் பகுதிகள்) மருத்துவ மற்றும் வாசனைப் பயிர்கள் பயிரிடுவதோடு பழப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. இடைநிலை தரிசு நிலங்களில் எண்ணெய் தரக்கூடிய மரங்களான ஜெட்ரோபா மற்றும் சொர்க்க மரம் பயிரிடப்படுகிறது. இதன்மூலம் உணவு எண்ணெய் மற்றும் எரிபொருள் கிடைக்க வாய்ப்புள்ளது. குறுநிலை தரிசு நிலங்களில் குறைவான மழையளவு கிடைப்பதனால் கருவேல் மற்றும் சவுக்கு மரங்கள் பயிரிடப்படுவதோடு அவற்றின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் எரிசக்தி தோட்டங்கள் அமைக்கப் படுகின்றன.

விரிவான தரிசு நிலத் திட்டத்தின் முக்கியமான நோக்கங்கள்:

1. நமது இயற்கை வளங்களை சமநிலைக்குக் கொண்டுவந்து அவற்றைப் பாதுகாப்பதன் மூலம் நமது தலைமுறையினரின் தேவைகளைச் சந்திப்பதுவே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம். அதுமட்டுமல்லாது சுற்றுப்புறச் சூழ்நிலைகளைக் கெடுத்து எதிர்கால சந்ததியருக்குப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொடுக்காமல் இருப்பதே நாம் செய்யும் தொண்டாகும்.

2. இயற்கை வளங்களைச் சீராகப் பயன்படுத்துவதற்கு தொழில்நுட்ப ரீதியாகச் சிறந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் இயற்கை வளங்களை சரியான வண்ணம் நிருவகிக்கும் திறமையை இத்திட்டம் கிராமத்தாருக்கு உருவாக்கிக் கொடுக்கிறது. இதன்மூலம் கிராமியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது தெளிவு.

3. மேலும் கிராம மக்களின் பரிபூரண ஒத்துழைப்பின்றி அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை சரியாக நிருவகிக்க இயலாது என்பது வெளிப்படையான உண்மையாகும். அதுபோலவே தனியார் வசம் உள்ள நீர் நிலை, நிலங்கள் ஆகிய இயற்கை வளங்களின் சரிவிகிதப் பயன்பாடும் தனிமனித முயற்சியால் மட்டுமே நடக்கக்கூடியது அன்று. இயற்கை வளங்களை மேலாண்மை செய்வதே சமுதாயத்தின் முக்கியப்பணியாகும். இது அவர்களுக்காக அவர்களால் மட்டுமே செய்யப்பட வேண்டிய பணி. எனவே பின்வரும் முக்கிய சமுதாய மேலாண்மைப் பணிகளான :

1. சமுதாய மக்களை ஒருமுகப்படுத்தி, இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்தல்.

2. மேலாண்மை நிருவாகத்தின் மூலம் கூட்டமைப்புகளை நிருவகிக்கும் திறமையை ஏற்படுத்துதல் ஆகியவையே விரிவான தரிசு நிலத்திட்டத்தின் சிறப்பம்சங்களாகும். திட்டச் செயலாக்க முகமைகள் கீழ்க்கண்ட முக்கியமான நடவடிக்கைகள் மூலமாக சமுதாய பங்கேற்புக்கு வழிசெய்கின்றன.



1. நுழைவுப் பணிகள் மூலம் மக்களின் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது.
2. கிராம முன்னேற்றத்திற்கான திட்டத்தை கிராம மக்கள் ஒத்துழைப்புடன் நிறைவேற்றுதல்.
3. கிராமப் பயனாளிகள் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் அமைத்தல்.
4. பயனாளிகள் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்களின் திறமையை மேம்படுத்துதல்.
5. திட்டப் பணிகளை பயனாளிகள் குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் மூலமாக கூடிய மட்டும் செயல்படுத்துதல்.
6. பிரச்சினைகளுக்குத் தீர்வு மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியன.

2001 ஆம் ஆண்டு முதல் 1.2.2004 முடிய இத்திட்டத்தின் கீழ் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் நிலப் பரப்புக்கும் மேல் பழக்கன்றுகளும், வனக்கன்றுகளும் நடப்பட்டுள்ளன. 2004–05 ஆம் ஆண்டில் 23 மாவட்டங்களில் 60,000 எக்டேர் (அதாவது 1,48,000 ஏக்கர்) பரப்பில் செடிகள் நட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு தரிசு நிலங்களை தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் திட்டத்தின் கீழ் 8 எக்டேர் மற்றும் 8 எக்டேர் நிலப்பரப்புக்கு மேல் உள்ள நிலங்கள் சுமார் 1054.06 எக்டேர் அளவில் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய உயர்மட்டக் குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள்

- இயற்கை வளங்கள் சீரழிவது தடுக்கப்படுவதோடு சமநிலைபடுத்தப்பட்டு மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது.
- இயற்கை வளங்களைச் சீராக்குவதற்காக எடுக்கப்படும் நிலமேம்பாட்டுப் பணிகள் அதிகமான இலைதழைகளை உருவாக்குகிறது. இதன்மூலம் இயற்கை உரம் அதிகமாகக் கிடைக்கிறது. இதனால் மண்வளம் காக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.
- மண்வளம் பாதுகாக்கப்பட்டவுடன் வேளாண் பணிகளின் தரம் மேம்படுகிறது. இதனால் பயிர் விளைச்சல் அதிகரிக்கிறது. மேலும் மாற்றுப்பயிர் திட்டங்களை செயல்படுத்த முடிகிறது.
- வளம் குன்றிய நிலங்களில் மரங்களும், தீவனப் பயிர்களும், பயிரிடப்படுவதனால் கிராம மக்களுக்கு வேண்டிய எரிபொருள், தீவனம், உணவு, நார் மற்றும் உரம் ஆகியவை கிடைக்கிறது. இதனால் கிராம வேலைவாய்ப்பு அதிகரிக்கிறது.
- வனப்பாதுகாப்புக்கு இடையூறுகள் குறைந்து வனவளம் மறுபடியும் தழைத்தோங்க நல்ல ஆரோக்கிய சூழல் உருவாகி நீர் ஆதாரங்களில் நீர்வரத்து அதிகரிக்கிறது. இதனால் நீண்ட காலத்துக்கு ஓடைகளில் நீர் பெறும் வாய்ப்பு உருவாகிறது.
- வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பதன் மூலம், வேளாண் சார்ந்த மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட வருமானம் அதிகரிப்பதோடு மக்களின் சேமிப்புத்திறன் அதிகரிக்கிறது.
- குடிநீர் ஆதாரங்கள் அதிகரித்தல், எரிபொருள், தீவனம் மற்றும் கச்சாப் பொருட்களின் உற்பத்தி ஆகியவை கிராம மக்களின் அடித்தள வாழ்க்கை முறையை மாற்றி அவர்களின் முன்னேற்றத்திற்கு குறிப்பாக கிராம மகளிர் மேம்பாட்டிற்கு வழிவகை செய்கிறது.
- விரிவான தரிசு நிலத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, இருக்கும் இயற்கை வளத்தை மூலதனமாக வைத்துக்கொண்டு அதிகமான உற்பத்தித் திறனை அடைவதுதான். அதற்காக இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாக உபயோகித்தல் என்பது இதற்கு அர்த்தமல்ல என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

**விரிவான தரிசு நிலத் திட்டத்தின் நோக்கமே பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் திறமையான உபயோகம் ஆகியவையே. இயற்கை வளங்களின் நிலையான மேலாண்மை என்பதற்கு, இயற்கை வளங்களை மேலும் நாசப்படுத்தாமல், மேம்பாடான உற்பத்திக்கு வழிகோலுதல் என்பதுவே பொருளாகும்.**

***– துணைத் தலைவர் மற்றும்***
***மேலாண்மை இயக்குநர்***
***தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை,***
***சென்னை.***



# தமிழ் தாத்தா உ.வே.சா. நினைவு இல்லம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

"தமிழ் தாத்தா'' என்று தமிழ் மக்கள் அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், அவர் பிறந்த ஊரான திருவாரூர் மாவட்டம் உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவகமாக ஆக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

1855 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாளன்று பிறந்த உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மாணாக்கர் ஆவார். திருவாவடுதுறை ஆதீனம் கும்ப கோணம் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி ஆகிய இடங்களில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய உ.வே.சாமிநாத அய்யர் தமிழ் மீதும், தமிழ் இலக்கியங்கள் மீதும் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றின் காரணமாக, ஓலைச் சுவடிகளில் இருந்த சங்கத் தமிழ் நூல்களையும், பழந்தமிழ்க் காப்பியங்களையும் தேடிக் கண்டுபிடித்து அவற்றை அச்சுக்கு கொண்டுவந்து காலத்தால் அழிந்து போகாமல் காப்பாற்றினார்.



இவ்வாறு தமிழுக்குத் தனிப் பெருமையும், தமிழ் இலக்கியங்களுக்கு ஒரு மறுமலர்ச்சியையும் உருவாக்கித்தந்த உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள அவரது உருவச் சிலைக்கு ஆண்டு தோறும் அவரது பிறந்த நாளில் தமிழ்நாடு அரசு சார்பில் மாலை அணிவிக்கப்பட்டு, மரியாதை செலுத்தப்படவேண்டும் என்று 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தான் ஆணை பிறப்பித்தார். இந்த ஆணையின்படி ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 19 ஆம் அன்று அவரது திருவுருவச் சிலைக்கு தமிழக அரசு சார்பாக மாலையணிவித்துச் சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. உ.வே.சாமிநாத அய்யர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் இதுவரையிலும் ஒரு நினைவகம் அமைக்கப் படவில்லை என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது.

தமிழுக்கு அரும்பெரும் தொண்டு செய்து, மகா மகோ பாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்ய கலாநிதி போன்ற பல பட்டங்களைப் பெற்று தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த உ.வே.சாமிநாத அய்யர் அவர்களது 150–ஆவது பிறந்தநாளை ஒட்டி அவரது நினைவைப் போற்றும் வகையில், அவர் பிறந்த ஊரான திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தை அரசுடைமையாக்கி, பழுது பார்த்து அதனை தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் நினைவு இல்லமாக அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். ★

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மொத்த சந்தா செலுத்துவீர்!

# 10வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**

| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 01. | தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. | வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. | அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. | தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. | அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. | இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. | காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. | மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. | தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. | மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.



Visit us at: www.cooptex.com    Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**


தமிழரசு
R.N.I. No. 21446/70
RGN No. TN/PMG(CCR)/836/03-05, WPP-518